XXV வது சோ.க.க. காங்கிரஸ்

மாஸ்கோ 1976



# சோவியத்துக்களின் பூமி இன்றும் நாளையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத்துகளின் பூமி இன்றும் நாளையும்

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின்
25வது காங்கிரஸ் பற்றி

இலங்கையிலுள்ள சோ. சோ. கு. ஒ. தூதரக
தகவல் பகுதியின் வெளியீடு
கொழும்பு 1976

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளடக்கம்


பக்கம்

முன்னுரை — 3

அனைத்தும் மனிதனுக்காகவே — 10

கடந்த ஐந்தாண்டுகளின் பெறுபேறுகள் — 13

ஒரு புதிய அத்தியாயம் — 19

மாபெரும் குறிக்கோள்கள் — 31

உலகத் தொழில்துறையில் ஐந்திலொரு பங்கு 31

இயற்கை நியதிகளை மீறி — 34

கட்சியின் பொருளாதார தந்திரோபாயம் — 38

அனைத்து நாடுகளினதும் மக்களினது நலனுக்காக 45

சமாதானத் திட்டத்தின் பெரு வெற்றி — 46

மேலும் போராட்டத்திற்கான திட்டம் — 60

சோவியத் சமுதாய வாழ்வில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி — 92

லெனினிய பாதையைப் பின்பற்றுதல் — 100



பிரகதி அச்சகம், 95/15, கொட்டா ரோட், கொழும்பு-8.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தவொரு நாட்டினது வாழ்விலும் பல வருடங்களுக்கு முன்னரே அதன் தலைவிதியை நிர்ணயிக்கும் நிகழ்வுகள் இடம் பெறுதுண்டு. சோவியத் ஒன்றியத்தில் இத்தகைய நிகழ்வுகள் கம்யூனிஸ்ட் கட்சியின் காங்கிரஸுகளே. **சோவியத் யூனியனது கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ், 1976 பெப்ரவரி 24ஆந் திகதி முதல் மார்ச் 5ஆந் திகதி வரை மாஸ்கோவில் நடைபெற்றது.** அதனது நடவடிக்கைகளும் முடிவுகளும் உலகம் முழுவதிலும் பரவலான வரவேற்பினைப் பெற்றுள்ளன,

# முன்னுரை

20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ரஷ்ய சமூக ஜனநாயக உழைப்பாளர் கட்சி (சோ. க. க. அப்போது இவ்வாறே அழைக்கப்பட்டது) ஸ்தாபிக்கப்பட்டபோது அதன் உறுப்பினராக பல ஆயிரக்கணக்கானோரே இருந்தனர். விளாடிமீர் லெனினே கட்சியின் ஸ்தாபகரும் தலைவருமாவார். 1917 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் லெனினது 350,000 ஆதரவாளர்கள் ரஷ்ய உழைப்பாளி மக்களை சோஷலிஸப் புரட்சிக்கு இட்டுச் சென்றனர். நாட்டின் ஜனத்தொகை 25 கோடியே 50 லட்சமாக இருக்கின்றபோது 156 லட்சத்து 94 ஆயிரம் கம்யூனிஸ்டுகளை 25 வது கட்சிக் காத்கிரஸுக்கான பிரதிநிதிகள் பிரதிநிதித்துவப் படுத்தினர்.

70 க்கும் சிறிது அதிகமான ஆண்டுகளில் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்கு ஒருவகை ஒத்திகையாக அமைந்த 1905 - 7ல் நடந்த புரட்சி, ஸாரிஸத்தை ஒழித்துக்கட்டிய 1917 பெப்ரவரியில் நடைபெற்ற புரட்சி, மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி ஆகிய மூன்று புரட்சிகளையும், முதலாம் உலகப் போரின் (1914 - 1918) கடுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதனைகளையும், உள்நாட்டுப்போரையும் (1918 - 20), நாஜிகளின் ஆக்கிரமிப்பையும், சோஷலிஸத்தை நிர்மாணிக்கும் தளரா முயற்சிமிக்க தசாப்தங்களையும் கொண்ட நீண்ட பாதையில் கட்சி பயணஞ் செய்துள்ளது. இன்று நாட்டில் கம்யூனிஸ சமுதாயத்தினை நிர்மாணிக்கும் வழி காட்டும் சக்தியாக சோவித் கம்யூனிஸ்ட் கட்சி விளங்குகின்றது.

கம்யூனிஸம் என்னும்போது சோவியத் மக்கள் விளங்கிக்கொள்வது என்ன?

''உற்பத்திச் சாதனங்களை ஒரு வடிவமான பொதுச் சொத்துடைமையாகவும், சமுதாயத்தின் அனைத்து உறுப்பினர்களும் முழுமையான சமூக சமத்துவத்தையும் கொண்டதுமான வர்க்கமற்ற சமூக அமைப்பே கம்யூனிஸமாகும். இதன் கீழ், விஞ்ஞான, தொழில்நுட்பத்தின் தொடர்ச்சியான முன்னேற்றத்தின் மூலமாக உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியோடு மக்களின் சர்வாம்ச அபிவிருத்தி இணைந்து செல்லும்; கூட்டுச் செல்வத்தின் அனைத்து ஊற்றுக்களும் அதிவேகமாக பிரவகிக்கும்; ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் ஆற்றலுக்கு ஏற்பவும், ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்பவும்'' என்ற மாபெரும் கோட்பாடு செயல்படுத்தப்படும். சுதந்திரமான, சமூக உணர்வுள்ள உழைக்கும் மக்களை அதிகமாக அணிதிரட்டிய சமுதாயமே கம்யூனிஸமாகும்; இதில் பொது மக்களின் சுய - அரசாங்கம் ஸ்தாபிக்கப்படும்; இச் சமுதாயத்தில், சமுதாயத்தின் நன்மைக்கான உழைப்பே ஒவ்வொருவரினதும் முக்கிய தேவையாகும்; மக்களின் மாபெரும் நல்வாழ்வுக்காக ஒவ்வொரு நபரின் ஆற்றலையும் பயன்படுத்துவதன் அவசியமானது அனைவராலும் அங்கீகரிக்கப்பட்டதாகும்.'' 1961ம் ஆண்டு நடைபெற்ற கட்சியின் 22வது காங்கிரஸில் அங்கீகரிக்கப்பட்ட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத்திட்டத்தில் இது வரையப்பட்டுள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோ. க. க. காங்கிரஸே (ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை காங்கிரஸ்கள் நடைபெறும்) கட்சியின் அதியுயர் அமைப்பும் அதன் கூட்டுத் தலைமையுமாகும். காங்கிரஸின் முடிவுகள் எல்லா ஸ்தாபனங்களுக்கும், கட்சி உறுப்பினர்களுக்கும் கட்டாயமானதாகும். அதை ரத்து செய்யவோ மாற்றவோ எவராலும் முடியாது. காங்கிரஸ் மட்டுமே, அது ஏற்றதெனக் கருதினுல் அவ்வாறு செய்யலாம்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி, ஆளும் கட்சியாக இருப்பதால் நாட்டின் உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கையின் அடிப்படைப் பிரச்னைகளை விவாதிக்கிறது, தீர்மானிக்கிறது. கம்யூனிஸ்டுகள் தமது கூட்டு அனுபவத்தினை காங்கிரஸ்களுக்குக் கொணர வேண்டுமென லெனின் போதித்தார். சோவியத் கம்யூனிஸ்டுகள் லெனினது ஆணையைப் பிறழாது பின்பற்றுகின்றனர்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரஸ்களின் செய்திகள் விஸ்தாரமாக வெளியிடப்படுகின்றன. உதாரணமாக, கட்சி உறுப்பினர்களும், கட்சியிலில்லாத மக்களும் ஆரம்ப விவாதம் நடத்துவதற்காக, காங்கிரஸ்களின் முக்கிய தஸ்தாவேஜுக்களின் நகல்களைப் பிரசுரிப்பது ஏற்றுக்கொண்டதோர் வழமையாகியுள்ளது. அவ்வாறு 25வது கட்சிக் காங்கிரஸில் விவாதிக்கப்பட்ட ஒரு தஸ்தாவேஜான ''சோவியத் ஒன்றியத்தின் 1976-80 க்கான தேசிய பொருளாதார வளர்ச்சிக்குரிய வழிகாட்டிகள்'' காங்கிரஸ் ஆரம்பமாவதற்கு இரண்டு மாதங்களுக்கு முன்னரே உள்ளூர், மற்றும் மத்திய செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்டன, ஒலிபரப்பப்பட்டன, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் விளக்கப்பட்டன. இதைத் தொடர்ந்து நடந்த கலந்துரையாடலில் கட்சி உறுப்பினர் மட்டுமன்றி, வயதுவந்த அனைவருமே கலந்து கொண்டனர்.

நாட்டு வாழ்வில் முடிவுகளை எடுப்பதில் ஒவ்வொரு உழைப்பாளியையும் பங்குகொள்ளச் செய்யும் சோவியத் ஜனநாயகம் இல்வாறே பணியாற்றுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் எல். ஐ. பிரெஷ்னேவ் கூறினர்; "சமுதாயத்தின் அனைத்து விவகாரங்களையும் நடாத்துவதில் உழைக்கும் மக்களின் முழுமையான பங்கேற்பை உறுதிசெய்யும் நிலையான முயற்சியிலும் எமது அரசாங்க அமைப்பில் ஜனநாயகக் கோட்பாடுகளை மேலும் வளர்ப்பதிலும், தனி நபரின் சர்வாம்ச செழுமைக்கான சூழ்நிலையை உருவாக்குவதிலும் எமது சோஷலிஸ ஜனநாயகத்தின் அபிவிருத்தியினை நாம் காண்கின்ருேம். இந்த நோக்கிலேயே எமது கட்சி பணியாற்றியுள்ளது; எதிர்காலத்திலும் தொடர்ந்து பணியாற்றும்."

சோவியத் சமுதாயத்தின் வாழ்வில் கட்சி காங்கிரஸுகள் எத்தகைய அதி உன்னதமான இடத்தை வகிக்கின்றன என்பதை நன்கு விளங்கிக் கொள்ளும் பொருட்டு—14வது, 15வது காங்கிரஸ்களை நினைவுபடுத்திப் பார்ப்போம்.

1925ம் ஆண்டில் 14வது காங்கிரஸ் நடைபெற்றது. அது, சோஷலிஸத்தை நிர்மாணிப்பதற்கான அத்தியாவசிய பொருளாதார சூழ்நிலையாக இருந்ததால், நாட்டைத் தொழில்மயப்படுத்தும் பாதையினை அங்கீகரித்நது. சோவியத் ரஷ்யா, ஸாரிஸத்திடமிருந்து ஒரு பின்தங்கிய பொருளாதாரத்தைப் பிதுரார்ஜிதமாகப் பெற்றது; இது முதலாம் உலகப் போர், உள்நாட்டுப் போர் காலங்களில் மேலும் சீர்குலைந்தது. பொருளாதார சுதந்திரத்தையும், தற்காப்புச் சக்தியையும் உத்தரவாதப்படுத்தவும், மக்களது பாவனைப் பொருட்களின் தேவையை நிவர்த்திக்கவும், பலம் பொருந்திய ஒரு கைத்தொழில் வல்லரசாக சோவியத் ஒன்றியம் மாற வேண்டி இருந்தது. இதைச் சாதிப்பதற்கான பாதையை லெனின் வகுத்தார்; குறிப்பாக மின்மயப்படுத்தலினதும், கனரகத் தொழிலினதும் தீர்க்கமான பணியினை அவர் வலியுறுத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மாபெரும் பணிகளை நிறைவேற்றுவதில் சோவியத் மக்கள் வெற்றி பெற்று விட்டனர் என்பதை உலகு நன்கறியும்.

பண்ணைத் தொழிலில் கூட்டுறவு மயமான வளர்ச்சியைப் பிரகடனப்படுத்தியது 15வது காங்கிரஸாகும் (1927). இதுவும் லெனினது கட்டளையின் பேரிலேயே செய்யப்பட்டது. சோஷலிஸத்தை நிர்மாணிப்பதற்கு தொழில்மயப்படுத்தல் எத்தகைய அவசியமிக்கதோ அதைப்போன்றதே கூட்டுறவு மயப்படுத்தலும் என லெனின் நம்பினார்.

சிறுய விவசாயிகளின் நிலங்களை பரந்த அளவிலான சோஷலிஸ உற்பத்தி நிறுவனங்களாக மாற்றுவது, விருப்பு அடிப்படையிலான ஒத்துழைப்பின் மூலம் செயற்படுத்தப்பட்டது.

கூட்சிக் காங்கிரஸுகள், கட்சியில் பணியாற்றுவோரின் அமர்வுகளேயன்றி வேறெதுவுமில்லை என சோவியத் யூனியனின் எதிரிகள் குற்றஞ் சமத்துகின்றனர். கடந்த கட்சிக் காங்கிரசுக்கான பிரதிநிதிகளின் கட்டமைவைப் பரிசீலிப்போம். 2998 பிரதிநிதிகளில் 1310 தொழில்துறை தொழிலாளர்கள் உட்பட சோஷலிஸ தொழில்துறையிலுள்ள 1703 உழைக்கும் மக்கள் இருந்தனர். 887 பேர் விவசாயத்திலீடுபட்டவர்கள். இலக்கியம், கலை, சௌக்கிய சேவை மற்றும் கல்வித் துறை தொழிலாளர்கள் 272 பேர்; விஞ்ஞானிகள் 545 பேர்; நிர்வாகத் தொழிலாளர்கள், தொழிற்சங்கங்கள், இளம் கம்யூனிஸ்ட் கழகத்தில் பணிபுரிவோர் 693 பேர்; படைவீரர்கள் 314 பேர்.

பிரதிநிதிகளின் மொத்த எண்ணிக்கையில் 3672 பேர், முதன்முறையாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள்; பெண் பிரதிநிதிகள் 1255 பேராகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸின் நிகழ்ச்சி நிரலில் பின்வரும் அம்சங்களும் இருந்தன:

(1) சோ. க. க. மத்தியக் கமிட்டி அறிக்கையும், உள்நாட்டு வெளிநாட்டுக் கொள்கையில் கட்சியின் உடனடிக் கடமைகளும். பேச்சாளர் — லியோனிட் பிரெஷ்னேவ், பொதுச் செயலாளர், சோ. க. க. வின் மத்தியக் கமிட்டி;

(2) சோ. க. க. மத்திய கணக்குப் பரிசோதனைக் கமிஷனின் அறிக்கை;

(3) 1976—1980 க்கான சோவியத் ஒன்றியத்தின் தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கான வழிகாட்டிகள், —பேச்சாளர் — அலெக்ஸி கொஸிஜின், சோவியத் ஒன்றியத்தினது அமைச்சரவைத் தலைவர்;

(4) கட்சியின் மையஅமைப்புகளுக்கான தேர்தல்.

காங்கிரஸின் பணிகளில், 96 நாடுகளைச் சேர்ந்த கம்யூனிஸ்ட், உழைப்பாளர், தேசிய—ஜனநாயக, சோஷலிஸக் கட்சிகளின் நூற்றிமூன்று தூதுக் குழுக்கள் பங்குபற்றின. ஒரு சோ. க. க. காங்கிரஸில், முன்னெப்போதும் இத்தகைய பெருமளவு எண்ணிக்கையுள்ள நட்புறவுத் தூதுக் குழுக்கள் பங்குபற்றியது கிடையாது.

வெளிநாட்டு விருந்தினர்களிடையே, கம்யூனிஸ்ட், உழைப்பாளர், தேச விடுதலை இயக்கங்களின் புகழார்ந்த பிரமுகர்களும் இருந்தனர். அவர்கள், காங்கிரஸில் உரைநிகழ்த்தியதோடு, நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலுள்ள நிறுவனங்களில் பணியாற்றும் மக்களையும் சந்தித்தனர்.

சர்வதேச புரட்சிகர, ஜனநாயக இயக்கத்தின் பிரதிநிதிகள், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும், சோவியத் அரசாங்கத்தினதும் உள்நாட்டு, வெளிநாட்டுக் கொள்கையினை உயர்வாகப் பாராட்டியதோடு, 25வது காங்கிரஸின் மாபெரும் சர்வதேச முக்கியத்துவத்தையும் சுட்டிக்காட்டினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாவோஸ் மக்கள் புரட்சிகரக் கட்சியின் பொதுச் செயலாளரும், லாவோஸ் மக்கள் ஜன நாயகக் குடியரசின் பிரதமருமான காம்ஸோனே ஃபோம் விஹான், சோவியத் கம்யூனிஸ்ட்டுகளின் மேடையில் நின்று கூறியதாவது:

''தேசியப் பொருளாதார வளர்ச்சியிலும் கம்யூனிஸத்திற்கான பொருளாயத, கலாசார அடிப்படைகளை உருவாக்குவதிலும் நாட்டின் தற்காப்பு சக்தியினை வலுப்படுத்துவதிலும் மக்களின் கலாசார, பொருளாயத தரத்தினை உயர்த்துவதிலும் சோவியத் யூனியனின் சாதனைகள் அக்டோபர் புரட்சி நடத்திய நாட்டின், மாமேதை லெனினின் நாட்டின் வல்லமையினது நிலையான வளர்ச்சியை உறுதி செய்துள்ளன.

''மதிப்புக்குரிய தோழர் எல். ஐ. பிரெஷ்னேவினால் தலைமைத்தாங்கப்படும் புகழ்பூத்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியக் கமிட்டியினது சரியான தலைமையின் கீழ் சோவியத் மக்களின் புரட்சிகர வீரத்தாலும், ஆக்கபூர்வமான முயற்சியாலும் இந்த உன்னத முன்னேற்றம் அடையப்பட்டுள்ளது; சோவியத் யூனியன் வளமிக்க, சக்திமிக்க சோஷலிஸ நாடாக மாறியுள்ளது. அதன் சர்வதேச கௌரவம் மேலும் அதிகமாக உயர்ந்துள்ளது; சோவியத் யூனியனின் வளர்ந்து வரும் வலிமையானது உலக சோஷலிஸ அமைப்பை பலப்படுத்துவதை உத்வேகப்படுத்துகிறது: மானிட இனத்தின் வளர்ச்சியை நிர்ணயிக்கும் காரணியாக இந்த அமைப்பின் பங்கு அதிகரித்து வருகிறது. அது ஏகாதிபத்தியவாதிகளின் திட்டங்களைத் தடுத்து நிறுத்துகிறது. தேச விடுதலை இயக்கத்தினதும் சர்வதேச தொழிலாளர் இயக்கத்தினதும் வளர்ச்சிக்கான சக்திமிக்க உந்து சக்தியாக அது பணியாற்றுகிறது. அதற்கும் மேலாக ஐரோப்பிய மற்றும் உலக சமாதானத்தின் நோக்கங்களுக்காக அது பணியாற்றுகிறது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனைத்தும் மனிதனுக்காகவே

1976, பெப்ரவரி 24ஆம் திகதி, கட்சியின் 25வது காங்கிரஸுக்காகப் பிரதிநிதிகள் கிரெம்ளினில் கூடியபோது, முதலாவதாகக் கடந்த தசாப்தத்தில் நாட்டினது வளர்ச்சியின் பலாபலன்களை மதிப்பீடு செய்து, 24வது காங்கிரஸின் ஆணைகள் எவ்வாறு நிறைவேற்றப்பட்டுள்ளதென்பதையும் ஆராய்ந்தனர்.

லியோனிட் பிரெஷ்னேவ் கூறினார்; ''முன்னைய 24வது காங்கிரஸ் பல மிகப்பெரிய அடிப்படைக் கடமைகளை முன்வைத்தது. இக் கடமைகளை எவ்வாறு செயற்படுத்தியுள்ளோம், எத்தகைய சாதனைகளை ஈட்டியுள்ளோம் என்பதை அறிந்துகொள்கையில் நாம் தெரிந்தெடுத்த பாதை சரியானதே என நாம் துணிந்து கூறமுடியும்.

''உள்நாட்டுக் கொள்கையில், வெகுஜனங்களின் நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு முதலிடம் அளிக்கும் லெனினின் ஆணைகளுக்கு விசுவாசமாக, மக்களின் வாழ்க்கைத் தரத்தையும், கலாசார மட்டத்தையும் கணிசமான அளவு உயர்த்துவதை உறுதிசெய்யும் கடமையினை காங்கிரஸ் முன்வைத்தது. விஞ்ஞான, தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் சமூக உற்பத்தித் திறனைக் கணிசமான அளவு அதிகரிப்பதன் மூலமும், உழைப்பு உற்பத்தி வளர்ச்சியை விரைவுபடுத்துவதாலும் இதை சாதிக்க முடியுமென்ற வழியையும் அது காட்டியது.

''இவ்வழியைப் பின்பற்றி, பொருளாயத, தொழில்நுட்ப அடிப்படையில் கம்யூனிஸத்தை நிர்மாணிக்கும் புதிய எல்லைகளை நாம் எட்டியுள்ளோம். எமது தாயகத்தின் வல்லமை அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் மக்கள் பொருளாயத ரீதியில் சிறப்பாகவும், தார்மீகத்தில் செழிப்பாகவும் உள்ளனர். எம்மைப் பொறுத்தவரை கேள்விக்கிடமற்றவகையில் இது முக்கியமானதாகும்.''

மக்களின் தேவைகளை முழுமையாகத் திருப்தி செய்வதே சோஷலிஸத்தின் உயர் இலட்சியம் என சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி எப்போதும் கருதிவந்துள்ளது. உண்மையிலேயே, சோவியத் அரசாங்கத்தின் ஆரம்ப காலங்களில் இதைச் சாதிப்பது அவ்வளவு எளிதான கடமையாக இருக்கவில்லை. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளை விட தனது அபிவிருத்தியில் மிக மிகப் பின் தங்கியுள்ள, ஒரு நாட்டில் வரலாற்றுச் சூழ்நிலைகளின் உண்மைத்துவத்தால் சோஷலிஸம் வெற்றி பெற்றது. உதாரணமாக, 1913ஆம் ஆண்டில் நபர் விகித தொழில் துறை உற்பத்தி ரஷ்யாவில் ஐக்கிய அமெரிக்காவை விட 14 மடங்கு குறைவாக இருந்தது. முதலாவது உலகப் போராலும், உள்நாட்டுப் போராலும் ஏற்பட்ட சீர்குலைவால், இந்த இடைவெளி 33 மடங்குகளாக அதிகரித்தது.

இருப்பினும், சோஷலிஸ நாடு தனது வாழ்வின் ஆரம்ப காலத்திலேயே தனது மக்ளின் வாழ்க்கையை அபிவிருத்தி செய்வதற்காகப் பெரும் பணியாற்றியது. இலவச மருத்துவ சேவையையும் பாடசாலைக் கல்வி, பல்கலைக்கழகக் கல்வி உட்பட இலவசக் கல்வியும் அறிமுகஞ் செய்யப்பட்டன. 1930ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிக்கப்பட்டது.

நாஜி ஜெர்மனியின் தாக்குதலானது சோவியத் மக்களின் சமாதான உழைப்பைத் தகர்த்தது. தம்மிடமுள்ள எல்லா சாதனங்களையும், வளங்களையும் எதிரியை முறியடிப்பதற்காகப் பயன்படுத்தவேண்டி இருந்தது. போர் சொல்லொண்ணாத் துயரத்தைக் கொணர்ந்தது. ஆயிரக்கணக்கான நகரங்களும், கிராமங்களும் அழிந்தொழிந்ததோடு, 2 கோடிக்கு மதிகமான மனித உயிர்களையும் சோவியத் யூனியன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இழந்தது. பாஸிஸத்தின் மீது மாபெரும் வெற்றியை ஈட்டிய பின்னர், சீரழிந்த பொருளாதாரத்தைப் புனரமைப்பதற்காக பகீரத முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டி ஏற்பட்டது. அக்காலம் மிகப் பெரியபணிகளை ஆற்றவேண்டிய காலமாக உண்மையிலேயே திகழ்ந்தது. இருந்த போதிலும், மக்களின் வாழ்வை எளிதாக்க கட்சி தன்னாலான வற்றை எல்லாம் செய்தது. சோவியத் மக்களின் நல்வாழ்வு ஆண்டுக்காண்டு அபிவிருத்தியடைந்து வந்தது.

சோவியத் யூனியனில், சில உணவுப் பொருட்களின் நபர்விகித சராசரி பாவனை, நீடித்த உழைப்புக்கான பொருட்களின் சராசரி ஏற்பாடுகள், நபர் விகித தேசிய வருமானத்தின் சராசரி தொகை ஆகியன, மிகவும் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளை விட இன்னும் ஓரளவு குறைவாகவே உள்ளதென்பதை சோவியத் ஒன்றியத்திலுள்ள எவரும் ரகசியமாக வைத்திருக்கவில்லை. சராசரி பாவனை, அல்லது நபர் விகித தேசிய வருவாயின் சராசரி தொகை ஆகியவற்றைக் கருத்திலெடுத்துக் கொள்கையில் தினசரி வாழ்வின் சில முக்கியமான அம்சங்களைப் பற்றி ஒருவர் மறந்துவிட முடியாது.

ஒரு முதலாளித்துவ சமுதாயத்தில், ஏழைக்கும் பணக்காரனுக்குமிடையிலான இடைவெளியை சராசரி எண்ணிக்கைகள் மறைத்து வைக்கின்றன என்பது தெரிந்ததே. பணக்கார முதலாளித்துவ நாடான அமெரிக்காவில், ஜனத்தொகையில் அரைவாசியினர் கொண்டுள்ள செல்வத்தை விட, எட்டு மடங்கு அதிகமான செல்வத்தை ஒரு சதவீதமான அமெரிக்கர்கள் கொண்டுள்ளனர். சோவியத் யூனியனில் நிலை முழுவதும் வித்தியாசமானதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடந்த ஐந்தாண்டுகளின் பெறுபேறுகள்

மற்றவர்கள் எவ்வாறு வாழ்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ள, சம்பளங்கள், விலைகள் ஆகியன பற்றி மக்கள் வழமையாகக் கேட்பார்கள்.

சோவியத் யூனியனில் கடந்த ஐந்தாண்டுகளில் (1971—1975) 7 கோடியே 50 லட்சத்திற்கதிகமான மக்கள் உயர்ந்த சம்பளத்தைப் பெற்றனர்; அதே வேளையில், பாவனைப் பொருட்களின் சில்லறை விலைகள் மாறாத நிலையிலேயே இருந்தன. சில பாவனைப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுமுள்ளன.

தொழில்துறை, அலுவலகத் தொழிலாளர்களின் சம்பளங்கள், ஊதியங்களில் 20 சத வீதம் அதிகரிக்கப்பட்டுள்ளன. கூட்டுப்பண்ணை விவசாயிகளின் வேலைக்கான ஊதியம் 25 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

எனினும் சோவியத் யூனியனில் மக்களின் நல்வாழ்வானது ஊதியங்கள், சம்பளங்களில் மட்டும் தங்கிநிற்கவில்லை. இந்நாட்டில் வருமானத்திற்கான மற்றுமோர் வழியும் உள்ளது. அது சமூகப் பயனீட்டு நிதிகளாகும். இவை, இலவசக் கல்வியை, இலவச சௌக்கிய சேவையை வழங்க, பாடசாலைக்குச் செல்லுமுன் குழந்தைகளைப் பராமரிக்கும் நிறுவனங்களை நடாத்த, ஆரோக்கிய ஸ்தலங்கள், விடுமுறை ஸ்தலங்கள் ஆகியவற்றைப் பேண, வயது முதிர்ந்தோருக்கு ஓய்வூதியம் வழங்க, மாணவருக்கு உதவிநிதி அளித்திட, தொழிலாளர்கள், கூட்டுப்பண்ணை விவசாயிகள், அலுவலக ஊழியர்கள் ஆகியோருக்கு விடுமுறை வழங்கிட, வீடமைப்பு நிர்மாணம், பராமரிப்பு ஆகியன போன்றவற்றை செய்திட அரசாங்க வரவு—செலவுத் திட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டத்தில் ஒதுக்கீடு செய்யப்படுபவற்றில் ஒரு பகுதியாகும். கடந்த பதினைந்து ஆண்டுகளில் இந்த நிதிகள் மூன்று மடங்குக்கும் அதிகமாக உயர்ந்துள்ளன. தற்போது, சமூகக் கொடுப்பனவுகள் காரணமாக ஒவ்வொரு குடும்பத்தினதும் வருவாய் 50 சதவீதத்தால் உயர்ந்துள்ளது; ஒரு குடும்பம் சம்பளமாகப் பெறுவதில் அரைவாசியை மேலதிகமாகப் பெறுகிறது.

உண்மையிலேயே, வேலையின் தரம், அளவு ஆகியவற்றுக்கேற்ப வாழ்க்கை வசதிகளைப் பங்கிடுவதே சோவியத் ஒன்றியத்தினது ஜனத்தொகையின் வருவாய்களை உருவாக்குவதற்கான முக்கிய கோட்பாடாக இருந்து வருகிறது. இக் கோட்பாடு முற்போக்கானதாயினும், பாவனை மட்டத்தின் சமத்துவமின்மையை அதால் அழித்தொழிக்க முடியாது. பங்கீட்டிற்கான ஒரே கோட்பாடாக உழைப்புக்காக வழங்கப்படும் ஊதியம் இருந்தாலும், சமமான சம்பளமாக இருப்பினும் உண்மையான வாழ்க்கைத் தரமானது, சம்பாதிப்போரினதும், குடும்பத்தில் அவர்களைச் சார்ந்திருப்போரினதும் எண்ணிக்கையிலேயே தங்கி நிற்கவேண்டும். சமுதாயம் முழுமைக்கும் ஒவ்வொருவரின் நலன்களுக்கும் பொருத்தமானவகையில், வித்தியாசமான வருவாய்களையுடைய குடும்பங்களின் பயனீட்டு மட்டத்தை சமூக நிதிகளைப் பயன்படுத்துவதன் மூலம், சோஷலிஸ சமுதாயம் சமப்படுத்துகிறது.

இளம் மக்கள் தேசவியாபக நடுநிலைக் (10 அண்டு) கல்விக்கு மாற்றம் பெறுவதை முக்கியமாகச் செயற்படுத்த 1975 ஆம் ஆண்டில் இந் நிதிகள் சாத்தியமாக்கின. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் போது, ஒரு கோடியே 90 லட்சம் ஆண்களும் பெண்களும் நடுநிலைக் கல்வியைப் பெற்றனர். 79 லட்சம் மாணவருக்கான பாடசாலைக் கட்டிடங்கள்—அரைவாசிக்கு மதிகமானவை கிராமப்புறங்களில்—கட்டப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரஸில், ஸ்டாவ்ரோபோல் எல்லைப் பிரதேசத்தின் (வட காகஸஸ்) ஒரு கிராமப் பாடசாலை ஆசிரியையான ஒல்கா குட்ஸோவா இவ்வாறு கூறினார்:

"ஒரு பாடசாலை ஆசிரியையான எனக்கு குறிப்பாக, பொதுக் கல்வித் துறையில் ஏற்பட்ட உன்னதமான மாற்றங்களே நினைவுக்கு வருகின்றன. சோவியத் மக்களின் ஒரு தலைமுறையினரின் வாழ்வில், அறிவையும், கலாசாரத்தையும் நோக்கிய துரிதமான முன்னேற்றம் இடம் பெற்றதை எம் கண் முன்னாலேயே காண்கின்றோம்.

"எனவேதான் சோவியத் பள்ளியின் மீதும் சோவியத் ஆசிரியன் மீதும் உண்மையான தந்தையின் மித மிஞ்சிய கவனத்தைச் செலுத்துவதற்கும், எமது "சலுகை பெற்ற ஒரே வர்க்கமான" சோவியத் நாட்டின் குழந்தைகள் மீது தாயன்பையும் கவனத்தையும் இடையறாது செலுத்துவதற்குமாக எமது கட்சிக்கும், அரசாங்கத்திற்கும், லெனினிய மத்தியக் கமிட்டிக்கும் ஏறத்தாழ 30 லட்சம் ஆசிரியர்களும் போதனையாளர்களுமான நாங்களனைவரும் சொந்த முறையில் நானும் மனமார்ந்த நன்றிகூற விசேட காரணம் உள்ளது."

800,000 மருத்துவர்கள் சோவியத் பிரஜைகளின் சௌக்கியத்தில் கவனஞ் செலுத்துகின்றனர். உலக ஜனத்தொகையில் ஆறு சத வீதத்தை மட்டுமே சோவித் யூனியன் கொண்டிருந்த போதிலும், உலகிலுள்ள மருத்துவர்களின் மொத்தத் தொகையில் இது கால்வாசியாகும். ஒரு சோவியத் பிரஜை வெளி நோயாளர் மருத்துவ மனைக்குச் செல்லும்போதோ அல்லது ஒரு மருத்துவரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கும் போதோ தனது பணப்பையில் கவனஞ் செலுத்த வேண்டியதில்லை. இலவச மருத்துவ சேவையோடு மட்டுமன்றி, நோயாளியான ஒருவர் தற்காலிகமான செலவுப்படியையும் பெறுகிறார்; பெரும்பான்மையான உழைக்கும் மக்களுக்கு இது அவர்களின் சம்பளத்தில் 100 சதவீதமாக இருக்கும்.

முன்னர் குறிப்பிட்டதைப் போல, வருடாந்த விடுமுறைகள் ஆரோக்கிய ஸ்தலங்கள், விடுமுறை இல்லங்களுக்கான பற்றுச் சீட்டுக்கள் இலவசமாக அல்லது உதவித் தொகைகளில் வழங்கப்படுகின்றன; இவை சமூகப் பயனீட்டு நிதியால் நிறைவு செய்யப்படுகின்றன. ஆண்டுதோறும் சுமார் 4 கோடியே 80 லட்சம் உழைக்கும் மக்களும், அவர்களின் குடும்பத்தவர்களும் ஆரோக்கிய ஸ்தலங்கள் விடுமுறை இல்லங்கள், உல்லாசக் கேந்திரங்களில் இடவசதியைப் பெறுகின்றனர்.

வெகுஜனங்களுக்கு நல்ல வீட்டு வசதியை ஏற்பாடு செய்வதும், வாழ்க்கைத் தரத்தினைத் வெளிப்படுத்தும் மிகப்பெரிய அம்சமென்பது தெளிவு. இப் பிரச்னையில் அரசு எப்போதுமே அதிக கவனஞ் செலுத்தி வருகிறது; ஆனல் ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் வீடமைப்பு நிர்மாண வீதம் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது-54 கோடி 40 லட்சம் சதுர மீட்டர்களில் இந் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக 5 கோடியே 60 லட்சம் மக்களின், அல்லாது நாட்டின் ஜனத்தொகையில் ஐந்திலொரு பங்கினரின் வீட்டு நிலைமைகள் அபிவிருத்தி செய்யப்பட்டன.

வாடகையைப் பொறுத்தவரை, அது 1920-ம் ஆண்டு முதல் இன்றுவரை அதே நிலையிலேயே உள்ளது. குடும்ப வரவு-செலவில் உண்மையிலேயே சராசரி 3 சதவீதமாக வாடகையிருப்பது இப்போது வழமையாகிவிட்டது. வீடமைப்பு நிர்மாணத்திற்கான அரச செலவினங்களையோ, குடியிருப்பு கட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புடங்களைப் பேணுவது சம்பந்தமான செலவினங்களையோ இத்தொகைகள் நிவர்த்திப்பதில்லை. மீதிச் செலவை அரசே ஏற்றுக்கொள்கிறது.

வேலைசெய்ய முடியாதோரையும், குழந்தைகளையும், ஊனமுற்றோரையு, வயது முதிர்ந்தோரையும் பேணுவதற்காக பெருந்தொகை நிதியினை அரசு ஒதுக்கீடு செய்கிறது. சுமார் ஒரு கோடியே 10 லட்சம் குழந்தைகள், பள்ளி செல்வதற்குமுன்னர் நிறுவனங்களால் பராமரிக்கப்படுகின்றனர். ஒரு பிள்ளையைப் பேணுவதற்கான மொத்தச் செலவில் 20 சத வீதத்தையே பெற்றோர் செலுத்துகின்றனர். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் போது, ஓய்வூதியங்கள், செலவுப்படிகள், உதவிப்படிகள் ஆகியனவற்றை அதிகரித்தமை, 4 கோடி மக்களின் வருமானத்தை உயர்த்துவதைச் சாத்தியமாக்கியது.

கடந்த ஐந்தாண்டுகளின் போது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளால் (எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தை விட 1.7 மடங்கு அதிகமான பணத்தை அரசு ஒதுக்கியது, நபர் வீத மெய்யான வருமானம் 24 சதவீதத்தால் உயர்ந்தது. இத்தகைய வீதங்களை சோவியத் ஒன்றியம் முன்னெப்போதும் கண்டதில்லை.

கூடிய வருவாய்கள், பாவனைப் பொருட்களின் தட்டுப்பாட்டைக் கூட்டின. புள்ளிவிபரங்களின்படி ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் வர்த்தகத்தின் அளவு 36 சதவீதத்தால் அதிகரித்தது.

இது சம்பந்தமாகப் பயனீட்டு அமைப்பை ஆராய்வது ஆர்வந் தருவதாகும். எந்தப் பொருட்களின் தேவை அதிகமாக உள்ளது, எப்பொருட்களின் தேவை குறைவாக உள்ளது என்பதே அது. வீட்டுப் பாவனைக்கும் நீடித்த உழைப்புக்குமான பொருட்களான தளவாடப் பொருட்கள், தொலைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்சி பெட்டிகள், சலவை இயந்திரங்கள்' காற்றை வெளியேற்றும் பொறிகள், மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், கார்களே அண்மை ஆண்டுகளின் பட்டியலில் முதலிடம் வகிக்கின்றன. உணவுப் பொருட்களைப் பொறுத்தவரை பின்வரும் கிடைக்க பெற்ற; குறைந்த விலையான ஊட்டச் சத்துக் குறைவாக உள்ள ரொட்டி, கிழங்கு, கூலவகைப் பொருட்களின் பாவிப்பு குறையும் அதே வேளையில் இறைச்சி, மீன், பழ வகைகளின் பாவனை அதிகரித்துள்ளது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் கட்சி எடுத்த நடவடிக்கைகள், சோவியத் மக்களின் வாழ்வில் எத்தகைய அனுகூலத்தை ஏற்படுத்தியுள்ளதென்பதை அறிவதற்கு சைபீரியாவிலிருந்து வந்த தொழிலாளர்கள் கட்சியின் 25வது காங்கிரஸில் நிகழ்திய உரைகளே சான்ருகும். அவர்களில் ஒருவரான சுரங்கத் தொழிலாளி ஈ.ட்ரொஸ்டெட்ஸ் கீவ் கூறினர்;

> ''நீண்ட காலமாக நாம் குஸ்னெட்ஸ்க் நிலக்கரி பள்ளத்தாக்கில் வசித்தபோதிலும், எங்களின் தொழில் பிரதேசத்தில் வியத்தகு மாற்றங்கள் இடம் பெற்றதையும், தொடர்ந்து இடம் பெற்று வருவதையும் இட்டு என்னுல் வியப்படையாமல் இருக்க முடியாது. நிலக்கரி தோண்டுவது அதிகரித்து வருகிறது, மேற்கு சைபீரிய உலோக ஆலையினதும், சாதாரண தொழிலுக்கான நவீன நிறுவனங்களினதும் நிலையங்கள் ஒன்றின்பின் ஒன்ருகச் செயலில் ஈடுபடுத்தப்படுகின்றன; நகர திட்டமிடலில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது; உலோக, இரசாயன, நிர்மாண தொழிலாளர்களின் வசதிகள், கல்வி, கலாசார தரங்கள் அபிவிருத்தியடைந்து வருகின்றன. தொழில் நிலைமைகள் நன்ருக உள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன. ஒவ்வொரு ஆண்டிலும், அதிகமான வீடுகள், பாடசாலைகள், நோய்த்தடை மருத்துவ நிலையங்கள், குழந்தைகளின் கழகங்கள், மருத்துவ மனைகள் ஆகியன நிர்மாணிக்கப்படுகின்றன.''

ஓம்ஸ்க் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையில் இயந்திரம் இயக்குவராகப் பணியாற்றும் வலென்டிஞ லெபதேவா, தான் வாழும் பிராந்தியத்தைப் பற்றி காங்கிரஸில் கூறிஞர்:

''அண்மையில் தரிசு நிலமாக இருந்த இடத்தில் எண்ணெய்த்தொழிலாளருக்கான குடியிருப்புகள், திட்டமிடப்பட்ட நல்ல தெருக்கள், பூங்காக்கள், கடைகள், திரைப்பட அரங்குகள், சனசமூக நிலையங்கள் கொண்ட ஒரு பெரிய வீடமைப்புக் கூறு வளர்ந்துவிட்டது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின்போது மட்டும் எண்ணெய்த் தொழிலாளர்களின் சுமார் இரண்டாயிரம் குடும்பங்கள் புதிய வீடுகளுக்குச் சென்றன. இந்த நிறுவனத்திற்கு அருகே உணவு பண்டகசாலை கட்டப்பட்டுள்ளது; இது எண்ணெய்த் தொழிலாளர்களுக்கு ஆண்டு முழுவதற்கும் தேவையான நல்ல, புதிய மரக்கறிகளை வழங்குகிறது. இவையனைத்தும் கட்சியின் 24வது காங்கிரஸால் வரையப்பட்ட சமூக நடவடிக்கைகளுக்கான வேலைத்திட்டத்தினை உறுதியாகச் செயல்படுத்தியதன் விளைவாகும்.

## ஒரு புதிய அத்தியாயம்

சோவியத் ஐந்தாண்டுத் திட்டங்கள் ஒவ்வொன்றும் நாட்டினது வரலாற்றில் முக்கியமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சியாகும். அவை ஒவ்வொன்றும் தமது சொந்த வழியிலான தனிச் சிறப்பினைக் கொண்டது; அதனது காலத்தின் தனித்தன்மைக் குறியீட்டைத் தாங்கி நிற்பது. சோஷலிஸம், கம்யூனிஸத்திற்கான மாபெரும் நிகழ்ச்சிகளையும், மக்களின் வீரஞ்செறிந்த முயற்சிகளையும் விளக்கும் ஒரு புத்தகத்தின் அத்தியாயங்களைப் போல அவை பிரிக்க வொண்ணுதவையாகும்.

சோவியத் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கான புதிய பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கடமைகளை நிறைவேற்றுவதில் சோவித் மக்கள் விடாமுயற்சியுடன் பணியாற்றுகின்றனர். அதனது அடிப்படை விதிகள் சோ. க. க. மத்தியக் கமிட்டியால் வரையப்பட்டு கட்சியின் 25வது காங்கிரஸால் ஏகமனதாக அங்கீகரிக்கப்பட்டன.


பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமானது, அதனது நோக்கங்களைப் பொறுத்தவரை, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தினது நியதியான தொடர்ச்சியாகும்; இரு திட்டங்களும் முழுமையானதோர் உருவாக்கமாகும். நாட்டினது பொருளாதாரத்தின் சர்வாம்ச முன்னேற்றத்தையும், மக்களினது நல்வாழ்வை மேலும் அதிகரிப்பதையும், அவர்களின் பொருளாயத நிலைமையையும், கலாசார வாழ்வையும் அபிவிருத்தி செய்வதையும் உறுதிப்படுத்துவதை இலட்சியமாகக் கொண்டதே பத்தாவது ஐந்தாண்டுத் திட்டமாகும்.

பின்வரும் நடவடிக்கைகளைச் செயற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது;

— தொழிற்சாலை, அலுவலக தொழிலாளர்களின் சம்பளம் 16 - 18 சதவீதத்தாலும், கூட்டுப்பண்ணை விவசாயிகளின் வருமானம் 24 - 27 சதவீதத்தாலும் உயர்த்தப்படும். சோ. க. க. வின் வேலைத்திட்டத்திற்கு இன்றியமையாததான, நகரத்தினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1976 க்கும் 1980 க்குமிடையில் நீண்டகால பாவனைப் பொருட்களின் உற்பத்தி 60 சதவீதமாக அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமப்புறத்தினதும் பொருளாயத, கலாசார, வாழ்க்கை நிலைமைகளை மேலும் நெருக்கமாகக் கொணரும் பணிக்கு இது பங்களிக்கும்;

— சமூகப் பயணீட்டு நிதிகளிலிருந்து மக்களுக்கான கொடுப்பனவுகளையும், வசதிகளையும் 28-30 சத வீதத்தால் அதிகரிப்பது, இந்நிதிகளிலிருந்து புதிய சமூக நடவடிக்கைகளுக்காக முதலீடு செய்யப்படும். அவற்றிடையே ஒரு பகுதியானது குழந்தை பிறந்த பின்னர் 12 மாதங்கள் முடியும் வரை பெண்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறையை அளிப்பதற்குப் பயன் படுத்தப்படுவதும் ஆகும். ஆகக் குறைந்த ஓய்வூதியம் உயர்த்தப்படும். பெரிய குடும்பங்களின் தாய்மார்கள் செலவுப்படியை அதிகமாகப் பெறுவர்;


—வர்த்தக வருமானத்தை 27-29சத வீதத்தால் விஸ்தரிப்பதன் மூலம் மக்களின் உணவு, உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் தேவைகளை மேலும் திருப்திகரமாக்குவது நகர, கிராமப்புற வாழ்வில் தினசரி தேவையின் ஒரு பகுதியாக தொலைக் காட்சிப் பெட்டிகள், குளிர்பதனப் பெட்டிகள், இதர வீட்டுப் பாவனைப் பொருட்கள் இருப்பதால் இத்தகைய நீடித்த பாவனைக்கான பொருட்களை விநியோகிப்பது, குறிப்பிடத்தக்க உயர்ந்த விகிதத்தால் அபிவிருத்தி செய்யப்படும்;

—அடிப்படைப் பாவனைப் பொருட்களின் ஸ்திரமான சில்லறை விலைகளைப் பேணுவது; சில பொருட்களின் கையிருப்பு அதிகரிக்கும்போது அவற்றின் விலைகளைக் குறைப்பது.

புதிய ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பரத்த அளவிலான வீடமைப்பு நிர்மாணம் தொடர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் சோவியத் மக்கள் 5450 - 5500 லட்சம் சதுர மீட்டர் புதிய குடியிருப்புகளைப் பெறுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் மருந்துகளினதும் மருத்துவப் பொருட்களினதும் உற்பத்தி 44 - 46 சதவிதமாக உயரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1980 அளவில் 1975 இல் அமைக்கப்பட்டதிலும் பார்க்க கின்டர்கார்டன்களினதும் ஆஸ்பத்திரிகளினதும் நிர்மாணம் 28-30 சதவீதமாக அதிகரிக்கும்.


---

மேற்கொள்ளப்படும். தொழிலாளர்கள், விவசாயிகள், புத்திஜீவிகள் ஆகியோரின் வாழ்க்கை நிலையை அபிவிருத்தி செய்வது மிக முக்கிய கடமைகளில் ஒன்ருக இருக்க வேண்டும் என கட்சியால் கருதப்பட்டது. இந்த ஆண்டுகளுக்கான வீடமைப்பு இலக்கு 54 கோடியே 50 லட்சம்- 55 கோடி சதுர மீட்டர்களாகும். கட்டிட வேலையின் தரம், வீடுகளின் உருவமைப்புகள், ஏற்பாடுகள் ஆகியன அபிவிருத்தி செய்யப்படும்.

20 லட்சத்து 50 ஆயிரம் — 20 லட்சத்து 80 ஆயிரம் குழந்தைகளுக்கு உணவளிக்கும் சிறுர் பள்ளிகள், குழந்தை பராமரிப்பு நிலையங்கள் ஆகியனவற்றின் பணிகளை விஸ்தரிப்பது வீடமைப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விசேஷ நடுநிலைக் கல்லூரிகளினதும் உயர் கல்வி நிலையங்களினதும் 96 லட்சம் பட்டதாரிகளுக்கு விஞ்ஞான ஆய்வு நிலையங்களிலும் தொழிலகங்களிலும் நிர்மாணத்தலங்களிலும் வேலை வழங்கப்படும்.


---

அபிவிருத்தியை அவசியப்படுத்துகிறது. உற்பத்தியில் பெண் தொழிலாளர்கள் அதிகமாக உள்ள தொழில் கேந்திரங்கள், புதிய நகரங்கள் உள்ள பகுதிகளில் குறிப்பாக நாட்டின் கிழக்குப் பகுதியில் குழந்தைகளுக்கான கழகங்களை நிர்மாணிப்பதற்கான விசேட ஏற்பாடுகளுக்கும் திட்டம் வகை செய்கிறது.

சௌக்கிய பாதுகாப்புத் துறையில், மக்களுக்கான மருத்துவ சேவையின் தரத்தை உயர்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பத்தாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் நாட்டின் தொழில் பயிற்சிக் கல்லூரிகள் 110 லட்சம் தேர்ச்சி பெற்ற தொழிலாளர்களை பயிற்றுவித்து வழங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவதும் முக்கிய நோக்கங்களில் ஒன்ருகும், இதை மனதிற்கொண்டு நவீன விஞ்ஞானத்தின் சாதனை கள் பரந்த அளவில் பாவிக்கப்படும்; புதிய வகையில் நோய்களை ஆராய்ந்து அதற்கான மருத் துவமும் செய்யப்படும். மருத்துவ மனைகளின் தொழிற்பாடுகளை விரிவுபடுத்துவதோடு, பொழுது போக்குக் கேந்திரங்களும் விடுமுறை இல்லங்களும் விஸ்தரிக்கப்படும்; இந் நடவடிக்கைகள் சோவியத் உழைக்கும் மக்களின் பொழுதுபோக்கு மற்றும் மருத்துவ நிலைமைகளை அபிவிருத்தி செய்ய சாத் தியப்படும். மருத்துவத்திற்கான உபகரண உற் பத்தி 44 - 46சத வீதமாக அதிகரிக்கப்பட வுள்ளது.

பொதுக் கல்வியை மேலும் வளர்ப்பதற்குத் திட்டம் ஏற்பாடு செய்கிறது: 70 லட்சம் மாண வர்களுக்கான பாடசாலைக் கட்டிடங்கள் 45 லட் சம் கிராமப்புற மாணவர்களுக்கும் சேர்த்து— நிர்மாணிக்கப்படும். எல்லாவிதமான கல்வி நிறு வனங்களின் வசதிகளும், போதனைகளும் அபி விருத்தி செய்யப்படும்; இதன் மூலம், இளம் தலை முறையினர் ஆழமான, மிகவும் உறுதியான கல்வி யைப் பெறுவர்.

காங்கிரஸில் சுட்டிக் காட்டப்பட்டதைப் போல, விஞ்ஞானத் தொழில் நுட்பப் புரட்சிச் சூழ்நிலைகளில், கல்வி அமைப்பினை அபிவிருத்தி செய்வது இப்போது குறிப்பிடத்தக்க முக்கியத் துவமிக்கதாகும். தற்போது, ஒரு மனிதனுக்குத் தேவையான அறிவின் அளவு துரிதமாக அதிகரிக் கின்ற வேளையில், அம்சங்களின் மொத்தத் தொகையினைத் தன்வயப்படுத்துவதில் முக்கியமா கத் தங்கி நிற்பது இனியும் சாத்தியமில்லை. எழுச்சியுற்றுவரும் இளம் தலைமுறையினர் சுயமா கத் தமது அறிவைப் பயன்படுத்தவும், துரிதமாக அதிகரித்துவரும் தகவல்களின் ஓட்டத்தில் இழந்து விடாதவாறு தமது திறமையை வளர்ப்பதும் அவசியமாகும். இத்தகைய கோட்பாடுகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் பள்ளி அமைப்பிற்கான மாற்றங்களின் அடித்தளமாகும்.

புதிய ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பெருமளவில் தேர்ச்சி பெற்றவர்களாகத் தொழிலாளர்கள் பயிற்றுவிக்கப்படவுள்ளனர், இறுதியாக, சோவியத் மக்களின் அதிகரித்துவரும் புத்திஜீவிதத் தேவையை நிவர்த்திக்க பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பெருமளவில் பணியாற்றப்படவுள்ளது என்பதைக் குறிப்பிட்டாக வேண்டும், மேலும் அதிகமான நூல்களும், செய்தித்தாள்களும், சஞ்சிகைகளும் பிரசுரிக்கப்படும்; அதிகமான திரைப் படங்கள் உற்பத்தி செய்யப்படும்; தொலைக் காட்சி புதிய பரப்புக்களை எட்டும்; கலாசார நிறுவனங்களின் பொருளாயத அடித்தளம் அபிவிருத்தி செய்யப்படும். கலாசார, கலைப் பணிகள் குறித்த கட்சியின் கொள்கை—கலை, இலக்கியத் துறையில் பணியாற்றுவோர்கள், தத்துவார்த்த கோட்பாட்டின் நிலைபாட்டில், தமது தடைப்பாக்கத்தில், நுண்திறத்தையும் உதவியையும் இணைப்பது சம்பந்தமான அணுகு முறையானது முன்னரைப் போலவே உள்ளது. எந்தக் கலைப் பணியினதும் சமூக முக்கியத்துவத்தையும் மதிப்பீடு செய்யும் முக்கிய அளவுகோல் கம்யூனிஸ நெறிகளுக்கான அதன் விசுவாசமேயாகும். அதே வேளையில், கலைப்பணிகள், வேறுபட்ட வகைகள், தனிப்பட்ட நடைபோன்றவற்றில் எந்தவிதமான கட்டளைகள், ஆணைகளுக்கேற்ப செயல்படுவது அனுமதிக்க முடியாததென கட்சி நம்புகிறது.

25வது காங்கிரஸால் அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் புதிய சமூக வேலைத் திட்டத்தை சோவியத் மக்கள் மாபெரும் திருப்திகர உணர்வோடு வரவேற்றுள்ளனர். ஐவனோவா நகரத்தைச் (மாஸ்கோவிலிருந்து வட மேற்காக 300 கி. மீட்டர் தூரத்திலுள்ளது) சேர்ந்த நெசவுத் தொழிலாளி ஏ. யெரோபீவா காங்கிரஸில் கூறியதாவது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> ''லெனினது சிந்தனையாலும், சக்தியாலும் உந்தப்பட்ட எமது கட்சியின் செயல்களையும், எதிர்காலத் திட்டங்களையும் இட்டு நாம் பெருமிதமடைகின்றோம்; காங்கிரஸின் முடிவுகள் புதிய முயற்சிகளுக்கும், செயற்பாடுகளுக்குமான எமது பலத்தை பல மடங்குகளாக உயர்த்தும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம்.''

தனது மக்களின் வாழ்க்கைத் தரத்தை தொடர்ச்சியாக உயர்த்துவதில் சோவியத் யூனியன் எவ்வாறு வெற்றி பெறுகிறது என வெளிநாட்டிலுள்ள சிலர் சில வேளைகளில் கேட்கும் கேள்விக்குப் பதிலளிப்பதைப்போல இப் பெண்மணி கூறியதாவது; ''எல்லாவற்றிற்கும் மேலாக நாட்டின் நலன்களுக்கு முதலிடம் அளித்து, தமது பெருவிருப்புக்குரிய நாட்டின் வளப்பத்திற்காக, தமது பலமனைத்தையும், அறிவையும், ஆற்றலையும் ஈடுபடுத்தும்'' சோவியத் தொழிலாளர்களின், விவசாயிகளின், புத்திஜீவிகளின் அர்ப்பணிக்கப்பட்ட உழைப்பாலேயே இவ்வெற்றி சாத்தியமாகியுள்ளது. தன்னைப் பற்றிக் குறிப்பிட்டு ஏ. யேராபீவா கூறியதாவது;

> ''ஆதிகாலந் தொட்டு இருந்துவரும் நெசவே எனது தொழில். அதையிட்டு நான் பெருமையடைகிறேன். நான் விரும்பும் தொழிலும், புடவைத் தொழில் கழகத்தில் எனது மாலை நேரப் படிப்பும், எனது பொதுக் கடமைகளும் வாழ்க்கை முழுமையின் விழிப்புக்கு இட்டுச் செல்கின்றன. அறிவுபூர்வமாக நான் மேலும் வளர்ச்சியுறுவேன் என பலமாக உணர்கின்றேன். எனது நாட்டிற்கு மேலும் பல நன்மைகளைக் கொணர்வேன் என இது அர்த்தமாகிறது. இந்த உணர்வில் உயர்ந்த நோக்கமும் பொதிந்துள்ளது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாபெரும் குறிக்கோள்கள்

சோவியத் யூனியனது கடந்த ஐந்தாண்டு கால பொருளாதார சாதனைகளையும், அதனது எதிர்காலத் திட்டங்களையும், மக்களின் நல்வாழ்வினை உறுதி செய்யும் அடித்தளத்தை உருவாக்கும் கனரக- மென் தொழில் துறை, விவசாயம் ஆகியவற்றின் வெற்றிகளையும் நாம் பார்ப்போம்.

24வது காங்கிரஸ் நடைபெற்றதிலிருந்து சோவியத் பொருளாதார வளர்ச்சியின் எல்லா அம்சங்களையும் கவனமாக ஆராய்ந்த சோ. க. க.வின் 25 வது காங்கிரஸ், இப் பொருளாதாரம் தாழ்வோ, நெருக்கடியோ இன்றி உயர்வீதத்தில் வளர்ந்து வருகிறது என சுட்டிக் காட்டியது.

''ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் ஒட்டுமொத்த முடிவுகளைப் பற்றிப் பேசும்போது அது, சோவியத் மக்களின் அர்ப்பணிக்கப்பட்ட பணியும், கட்சியின் வழிகாட்டும், ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையும் தான் நிலையான பொருளாதார வளர்ச்சியை உறுதிசெய்தது என்பது முக்கியமான விஷயமாகிறது. அந்த ஐந்தாண்டு திட்டத்தின் மூலாதார சமூக-பொருளாதார இலக்குகள் எய்தப்பட்டுவிட்டன'' என்று சொன்னார் லியோனிட் பிரெஷ்னேவ்.

### உலகத் தொழில்துறையில் ஐந்தில் ஒரு பங்கு

பொருளாதாரத்தின் முன்னணிப் பிரிவான தொழிற்துறை உற்பத்தி கடந்த ஐந்தாண்டுகளில் 43 சத வீதத்தால் அதிகரித்துள்ளது. 1971-73 கால கட்டத்தில் தொழில்துறை உற்பத்தியின் வளர்ச்சி 35 சத வீதத்திற்கும் அதிகமாகியது. அதே வேளையில், அமெரிக்காவில் 17 சத வீதமாகவும், பிரிட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டனில் 5 சத வீதமாகவும், பிரான்ஸில் 23 சத வீதமாகவும், ஜெ.ச.கு.வில் 11 சத வீதமாகவும், ஐப்பானில் 26 சத வீதமாகவும் இருந்தது. 1975ல் வளர்ச்சி வீதத்தின் வித்தியாசங்கள் மேலும் அதிக மாக இருந்தன. சோவியத் யூனியனில் தொழில் துறை உற்பத்தி ஏறத்தாழ 8 சத வீதத்தால் அதிகரித்தது; அதே வேளையில் அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும், ஜப்பானிலும் 10 சத வீதமாகவும், அதற்கு அதிகமாகவும் வீழ்ச்சி யடைந்தது.

சோவியத் யூனியனின் பொருளாதார உள் வலுவின் துரித வளர்ச்சியைப் பின்வரும் விபரங் களிலிருந்து நாம் காணலாம்: இன்று நாட்டின் மின்சக்தி நிலையங்கள், யுத்த பிற்காலத்தில் சோவி யத் பொருளாதாரத்தைப் புனரமைக்கவும் விஸ் தரிக்கவும் செய்தபோது—1950 முழுமையிலும் உற்பத்தி செய்ததை விட அதிகமான மின்சா ரத்தை ஒரு மாத காலத்திற்குள் உற்பத்தி செய் கின்றன. 1950ல் உற்பத்தி செய்யப்பட்ட எண் ணெயின் மொத்த அளவை உற்பத்தி செய்ய 24 நாட்களே எடுக்கின்றன. 1950ம் ஆண்டில் உற் பத்தி செய்யப்பட்ட இந்திர உபகரணங்களின் மொத்தத் தொகையை உற்பத்தி செய்ய இயந் திர—நிர்மாணிகளுக்கு நான்கு மாதங்களே ஆகின் றன. கடந்த ஐந்தாண்டுகளில் பாவனைப் பொருட் களின் உற்பத்தி 33 சத வீதமாகவும், நீடித்த பாவ னைப் பொருட்களின் உற்பத்தி 60 சத வீதமாக வும் அதிகரித்துள்ளன.

தொழில் வளர்ச்சியின் உயர் வீதமானது, எண்ணெய், உருக்கு சிமெந்து, கனிஜ உரங் கள், டிராக்டர்கள். டீசல் என்ஜின்கள், தோலி லான காலணிகள், கம்பளித் துணிகள் போன்ற மிக முக்கிய வகையறுக்களில் உலகின் மிகப் பெரிய உற்பத்தி நாடாக சோவியத் யூனியனை ஆக்கியுள் ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோஷலிஸப் பொருளாதாரமானது முழுமையான வேலைவாய்ப்பினை நீண்ட காலத்திற்கு முன்னரே எட்டிவிட்டது. சோவியத் ஒன்றியத்தில் சம்பளம் - ஊதியம் பெறும் தொழிலாளர்களின் எண்ணிக்கை கடந்த ஐந்தாண்டுகளில் 1 கோடி 20 லட்சத்திற்கும் அதிகமாக உயர்துள்ளது.

நாட்டினது பொருளாதாரத்தில் கணிசமான அளவு தரரீதியான மாற்றங்களேற்பட்டு வருவதோடு, அதனது அமைப்பிலும் அபிவிருத்தி ஏற்பட்டுவருகின்றது. பொருளாதாரம் முழுமையினதும், தொழில்நுட்ப முன்னேற்றம், ஆற்றல், திறன் ஆகியவற்றை நிர்ணயிக்கும் முக்கிய பிரிவுகளின் மொத்த உற்பத்திப் பங்கின் நிலையான வளர்ச்சி உதாரணமாக உள்ளது—முழுமையான தொழில் துறையினதும் வளர்ச்சியைவிட இயந்திர நிர்மாணம், இரசாயனம், பெற்றோ இரசாயனம், வாயுத் தொழில்கள் ஆகியவற்றின் வளர்ச்சி வீதங்கள் அதிவேகமாக உள்ளன.

உற்பத்தியின் விஞ்ஞானத் தொழில் நுட்பத் தரங்கள் அபிவிருத்தியடைகின்றன. புதிய இயந்திரங்கள், சாதனங்கள், ஆயுதங்கள், உபகரணங்கள் ஆகியன முன்னெப்போதுமில்லாத அளவில் அதிகமாக நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. உதாரணமாக இப்போது 17,000 தன்னியக்கக் கம்பிகள் உள்ளன; இது 10 ஆண்டுகட்கு முன்பிருந்ததைவிட மூன்றுமடங்கு அதிகமானதாகும். முன்னைய ஐந்தாண்டுத் ஒட்டு மொத்தத் திட்டகாலத்தில், தொழிற்துறையின் உற்பத்தியில் 80 சத வீதமான அதிகரிப்பு, உயர்ந்த உழைப்பு உற்பத்தி மூலமாக ஈட்டப்பட்டது. உலகத் தொழில் துறை உற்பத்தியில் சோவியத் யூனியன் 20 சத வீதத்தை உற்பத்தி செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஐந்தாண்டு காலத்தில் மிகவும் பாதகமான இயற்கைச் சூழ்நிலைகளிலேயே விவசாயம் வளர்ச்சியடைந்தது. மேற்கு ஐரோப்பா, அல்லது அமெரிக்காவைவிட, எமது நாட்டில் விவசாயத்திற்கான சூழ்நிலைகள் மிகவும் மோசமானவை என்பது நன்கு தெரிந்த விஷயமாகும். நாட்டின் பெரும் பகுதிகளில் காலநிலை கடுமையானதாகும். பயிரிடப்பட்ட நிலங்கள் இடையறுத வரட்சியாலோ, அல்லது மிதமிஞ்சிய ஈரக்கசிவாலோ பாதிக்கப்படுகின்றன. ஐந்தாண்டுகளில், 1973ம் ஆண்டு மட்டுமே நல்ல ஆண்டாகும். 1972லும் 1974லும் முன்னெப்போதுமில்லாத வரட்சி காணப்பட்டது. இவ்வாறிருந்த போதிலும், எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தைவிட, சராசரி வருடாந்த உற்பத்தி 13 சத வீதம் அதிகமாக இருந்தது; இது, 181 கோடியே 50 லட்சம் தொன்களாகும். விவசாயத்தின் சிறந்த பொருளாயத, தொழில்நுட்ப வசதிகளானவை, துயர்மிக்க காலநிலைப் பாதிப்புகளைத் தணிப்பதற்கு வழிவகுத்தது.

துயர்மிக்க அல்வாண்டுகளை நினைவுபடுத்திய தேர்ச்சி பெற்ற உக்ரேனிய டிராக்டர் ஓட்டியான அலெக்ஸாண்டர் ஜித்தாலோவ் காங்கிரஸில் கூறியதாவது;

> ''தானிய விதைப்பாளர்களான எங்களின் புனிதமான கடமை நாட்டு மக்களுக்கு உணவளிப்பதாகும் என்பதை நான் உணர்கின்றேன். இயந்திர— இயக்குநர்களான நாங்கள், சோவியத் குடும்பம் ஒவ்வொன்றுக்கும், ரொட்டியும், சாப்பிடுவதற்கு இதரப் பொருட்களும் ஏராளமாக உள்ளதென்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பமான பின்னர் இரண்டு முறை கடுமையான வரட்சிகள் ஏற்பட்டது என்பது குறிப்பிடத் தக்கதாகும். முற் காலமாயின் அத்தகைய கால நிலை யானது, பசளை மண்ணுள்ள பிர தேசங்களில் கூட, பயங்கர பஞ் சத்தைக் கொண்டுவந்திருக்கும்.''

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சோவி யத் விவசாயத்திற்காக மூலதன மிடப்பட்ட தொகை 13100 கோடி ரூபிள்களாகும்; இது இதற்கு முந்திய இரண்டு ஐந்தாண்டுத் திட்டங் களிலும் செலவழிக்கப்பட்ட மொத்தத் தொகைக்கு ஈடானதாகும். லட்சக்கணக்கான டிராக்டர்களும் லொறிகளும், விசேட மோட்டார் வாகனங்களும், தானிய அறுவடை இயந்திரங்களும் இதர இயந்தி ரங்களும் பண்ணைகளுக்கு விநியோகிக்கப்பட்டன. பசளைகளின் உபயோகம் 33 சத வீதத்தால்அதி கரிக்கப்பட்டது. தொழில்துறை ரீதியாக விவசாய உற்பத்தியைச் செயற்படுத்துவதற்கு அதிகமான முக்கியத்துவமளிக்கப்பட்டது. இவ் வேலைத் திட் டத்தின் முக்கிய அம்சங்களில், இயந்திரமயப் படுத்தல், இரசாயனமயப்படுத்தல், நிலத்தை அபி விருத்தி செய்தல் ஆகியன உள்ளடங்கி இருந் தன. ஐந்து ஆண்டுகளில் 46 லட்சம் ஹெக்டர் நீர்ப்பாசன நிலம் நடைமுறை உபயோகத்திற்குப் பயன்படுத்தப்பட்டது. 44 லட்சம் ஹெக்டர் நீர் சூழ்ந்த நிலத்தில் வடிகால்கள் அமைக்கப்பட்டன.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும், சோவி யத் அரசினதும் கமத்தொழிற் கொள்கையை இழிவுபடுத்தும் தமது முயற்சிகளுக்காக, ஏகாதி பத்தியப் பிரசாரமானது கூட்டுப் பண்ணைகளில் நிலவும் நிலையில் தவருன கணிப்பீடுகளைக் கண்டு பிடிக்கின்றது. இது சம்பந்தமாக, சோவியத் ஒன் றியத்தின் ஐரோப்பிய பகுதியிலுள்ள கருமண் ணற்ற வலயத்தில் இருக்கும் தூலா பிரதேச கூட் டுப்பண்ணைத் தலைவர் வி. ஏ. ஸ்டாரோடுப்பட் லோவ், கட்சியின் 25வது காங்கிரஸில் கூறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வற்றை மீண்டும் கூறுவது ஆர்வந் தருவதாகும். வி. ஏ. ஸ்டாரோடுப்பட்லோவ், கிராமத்தில் பிறந்து வளர்ந்தவர், விவசாயியாகவே வாழ்ந்தவர். கூட்டுப்பண்ணை விவசாயிகளில் ஒருவராக இருந்து வண்டியோட்டுபவரின் உதவியாளராகவும், டிராக்டர் ஓட்டியாகவும், வயல் குழுவின் தலைவராகவும் இருந்தவர். அவர் கூட்டுப் பண்ணையின் தலைவராகப் பல ஆண்டுகளாக இருந்து வருகிறார். அவர் விஞ்ஞான வேட்பாளர் (விவசாயம்) பட்டத்தைப் பெற்றவர்.

தனது கூட்டுப்பண்ணையைப் பற்றிப் பேசுகையில் பின்வரும் விபரங்களை மேற்கோளாகக் காட்டினார்:

> ''இவ்வாண்டுகளில் (1971-75) எமது பண்ணையில் கூலவகைப் பயிர்களின் மகசூல் 12லிருந்து 35-40* சென்ட்னர்ஸ்களாக உயர்ந்தது. சீனிச் கிழங்கு 100லிருந்து 350 சென்ட்னர்ஸ்களாகவும், ஒரு பசுவின் சராசரி பால் 1800லிருந்து 4,200 கிலோகிராம்களாகவும் அதிகரித்தது. கூட்டுப் பண்ணையின் மொத்த உற்பத்தி இக்காலத்தில் ஐந்து மடங்குகளாக அதிகரித்தது. இந்த ஐந்தாண்டு காலத்தில் 1,000 பசுக்களுக்கான கால் நடைப் பேட்டையும், 150 தொன்கள் தினசரி உற்பத்தி செய்யும்-உணவு ஆலைக்கான உட்பண்ணைத் திட்டமும், இதர உற்பத்தித் திட்டங்களும் உருவாக்கப்பட்டன.

* ஒரு சென்ட்னர் 100 கி. கிராம்களுக்குச் சமமானதாகும்.

இந்த விபரங்கள் நடுநிலையாளரான ஒரு நபருக்குபல விஷயங்களைக் கூறுபவையாகும். வி. ஏ. ஸ்டாரோடுப்ஸேவ், காங்கிரஸில் பின்வருமாறு கூற பலகாரணங்கள் உள்ளன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் கமத்தொழிற் கொள்கையின் பிழையற்ற தன்மையினையும், முதிர்ந்த அனுபவ அறிவையும் இது காட்டுகின்றது. எனவே நாம் எமது மனமுவந்த ஆதரவினை அளிக்கிறோம் என நான் கூறுகையில் கோடிக் கணக்கான சோவியத் விவசாயிகளின் உள்ளார்ந்த சிந்தனைகளையும் தெரிவிக்கிறேன் என நம்புகிறேன். விவசாயத்தின் நிலையான முன்னேற்றத்தை கட்சியின் கமத்தொழிற் கொள்கை உறுதி செய்வதோடு, சோவியத் மக்களின் தேவைகளுக்கு ஏற்புடையதாகவும் உள்ளது.''

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தின் ஒட்டு மொத்த முடிவுகள்தான் என்ன? இக்காலமானது, முந்திய இந்தத் திட்டகாலத்தையும் விட அதிக உற்பத்தியைக் கொண்டதென சோவியத் மக்கள் கருதுகின்றனர்.

சோவியத் ஒன்றியத்தின் அமைச்சரவைத் தலைவர் அலெக்ஸி கொஸிஜின் 1976-80க்கான சோவியத் ஒன்றியத்தின் தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கான வழிகாட்டிகள் பற்றிய தனது அறிக்கையில் கூறியதாவது: ''பொருளாதார தொழில்நுட்ப அடிப்படையில் கம்யூனிஸத்தைக் கட்டுவதில் சோவியத் சமுதாயம் மேலும் முன்னேறியுள்ளது. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக நாட்டின் பொருளாதாரக் கருவூலம் கணிசமான அளவு அதிகரித்துள்ளதோடு, கடந்த 10 ஆண்டுகளில் உண்மையிலேயே இரட்டித்தும் உள்ளது.

மக்களின் வாழ்க்கைத் தரம் அபிவிருத்தியடைந்துள்ளது; சோவியத் அரசு மேலும் பலமிக்கதாக மாறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டின் பாதுகாப்புக் கருமூலம் அதிகரித்துள்ளது. சோவியத் இராணுவப் படைகளின் சார்பில் சோ. க. க. வின் 25வது காங்கிரஸை வாழ்த்துகையில், தந்திரோபாய ஏவாயுதப் படைப் பிரிவு ஒன்றின் கமாண்டரான மேஜர் ஜெனரல் எஸ். ஜீ. கோச்சேமஸோவ் கூறினார்:

> ''எமது லெனினியக் கட்சிக்கு, அதனது மாபெரும் இலட்சியத்திற்கான எமது எல்லையற்ற ஈடுபாட்டினை உறுதிப் படுத்துகிறோம். கட்சியாலும், மக்களாலும் எங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள சக்திமிக்க போர்க் கருவிகளுடன் கூடிய சாதனங்களை எமது தாயகத்தைப் பாதுகாப்பதற்காகக் கொண்டுள்ளோம், அவை நம்பகமானவைகளில் உள்ளன என்பதை இராணுவ மக்கள் என்ற முறையில் நாம் பெருமையுடன் அறிவிக்கின்றோம். நாஸிஸ ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான கடுமையான போராட்டத்தில் எமது சோஷலிஸத் தாயகத்தின் கௌரவத்தையும், சுதந்திரத்தையும் பாதுகாத்த அவர்களின் தந்தையரின் பாரம்பரியத்திற்கு உண்மையாக சோவியத் படை வீரர்கள் உள்ளனர். எமது மக்களின் ஆக்கபூர்வமான உழைப்பும், சோவியத் ராஜ்யத்தின் புனித எல்லைகளும், சோஷலிஸ சமாஜத்தின் நாடுகளும் நம்பகமாகப் பாதுகாக்கப்பட்டுவருகின்றன என்பதைச் சமாதானத்தின் எதிரிகள் தெரிந்து கொள்ளட்டும்''

## கட்சியின் பொருளாதாரத் தந்திரோபாயம்

நாட்டின் பொருளாதார வலிமையைக் கட்டியெழுப்புவதே சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினது முழுமையான தந்திரோபாயத்தின் அடிப்படை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கமாக இன்றும் இருந்து வருகிறது. விஞ்ஞான தொழில்நுட்ப முன்னேற்றத்தின் அடிப்படையில் உற்பத்தியைத் தீவிரப்படுத்துவதை வலியுறுத்துவதோடு உற்பத்தியை விஸ்தரிப்பது, நவீனப்படுத்துவது, கனரகத் தொழிலை நிலையாக முன்னேற்றுவது ஆகியவற்றின் மூலம் இது நிறைவேற்றப்படுகிறது. தற்போதைய ஐந்தாண்டுத் திட்ட காலத்திற்கு சோவியத் பொருளாதாரத்தின் முக்கிய கடமையாக சோ. க- க. வின் 25வது காங்கிரஸ் முன்வைத்துள்ளமை தொழிற்துறை உற்பத்தியை 35.39 சத வீதமாக உயர்த்துவதும், விவசாய உற்பத்தியின் ஆண்டுக்கான சராசரியை 14-17 சத வீதமாக உயர்த்துவதும்தான்.

வெளிநாடுகளிலுள்ள சிலர் சோவியத் யூனியனின் வளர்ச்சி குன்றி வருவதாகக் குறை கூறுகின்றனர். எமக்கு மாறுபட்ட கருத்துடையவர்கள் முதலாளித்துவ உலகை நடுங்கச் செய்யும் பொருளாதாரக் கோளாறுகளை சோவியத் ஒன்றியத்திலும் காண விரும்புகிறார்கள் என்பதை இது நிரூபிக்கிறது. அவர்களின் எண்ணங்கள் வீணாகின்றன; ஏனெனில், பத்தாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில், தொழிற்துறை உற்பத்தியானது, ஒன்பதாவது ஐந்தாண்டுத்திட்டகாலத்தோடு ஒப்பிடுகையில் ஏறத்தாழ 50 சதவீதமாக அதிகரிக்க உள்ளது.

பொருளாதாரத்தின் தனிப்பட்ட பிரிவுகளின் உற்பத்தி வளர்ச்சி 1980ல் பின்வருமாறு இருக்கும்:

—இயந்திர நிர்மாணத் தொழில்துறையில் 60 சதவீதமாக இருக்கும். பொருளாதாரத்தின் இப்பிரிவே அதிக முக்கியத்துவமிக்கதாகத் தொடர்ந்து இருக்கும்; இதில் அணுமின், இரசாயன மற்றும் உலோகத் தொழில்களுக்கான இயந்திர நிர்மாணத்திற்கு முதலிடம் அளிக்கப்படும். மின் இரசாயன, ரேடியோ இலக்ரோனிக் இயந்திர-உபகரண மற்றும் இதர பொருட்களைச் செய்யும் கைத்தொழில்கள் அதிவிரைவான வீதத்தில் அபிவிருத்தி செய்யப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1980 இல் 800 - 825 ஆயிரம் லொறிகள் உட்பட 21 - 22 லட்சம் மோட்டார் வாகனங்கள் உற்பத்தி செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

—உடலுழைப்பை வெகுவாகக் குறைக்கக் கூடிய சாதனங்களை உற்பத்தி செய்வதற்கான விசேட திட்டங்கள் வரையப்பட்டுள்ளன. விவசாயத்திற்கான இயந்திர நிர்மாணத் தொழில்துறை உற்பத்தி 50 சத வீதத்தால் அதிகரிக்கும்;

—லொறி, கார்களின் உற்பத்தி அதிகரிக்கும்;

—எண்ணெய்க் கைத்தொழிலில் 29-30 சத வீதமும், எரியாயுத் தொழிலில் 38-50 சத வீதமும், உருக்குத் தொழிலில் 15-20 சத வீதமும், மின்வலு தொழிலில் 29-33 சத வீதமும், சிமெந்து தொழிலில் 18-21 சத வீதமும், கனிஜ உர உற்பத்தியில் 59 சத வீதமும் உயரும்.

—உணவுத் தொழில் துறையில் 23-25 சத வீதமும், மென்தொழில் துறையில் 26-28 சத வீதமும் உற்பத்தி அதிகரிக்கும். பாவனைப் பொருட்களுக்கான தொழில் துறை முழுமையும், 30-32 சத வீதமாக அதிகரிக்கும்; கலாசார மற்றும் வீட்டுப் பாவனைக்கான பொருட்களின் உற்பத்தி 57 சதமாக அதிகரிக்கும்.

பத்தாவது ஐந்தாண்டுத்திட்ட காலத்தில் உற்பத்திச் சக்திகளின் கண்டுபிடிப்புகள் லெனினிய தேசிய கொள்கைகளுக்கேற்ப ஆரம்பமாகும்; பொருளாதார எழுச்சியானது, அனைத்து யூனியன் மற்றும் பிராந்தியங்கள், குடியரசுகள், நாட்டின் ஒவ்வொரு பகுதிக்கும் உத்தரவாதப்படுத்தப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனின் ஐரோப்பிய, யூரல்ஸ் பகுதிகளின் தொழில் முன்னேற்றம் இப்போதுள்ள தொழிலகங்களில் நவீன தொழில்நுட்ப சாதனங்களையும் பொருத்துவதன் மூலமும் அவற்றைப் புனர் நிர்மாணிப்பதன் மூலமுமே பெரும்பாலும் ஈட்டப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனிஜ, எரிபொருள், சக்தி முதலிய வளம் கொண்ட சைபீரியா, சோவியத் தூர கிழக்கு ஆகிய பகுதிகளின் முன்னேற்றத்திற்கு முன்னுரிமை வழங்கப்படும். அப் பிரதேசங்களில் மேற்கு சைபீரிய, சயான் திட்டங்களுட்பட பல பாரிய தொழிற் பேட்டைகளை நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் மேற்கு சைபீரியத் திட்டம், தேசத்தின் மொத்த எண்ணெய், இயற்கை வாயு உற்பத்தியில் 50 சத வீதத்தையும், செயற்கை றப்பர், பிளாஸ்டிக் என்பவற்றின் பெரும் பகுதியையும் வழங்கும். உலகிலேயே மிகப் பெரிதான சயான்—ஸுஷா நீர் மின் நிலையத்திலிருந்து மின் சாரத்தைப் பெறும் சயான் திட்டம், உலோகத் தயாரிப்பு, எந்திர நிர்மாணம் என்பவற்றில் சிறப்பாகக் கவனம் செலுத்துகின்ற பல தொழிற்சாலைகளையும் உள்ளடக்கியிருக்கும் பெய்கால்-அமுர் பிரதான புகையிரதப் பாதை ('பாம்') நிர்மாணம் பாரிய முக்கியத்துவம் மிக்கதாகும்.

அந்தப் பாதை நிர்மாணப் பணியில் ஈடுபட்டுள்ளவரான எல். டி. கஸாகோவ் காங்கிரஸில் பேசும்போது ''பாம் என்ருல் ஆயிரக்கணக்கான கிலோமீட்டர் உருக்குப் புகையிரதப் பாதைகள், இயந்திரப் பாதைகள், நூற்றுக்கணக்கான பாலங்கள், பல பெரிய சிறிய சுரங்கப் பாதைகள் என்று அர்த்தமாகும். அத்துடன் அது மக்களுக்காக நிறுவப்படும் புதிய நகரங்கள், குடியிருப்புகள், தொழிற்சாலைகள், வளமிக்க தாதுப் பொருட்கள் எனவும் பொருள்படும். இவையெல்லாவற்றையும் இடர்மிக்க இயற்கை, சீதோஷ்ண நிலைமைகளினூடேயே நிர்மாணிக்க வேண்டியுள்ளது'' என்ருர்.

புதிய ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாயத்திற்கு விசேட கவனம் செலுத்தப்படும். அதன் அபிவிருத்திக்காக, மொத்த முதலீட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 சத வீதத்திற்குமதிகமான பகுதி பாவிக்கப் படும். அதுபோக விவசாயத்தின் ஏனைய துறை களின் முன்னேற்றத்திற்காக கிராமப் புறங்களுக்கு எந்திரங்களையும், உர வகைகளையும், மற்றும் வசதி களையும் வழங்கும் பொருட்டு கணிசமான அளவு பணம் ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாய எந்திரங் களை வழங்குவதற்கான ஒதுக்கீடு ஒன்பதாவது ஐந் தாண்டுத் திட்ட காலத்தை விட 46 சத வீதத்தால் அதிகரிக்கப்படும். தேசத்தில் இப்போதுள்ள பாசன வசதி கொண்ட, சேற்றுத்தன்மை அகற்றப்பட்ட 250 லட்சம் ஹெக்டர் நிலத்துடன் மேலும் 90 லட்சத்தைச் சேர்க்கவும், பாலைவன, பாலை வனம் சார்ந்த, மலைப் பகுதிகளிலுள்ள 376 லட் சம் ஹெக்டர் புற்றரைகளைப் பாசனப்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

ஐந்தாண்டுத் திட்ட நடவடிக்கைகளின் பல ளுக 2150—2200 லட்சம் தானிய அறுவடையை எட்டும் 18—21 சதவீத வளர்ச்சி எதிர்பார்க்கப் படுகிறது.

இவையெல்லாம் சோவியத் யூனியனின் பொருளாதார வளர்ச்சியின் வளம் பற்றிய சுருக் கமான குறிப்புகளே.

''சமூக உற்பத்தியின் மொத்த வளர்ச்சியின் அளவு முந்திய வேறெந்த ஐந்தாண்டுத் திட்ட காலத்தையும் விட பத்தாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மிகப் பெருமளவில் மிஞ்சக் கூடியதா யிருக்கும்'' என அலெக்ஸி கொஸிஜின் குறிப்பிட் டுள்ளார்.

இத் திட்டத்தின் செயலாக்கம் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சமூக பொருளாதாரக் கட மைகளை நிறைவேற்றுவதற்கான புதிய நிபந்தனை களையும் வழங்குவதுடன், சோவியத் தனிமனிதனின் எல்லாவித முன்னேற்றத்தையும் சோஷலிஸத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேம்பாட்டையும் வளர்க்கிறது. இதே நோக்கத்துடனேயே 1990 ஆம் வருடம் வரையிலான பொருளாதார முன்னேற்றத்திற்கான ஒரு நீண்ட காலத் திட்டம் வரையப்படுகிறது. விஞ்ஞானிகளின் கருத்துப்படி கடந்த 15 ஆண்டுகளில் இருந்ததையும்விட இரட்டிப்பான பொருள் மற்றும் பொருளாதார வளங்களைச் சோவியத் யூனியன் 1976—90ஆம் ஆண்டுகளிற் பெற்றிருக்கும்.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தைச் சோவியத் மக்கள் ஆற்றலின்—தரத்தின் திட்டம் என வர்ணிக்கின்றார்கள், சோவியத் யூனியனில் என்றுமே ஆற்றல், தரம் என்பவற்றிற்கு அதிக அவதானம் செலுத்தப்பட்டது எனினும், அது 25வது காங்கிரஸில் விசேடமாக வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக, உயர்வான உற்பத்தி மூலம் முழுத் தேசிய வருமானத்தில் 90 சதவீத உயர்ச்சியை உறுதி செய்வதென முடிவு செய்யப்பட்டது. தேசிய பொருளாதாரத்திற்கான ஏனைய அம்சங்களுடன் உற்பத்தித் துறைகளை எந்திரமயமாக்களையும், தன்னியக்கமயப்படுத்தலையும் உறுதிசெய்யுமுகமாக விஞ்ஞான ஆராய்ச்சிகளை மேலும் முன்னேற்றவும் அதன் முடிவுகளின் நடவடிக்கைகளை அளவில் விரைவுபடுத்தவும் திட்டம் வாய்ப்பளிக்கிறது.

வேறு விதத்தில் மொழிவதானால்—மக்களுக்கான தரமுயர்ந்த பாவனைப் பொருட்களின் அதிகரித்துவரும் தேவையை முழுமையாக திருப்தி செய்வதன் சாத்தியத்திற்கும் உற்பத்தியில் நவீன உபகரணங்களினதும் தொழில்நுட்பத்தினதும் அதிக ஆற்றலைப் பாவிப்பதற்குமானதோர் கட்டத்தைச் சோவியத் பொருளாதாரம் எய்தியுள்ளது. இங்குதான் அதிகமானதும் மனிதாபிமானதுமான இலக்கான ஒரு கம்யூனிஸ சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்குத் தேசத்தை மேலும் முன்னேறுவதற்கான நிபந்தனை தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு புதிய ஐந்தாண்டுத் திட்டகாலமும் மேலும் மேலும் அருகே இட்டுவரும், அதிக யதார்த்தமாக்கி வரும் கம்யூனிஸம் என்பதே சோவியத் மக்களின் உன்னத வசந்தக் கனவாகும்

அதே வேளையில் தனது தன்மையிலும், திசையமைவிலும் இத் திட்டம் சமாதானமும், மேலும் பதட்ட நிலைத் தணிவையும் கொண்டதாகும். அலெக்ஸி கொஸிஜின் காங்கிரஸில் குறிப்பிட்டதைப்போல ''சமாதான நிர்மாணத்துக்கான சோவியத் மக்களின் ஆழ்ந்த அர்ப்பணத்தையும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சோவியத்தினதும் சமாதானக் கொள்கையையும் இது மனுக்குலத்திற்கு மீண்டும் ஒருமுறை காட்டியுள்ளது.''

# அனைத்து நாடுகளினதும் மக்களின் நலனுக்காக

ஐந்தாண்டுகளுக்கு முன் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸ் சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் கடமைகளைப் பின்வருமாறு குறிப்பிட்டது:

''சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் இலக்குகள் ஏனைய சோஷலிஸ நாடுகளுடனிணைந்து கம்யூனிஸ நிர்மாணத்திற்கான அனுகூலமான சர்வ நிலைமைகளையும்; சோஷலிஸ நாடுகளின் ஒற்றுமை, நட்புறவு, சகோதரத்துவம் என்பவற்றையும் ஐக்கியத்தையும் உறுதியாக்குவதையும்; தேசிய விடுதலை இயக்கங்களுக்கு ஆதரவும், இளம் வளர்முக நாடுகளுக்கு எல்லாவித ஒத்துழைப்பும் வழங்குவதையும்; மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளிடையேயான சமாதான சகவாழ்வுக் கொள்கைக்காக உறுதியுடன் நிற்பது ஏகாதிபத்தியத்தின் கபளீகர சக்திகளுக்கெதிராக ஓர்மமான எதிர்ப்பைத் தெரிவிப்பது, இன்னொரு உலக யுத்தத்திலிருந்து மனுக்குலத்தைப் பாதுகாப்பது என்பவற்றையும் உறுதி செய்வதை உள்ளடக்குயிக்கின்றகின.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைப்பற்றி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் அறிக்கையில் லியோனிட் பிரெஷ்னேவ் இவ்வாறு குறிப்பிட்டார்:-

"வெளிநாட்டுக் கொள்கைவழியில் 24வது காங்கிரஸ் ஒரு சமாதானத் திட்டத்தை முன்வைத்தது. அதன் பிரதான நோக்கம் எல்லா முற்போக்கு, சமாதானம் விழையும் சக்திகளுடன் நெருக்கமான உறவுகளின் மூலம் உலக சோஷலிஸ வல்லமை, ஐக்கியம், இயக்க ஆற்றல் மீதான நம்பிக்கையுடன் சர்வதேச உறவுகளில் ஒரு திருப்பத்தை அடைவது, மாறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகள் கெடுப்பிடிப் போரிலிருந்து சமாதான சகவாழ்வுக்கு மாறுவது, யுத்தப் பதட்டத்திலிருந்து முடிவமைதிக்கும், சாதாரண பரஸ்பர நலன்மிக்க கூட்டுறவுக்கும் மாறுவது என்பதை எய்துவதாகும். மாபெரும் லெனினின் கட்டளைப்படி யுத்த அபாயத்தை முற்றாகவே ஒழித்துக்கட்ட முடியாவிட்டாலும்கூட, நிச்சயமாகவே சமாதானத்திற்கு இட்டுச் செல்லும், சாத்தியமான பல முடிவுகளையும் நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்கின்றோம்.

இவ் விதத்தில் கடந்த ஐந்தாண்டுகால முன்னேற்றங்கள் உண்மையாகவே நிரந்தரமான முக்கியத்துவமிக்கதாகும். எமது தேசத்திலும், சகோதர சோஷலிஸ நாடுகளிலும் சமாதான நிர்மாண உறுதிக்கும் அனைத்து மக்களுக்குமான சமாதான, பாதுகாப்பு உறுதிக்கும் சாத்தியமானதெல்லாம் செய்யப்பட்டுள்ளன."

## சமாதானத் திட்டத்தின் பெரும் வெற்றி

சமாதானத் திட்டம் எனப் பெயர் பெற்ற 24வது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரசின் வெளிநாட்டுக் கொள்கை, இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்னர் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியால் ஏற்படுத்தப்பட்ட வேறெந்த ஆலோசனைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யும் விட முழுமையானதும் பரந்த செயல் விளைவையுடைய சக்தியும் கொண்டதாகும். இத் திட்டத்தை எடுத்துக்கொள்ளும்போது காங்கிரஸ் சோவியத் யூனியனின் ஆதாயத்தை மட்டுமல்லாமல் ஏனைய நாடுகளின் நன்மையையும் கூட கருத்திற் கொண்டிருந்தது. கெடுபிடிப் போரைக் கட்டவிழ்த்துவிட்ட பிற்போக்கு ஏகாதிபத்திய வட்டங்கள், 20 ஆண்டுகளுக்கு மேலாக அதன் 'சுருதி' மாறுமல் பார்த்துக்கொண்டுள்ளன. இரு பகுதிகளுக்கு மிடையிலான உறவுகளைப் பரஸ்பரம் அவநம்பிக்கையும் விரோதமுமே தீர்மானித்தன.

ஐந்தாண்டுகளுக்கு முன் சமாதானத் திட்டம் உருவாக்கப்பட்டபோது மேற்கின் மனிதர்கள் பலர் அதைச் சாதிக்க முடியாது என்றே எண்ணினர். ஆனல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், சோவியத் மக்களும் எதிர்காலத்தை சர்வானுகூலமிக்கதாகவே தரிசித்துவந்தனர். போர்ப்பயமுறுத்தலை எதிர்த்த நாடுகளின் குழுக்கள், அரசியல் ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் வல்லமையும் செல்வாக்கும் அதிகரித்துவரும் சூழலில் பதட்ட நிலையில் தணிவைக் கொண்டு வருவதென்பது சாத்தியமானதே என்ற முடிவுக்குக் கட்சி வந்தது. அல்லாமலும் இதற்கேற்ப முதலாளித்துவ உலகிலும் கூட யதார்த்த அணுகுமுறை செல்வாக்குப் பெற ஆரம்பித்தது. முதலாளித்துவ உலகின் சில பகுதிகள் கெடுபிடிப்போர் காலாவதியான ஒன்று என உணரத் தொடங்கியதோடு, மாருக அதிவிவேகமான அணுகுமுறையும், யதார்த்த மார்க்கமும் தேவை என்பதையும் உணர்ந்தன. அதனல்தான் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு விரிவான ''சமாதான முயற்சிகளை'' ஏற்படுத்த காலம் கனிந்து விட்டதாக முடிவு செய்தது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் சமாதானத் திட்டம் மிக அத்தியாவசிய, அதி உக்கிரப் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டே உருவாக்கப்பட்டது. எனவே பதட்ட நிலையைப் பேணு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வோரின் மூர்த்தண்யமான எதிர்ப்பின் காரண மாக, சமாதானத் திட்டத்தின் செயலாக்கத்திற் காகப் போராடுவது இன்றியமையாததாகும். அந் தப் போராட்டம் அன்றும் இன்றும் மிகக் கடுமை யானதே. எவ்வாறுயினும் குறிப்பிடத்தக்க பலன் கள் காணப்பட்டுள்ளன. இப் பலன்களைக் கண்ட வர்களைவிட சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், லியோனிட் பிரெஷ்னேவினுல் தலைமை தாங்கப் படும் அதன் மத்திய குழுவும் அவ்வாறுன எதிர்ப் புக்கு முகங் கொடுப்பதில் அதிக பாராட்டைப் பெறுகின்றன.

சமாதானத் திட்டத்தின் முதலாவது அம்சத் திற்கேற்ப சர்வதேச சூழலை நச்சுப்படுத்துகின்ற இராணுவ மோதல் நிலைமைகளை முற்று முழுதாகப் பெறுகின்ற யுத்த கொதி களங்களை இல்லாமலாக் குவதற்கு சோவியத் யூனியன் திடமான முயற்சியை மேற்கொண்டது.

அந் நேரத்தில் உலகின் மிகக் கொடூரமான கொதிகளமாயிருந்தது வியத்னுமே. இரண்டாம் உலக யுத்தத்தின்பின் தேசிய விடுதலைப் புரட்சியை நசுக்கிவிட்டு ஒரு சோஷலிஸ நாட்டை ஆயுத சக்தி யால் அழித்து விட ஏகாதிபத்தியவாதிகள் மாபெரும் முனைப்பை மேற்கொண்டது அங்குதான். ஆனுலும் அவர்களின் முயற்சிகள் தலை குப்புற விழுந்து மண்கவ்வுவதாகவே முடிந்தன.

ஊடுருவல் மிலேச்சர்களின் இராணுவங்களை யும், அவற்றை மேற்கொண்டவரின் திமிரையும் விட சோஷலிஸ நாடுகளினதும் அகில முற்போக் காளர்களினதும் இடைவிடாத உதவியுடன் கூடிய வியத்னும் புதல்வர்களின் வீரமும் தன்னலங்கரு தாத தியாகமும் இராட்சத வலிமை மிக்கதென் பது நிரூபிக்கப்பட்டது. ஆமாம் விடுதலையினதும் உணர்வின் ஜீவன் மகத்தான வெற்றி கொண்டா யிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாவோஸ், பிற்போக்கிற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரான போராட்டத்தில் பெரு ஜெயம் பெற்றது. யுத்தக் கொதிகளங்களின் பிரதிபலனுக முழுத் தென்-கிழக்கு ஆசியாவுமே முனைப்பாகத் தன்னை வெளிக்காட்டிற்று.

வியத்னும் தொழிலாளர் கட்சியின் மத்திய குழு முதற் செயலாளரான லீ துவான் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி 25வது காங்கிரஸில் உரையாற்றுகையில் வியத்னும் மக்கள் தமது நாலாயிரம் ஆண்டுகால வரலாற்றில் இப்போதுதான் மகிழ்ச்சியின் அனுபவத்தை அனுபவிப்பதாக அறிவித்தார். தமது தேச வரலாற்றின் வசந்த யுக வாசல் திறக்கப்பட்டுவிட்டதாக அவர் பூரித்தார். அதுவே சமாதான, ஐக்கிய, சுதந்திர, சோஷலிஸ வியத்னுமைக் கட்டியெழுப்பும் அற்புத யுகம்.

அந்தப் பணிக்கு அனுசரணையாக அனைத்து ஆதரவையும் வியத்னுமுக்கு அளித்தோருக்குத் தன் நன்றியறிதலைத் தெரிவிக்கும் போது லீ துவான் இப்படிக் கூறினர்:

> ''கடந்த காலத்திற் போன்றே முன்னெடுத்துப் பதிக்கப்படும் ஒவ்வொரு சுவடும், வியத்னும் புரட்சியின் ஒவ்வொரு வெற்றியும் கூட சோவியத் யூனியனின் தனித்துவ சரித்திர நிகழ்வுகளுடன் இரண்டற இணைந்துள்ளதை வியத்னும் மக்கள் பூரணமாக உணர்கின்றர்கள். தாய்த்திருநாட்டைப் பாதுகாக்கும் போரில்-ஐக்கிய அமெரிக்க குரூர தாக்குதல்களுக்கு ஈடுகொடுத்து ஈற்றில் பூரண வெற்றியீட்டியதை இங்கு குறிப்பிட வேண்டும். சோவியத் யூனியனின் சக்திமிகு ஒத்துழைப்பையும், எல்லாவித, அபரிமித, மதிப்பார்ந்த, செயல்மிக்க ஆதரவுமின்றி இந்த வாகை சூடப்பட்டிருத்தலியலாது.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> "தாம் இழந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பவும், அதை மேலும் வளர்க்கவும், முழுத் தேசத்திலும் சோஷலிஸத்தை நிர்மாணிக்கவும் வியத்னும் மக்களுக்கு இப்பொழுது சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், சோவியத் அரசும், சோவியத் மக்களும் தமது மனம்பூரித்த உதவிகளை வழங்குகிறார்கள். தேசிய விடுதலைக்கும், சோஷலிஸத்திற்கும் வியத்னும் மக்கள் தம்மை அர்பணித்துக் கொண்டுள்ளதைப் போன்றே அவர்கள் மகிமைமிகு வியத்னும்-சோவியத் நட்புறவையும் மதிக்கிறார்கள். புகழ் பூத்த மெய்ப்பொருளான பாட்டாளிவர்க்க சர்வதேசியத்திற்கிணைந்த இவ்வாறான உதவிகளையும் துணையையும் வியத்னும் புதல்வர்கள் என்றும் நினைவிற் கொள்வர்."

தென் வியத்னும் குடியரசின் தற்போதைய புரட்சி அரசாங்க வெளிநாட்டு அமைச்சரான திருமதி நிகுயன் தி பின் மிக உக்கிரத்தோடு குறிப்பிட்டதாவது:

> "அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போர் வெறித் தாக்குதலிலிருந்து தமது தாயகத்தைக் காப்பதில் தென் வியத்னுமிய மக்கள் தம் முனைப்பான யுத்தத்திலும், ஒரு புதிய வாழ்வைக் கட்டியெழுப்பும் தற்போதைய முயற்சியிலும் அவர்கள் என்றும் வீரமிகு சோவியத் மக்களின் வெற்றிகளின் ஆதாரத்திலிருந்து வலிமையையும், அனைத்து வெற்றி நம்பிக்கைகளையும் பெற்றுள்ளனர். அதற்கு மேலாக உண்மையான சர்வதேசிய மெய்ப்பொருளுக்கேற்ப இயங்குவதில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், அரசாங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் மக்களும் வியத்னுமுக்கு அளப் பரிய முனைப்பான உதவியையும் துணையையும் மாறுதவிதத்தில் அன்றும் வழங்கினார்கள், தொடர்ந்தும் வழங்குகிறார்கள். வியத்னும் மக்கள் சமீபத்தில் ஈட்டிய பெரு வெற்றிக்கு சோவியத் யூனியனும் ஏனைய சகோதர சோஷலிஸ நாடுகளும் வழங்கிய மகத்தான உதவிகளை அவர்கள் என்றும் நினைவிற் கொள்வர்.''

உலக சமாதானத்திற்கு அச்சுறுத்தலை உருவாக்கிய பிறிதொரு யுத்தக் கொதிகளம்தான் மத்திய கிழக்கு. ஐக்கிய அமெரிக்காவின் ஒத்தாசையுடன் இஸ்ரேல் தொடர்ந்தும் அரபுப் பிரதேசங்களை வைத்துக் கொண்டுள்ளது. அரபு மக்களின் இதற்கான போராட்டத்திற்கு நேர்மையான பொருள் ரீதியான உதவியை சோவியத் யூனியன் வழங்குவதுடன், சமாதானம்; நீதி என்பவற்றின் பொருட்டு மத்திய கிழக்கு மோதல்களுக்கு ஒரு சமாதானத் தீர்வைக் காண்பதற்காக மிகக் கூடிய அளவு முயற்சியை சோவியத் ராஜதந்திரம் மேற்கொண்டுவருகிறது.

இது தொடர்பாக ஈராக்கின் அரபு சோஷலிஷ மறுமலர்ச்சிக் கட்சியின் ஆட்சிக் குழு அங்கத்தினரான ஸெய்ட் ஹைதார் காங்கிரஸில் உரை நிகழ்த்தும் போது இறுவாறு குறிப்பிட்டார்:—

''ஏகாதிபத்தியத்திற்கும், ஸியோனிஸத்திற்கும், பிற்போக்கிற்கும் எதிரான போராட்டத்திலும்; ஐக்கியம், தேசிய சுதந்திரம், சமூக முன்னேற்றம் என்பவற்றிற்கான போராட்டத்திலும் எமது அரபு நாட்டிற்கு சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும், சோவியத் அரசும் என்றென்றும் தமது உறுதியான உதவியை நல்கிவந்துள்ளளர். ...........அரபுப் புரட்சியின்போது விசேடமாக பலஸ்தீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சியின் போது அவர்களளித்த ஒத்துழைப்புக்கும் ஒருமைப்பாட்டிற்கும் எமது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.''

இவ்வாறே சிரியா ஜனாதிபதியான ஹாஃபிஸ் அல்—அஸாத் சோவியத் வழங்கிய ஒத்துழைப்புகளுக்காகத் தமது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துள்ளார். லியோனிட் பிரெஷ்னேவிற்கு அனுப்பியதோர் கடிதத்தின் வாசகம் இது:-

''சிரியா அரபுக் குடியரசு மக்களான நாம் ஸியோனிஸ ஊடுருவலுக்கு, எதிராகவும், ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பிரதேசங்களின் விடுதலைக்கும், பலஸ்தீன அரபு மக்களின் உரிமைகளை அங்கீகரிப்பதற்குமான அரபு தேசத்தின் போருக்கு ஆதரவாக சோவியத் யூனியன் மேற்கொண்ட கொள்கை நிலைபாட்டிற்கு எமது உன்னத கௌரவத்தை தெரிவித்துக் கொள்வதுடன், எமது பலதரப்பட்ட போராட்டங்களுக்கும், நிர்மாணப் பணிகளுக்கும் அவர்களளித்த ஒத்துழைப்பிற்கும் நாம் நமது நன்றியறிதலையும் செலுத்துகிறோம்.''

சமாதானத்திட்ட இரண்டாம் அம்ச ஷரத்துகளுக்கேற்ப சோவியத் யூனியனும் அதன் சகோதர சோஷலிஸ நாடுகளும் ஐரோப்பாவில் முடிவமைதி, சமாதானம் என்பவற்றிற்கானதோர் அடிப்படைத்திருப்பத்திற்காக உழைத்துள்ளன. 33 ஐரோப்பிய நாடுகளினதும், ஐக்கிய அமெரிக்காவினதும் உயர்மட்டத் தலைவர்கள் பங்குபற்றிய, ஹெல்சிங்கியில் ஐரோப்பாவின் பந்தோபஸ்து கூட்டுறவு சம்பந்தமாக நடந்த மகாநாடு தனது மூன்றாவதும் கடைசியானதுமான கட்டத்தை நிறைவேற்றியுள்ளது. அங்கு நிறைவேறிய கடைசிக் கூட்டத்திற்கு ஆதரவாக 1975 ஆகஸ்ட் 1ம் திகதி உயர்மட்டத் தலைவர்கள் 35 பேர் தமது கையெழுத்துக்களைப் பொறித்துள்ளனர். சமாதானம், பந்தோபஸ்து, பரஸ்பர அனுகூலமிக்க ஒத்துழைப்பு என்பவற்றின் மீதான ஒரு கூட்டு ஒப்பந்தமே அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனல், ஹெல்சிங்கி மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முக்கியத்துவம் எவ்விதத்திலும் ஐரோப்பாவுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்டதல்ல. இது ஐரோப்பாவில் யுத்தம் என்ருல் அது உலக யுத்தம் என்றே ஆகும் என்பதால் மட்டுமல்ல (மனிதகுல வரலாற்றில் இரு உலக யுத்தங்களும் ஐரோப்பாவிலேயே வெடித்தன. இப்போதும் முதலாளித்துவம், சோஷலிஸம் என்ற இரு வேறு உலகங்களின் ஆயுத சக்திகள் முனைப்புடன் எதிரெதிர் நிற்கும் களமும் இது தான்). ஐரோப்பிய முடிவமைதி சர்வதேசிய ரீதியில் பலன்மிக்க செல்வாக்கை உருவாக்கியதுடன் ஏனைய பகுதிகளில் பதட்ட நிலைத் தணிவையும் சாத்தியமாக்கிற்று என்பதனுலும்தான், இதன் பயனுக இது ஏனைய அம்சங்களுடன் கூட தேசிய விடுதலை இயக்கங்களை வளர்க்கவும் உதவிபுரிந்துள்ளது.

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளரான பீட்டர் கெனமன் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸில் உரையாற்றும்போது சர்வதேச அரங்கில் நிலவும் தற்போதைய சாதகமான அபிப்பிராயங்கள், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸில் முன்வைக்கப்பட்ட சமாதானத் திட்டத்தை உறுதியாக நடைமுறைப்படுத்துவதற்கான பெருமளவு தூரத்தை சோ.க.க.வின் எத்தனையோ முன் முயற்சிகளால் கடந்துள்ளது என்ருர்.

பின்வரும் அபிப்பிராயத்தை வெளியிட்டார் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான ஸ்ரீபாத் அம்ரித் டாங்கே:

''முடிவமைதிக்கான, ஐரோப்பாவில் பந்தோபஸ்து, கூட்டுறவு என்பவை பற்றி ஹெல்சிங்கி மகாநாட்டின் இறுதி முடிவு சமாதானத் திட்டத்தை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் லெனினிய வெளிநாட்டுக் கொள்கையையும் அற்புதமாக ஸ்திரப்படுத்தும் ஒரு திடமான பிரகடன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகும், அது ஏகாதிபத்திய விரோத ஜனநாயக சக்திகளின் போராட்டத்தைக் கட்டுப்படுத்தாது. முடிவமைதி என்பது இச் சக்திகளின் போராட்டத்திற்கும், ஒற்றுமைக்கும் உத்வேகமளிப்பதுடன் இந்த ஒற்றுமையை மேலும் நெருக்கமானதாகவும் திடப்படுத்துகிறது.

சிலி கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழுவினதும், மத்திய குழுவின் செயலவையினதும் உறுப்பினரான அமெரிகோ ஸொரில்லா தமதுரையில்

> ''முடிவமைதிக்கான முயற்சிகளுக்கு நாம் எமது வாழ்த்தை வழங்குகிறோம். இந்தக் கடமையின் தொடராக ஒவ்வொரு வெற்றிக் சுவடு வதியும்போதெல்லாம் எழும் பாசிஸ்டுகளின் சீற்றம், இப்பணி முற்போக்காளரின் அக்கறையிலேயே தங்கியுள்ளதைத் துலாம்பரப் படுத்துகிறது'' என்றார்.

சமாதானத் திட்டத்தின் மூன்றுவது அம்சம் அணு மற்றும் குறிப்பாக பயங்கரமான ஆயுத வகைகளைக் குறைப்பதற்காகத் தீட்டப்பட்ட பல பகுதிகளைக் கொண்டுள்ளது. கடைசி வேளையில் அணுவாயுத யுத்தத் தடுப்பிற்காக மிக முக்கியமான சோவியத்-அமெரிக்க ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டது, சோவியத் யூனியனுக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்குமிடையேயான முதலாவது ஒப்பந்தம் கண்டம்விட்டுக் கண்டம்பாயும் அணுவாயுதக் கட்டுப்பாட்டை உள்ளடக்கியதுடன், அவை இம் மார்க்கத்தில் மேலும் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றன. விஷக்கிருமி, நச்சு ஆயுதங்களின் ஆராய்ச்சி, உற்பத்தி, குவிப்பு என்பவற்றைத் தடுப்பதற்கும், அவற்றை அழிப்பதற்குமான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. சமீபத்தில் நடந்த ஐ. நா. பொதுச் சபையின் 3வது அமர்வில் அணு ஆயுதப் பரீட்சைகளின் முழுமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான, பொதுப்படையான தடுப்பிற்காக சோவியத் யூனியனால் முன்மொழியப்பட்ட தீர்மானம் ஒன்று ஏற்றுக்கொள்ளப்பட்டதோடு, அவ்வாருன சர்வதேச ஒப்பந்தத்திற்கானதோர் நகலும் முன் வைக்கப்பட்டது.

சமாதானத் திட்டத்தின் நாலாவது அம்சம் தொடர்பாக எல்லாவித ஆயுதத்தடுப்பிற்காக சோவியத் யூனியன் சக்திமிக்க வழிகளை மேற் கொண்டு வருகிறது, ஐ. நா. பாதுகாப்புச் சபையின் நிரந்தர அங்கத்துவ நாடுகள் தமது இராணுவ பட்ஜெட்டைப் 10சத வீதத்தால் குறைப்பதுடன் அதன் ஒரு பகுதி வளர்முக நாடுகளின் அபிவிருத்திக்கான உதவிகளுக்காகவும் வழங்கப்பட வேண்டும் என்பதையும் சோவியத் யூனியன் முன்மொழிந்தது. சோவியத் முன்முயற்சியினுல் உலக ஆயுத ஒழிப்பு மாநாடொன்றை நடத்துவதற்கான உறுதியை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தக் கலந்துரையாடலில் கூடியயவரை அதிகளவிலான நாடுகளைப் பங்குபற்றச் செய்வதன் மூலம் அவசரமான ஆயுத ஒழிப்புப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண மெய்யாகவே இம்மாநாடு பெரும் பங்களிப்பைச் செய்யும் எனலாம்.

நாடுகள் தமது இராணுவ பட்ஜெட்டை அதிகரித்துவருவதற்கும் இராணுவ சக்தியை வலுப்படுத்துவதற்கும் முடிவைக் காணும்படி மீண்டும் மீண்டும் சோவியத் யூனியன் . த்தனை ஆண்டுகளாக வலியுறுத்தி வந்துள்ளது. எல்லாத் தேசங்களும், குறிப்பாக பெரியவை மனுக்குலத்தையே நிர்மூலமாக்கவல்ல நவீன ஆயுதங்களுக்கான உபாயங்களை மேற்கொள்ளக்கூடாது என்பது மிக இன்றியமையாததாகும். இப்போதைய விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சி மட்டத்தாலும் அதற்கான வசதிகளாலும் அணுச்சக்தி ஆயுதங்களைவிட அதிக நாசம் விளைவிக்கவல்லவற்றை உற்பத்திசெய்ய முடியும். அவ்வாருன கொடிய ஆயுதங்கள் உருவாவதைத் தவிர்ப்பதன் அவசரம் அதிகரித்து வருகிறது. 'மனித வர்க்கத்தையே ஒழித்துவிடவல்ல ஆயுத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சியையும், அவ்வாறன ஆயுதங்களின் நவீன வழிவகைகளையும் தடுப்பது' சம்பந்தமான சோவியத் கோரிக்கையை ஐ. நா.வின் 30வது பொதுச்சபை அமர்வு ஆராய்ந்து ஏற்றுக் கொண்டது. அந்த தீர்மானத்திற்கு ஆதரவாக 112 நாடுகள் வாக்களித்தன.

சமாதானத் திட்டத்தின் ஐந்தாவது அம்சத்திற்கியைய மிகவும் வெட்கக்கேடான காலனித்துவ அடிமைத்தனத்தின் எச்சசொச்சங்களையும் ஒழித்துக்கட்டிவிடுவதற்காகச் சோவியத் யூனியன் மிக உச்சத்துக்கே சென்று தன்னலானதெல்லாம் செய்தது.

ஆபிரிக்காவில் காலனித்துவ அமைப்பின் வீழ்ச்சியை எழுபதாம் ஆண்டுகளின் முதற்பாதியில் காணக்கூடியதாயிற்று. போர்த்துக்கலில் பாசிஸ்ட் ஆட்சி வீழ்த்தப்பட்டதன் மூலமும் அதன் காலனிகளிலுள்ள மக்களின் வீரமிகு போராட்டத்தின் மூலமும் கடைசியான காலனித்துவ சாம்ராஜ்யமும் தூக்கி எறியப்பட்டது. சுதந்திரத்திற்கான வீரப் போராட்டத்தில் முடிசூடிய கினி பிசாவு, கேப்வேர்டே தீவுகள், மொஸாம்பிக், அங்கோலா மக்களின் வெற்றி கேட்டு சோவியத் மக்கள் ஆர்வத்துடன் ஆர்ப்பரித்தனர். சோவியத் யூனியன் எக்காலத்தும் அந்த மக்கள் பக்கமே நின்றதுடன், போரிலீடுபட்ட தேசபக்தர்களுக்கு முடிந்த அனைத்து உதவிகளையும் வழங்கிவந்தது. அங்கோலா விடுதலை இயக்க (எம்பிஎல்ஏ) அரசியற்குழு அங்கத்தவரும், உள்ளூராட்சி அமைச்சருமான நீடோ அல்விஸ் படிஸ்டாவின் தலைமையில் அங்கோலா மக்கள் குடியரசின் தூதுக்குழுவொன்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி 25வது காங்கிரசுக்கு சமூகமளித்தது. காங்கிரஸிற்கும், சோவியத் மக்களுக்கும் தமது சகோதர வாழ்த்துக்களைத் தெரிவித்தபோது 'உலக சமாதானத்திற்கும், தேசிய விடுதலை இயக்கத்திற்கும் சோவியத் மக்களின் நேர்மையான அரசியல் மற்றும் பொருளாயத உதவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும், பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் உறுதியான கொள்கைப் பிரகடனத்திற்கு அவர்கள் மேற்கொண்ட பிரயத்தனங்களையும் விடுதலை இயக்கமும், அதன் மக்களும் என்றும் மறக்க மாட்டார்கள் என்று குறிப்பிட்ட அவர் மேலும் பேசியதாவது:-

''எமக்கு நியாயமான, பொருளாயத உதவிகளையெல்லாம் வழங்கிய— வழங்கும் சோஷலிஸ நாடுகளையெல்லாம் நாம் இங்கு பட்டியல் போட விரும்பவில்லை. எவ்வாறாயினும் சோவியத் யூனியனின் தன்னலங் கருதாத உதவிகளையும், எமது கியூபா சகோதரர்களின் திரமிக்க நடைமுறைப் பணிகளையும் பற்றி சிறப்பாகக் குறிப்பிட விழைகிறோம். எமது மக்களுக்கு எதிராக ஏகாதிபத்தியத்துடன் சேர்ந்து ஒரேயொரு சோஷலிஸ நாடுதான் (மக்கள் சீனக் குடியரசு—ஆ-ர்) குழிபறித்தது என்பதை இங்கு வேதனையுடன் குறிப்பிடுகிறோம்.

''போர்த்துக்கேய காலனித்துவத்திற்கெதிரான எமது வெற்றிக்காக சோவியத் யூனியனுக்கே நாம் நன்றி செலுத்த வேண்டும். எனவே, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், சோவியத் மக்களுக்கும் எல்லா சோஷலிஸ நாடுகளுக்கும் இந்த மேடையிலிருந்து எமது ஆழ்ந்த கௌரவத்தையும் நன்றியையும் செலுத்த என்னை அனுமதியுங்கள்.''

எல்லா நாடுகளுக்கிடையேயுமான பரஸ்பர உதவிமிக்க சமாதான கூட்டுறவை அதிகரிக்க சோவியத் யூனியனால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் மிகப்பிரசித்தமானதே. இது சமாதானத் திட்டத்தின் ஆறாவது அம்சத்தில் குறிப்பிடப்படு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. கடந்த ஐந்தாண்டு காலமாக மேற்குலகின் எல்லா பெரிய நாடுகளுடனும் சோவியத் யூனியனின் உறவுகள் அனுகூலமாகவே வளர்ச்சியுறுகின்றன. குறிப்பாக சோவியத்—அமெரிக்க உறவின் அபிவிருத்திக்கானதோர் திருப்பமும் ஏற்பட்டுள்ளது. இது மாபெரும் முக்கியத்துவமிக்கதாகும்.

சோவியத் யூனியன், ஐக்கிய அமெரிக்காவுடன் கூட்டுக் கள்ளத் தொடர்பு கொண்டுள்ளதாகவும், அவ்விரு மாபெரும் வல்லரசுகளும் உலகைத் துண்டாடுவதற்கான ஒப்பந்தத்திற்கு வந்துள்ளதாகவும் ஒப்பாரியிடும் சீனப் பிரசாரம் முற்றிலும் அபத்தமானதாகும்.

சோவியத் யூனியன் ஐக்கிய அமெரிக்காவுடன் ஏற்படுத்திக் கொண்ட உறவுகளால் அதன் சுயாதிபத்தியத்திலோ, அதன் நியாயமான விருப்பங்களிலோ, அல்லது அதன் நேச நாடுகளையோ, நண்பர்களையோ அல்லது முழு உலக மக்களையோ விட எவ்வித சலுகையையும் பெற்றுவிடவில்லை. முற்றுமுழுதாக நோக்குவதானால் சோவியத்—அமெரிக்க உறவுகளின் வளர்ச்சி கெடுபிடிப்போர் முனைப்பிலிருந்து சமாதான சகவாழ்வுக்கான மிகச் சிறிய நாடுகளுட்பட உலகின் எல்லா நாடுகளின் அக்கறையையும் பிரதிபலிக்கிறது. சோவியத்—அமெரிக்க உறவுகளின் சமூக நிலையிலிருந்து சிறிய நாடுகள் ஆதாயம் பெற்றுள்ளன. ஏனெனில் புதிய நிபந்தனைகளின்படி தீங்கின்றி அந்நாடுகளின் நிகழ்வுகளிலோ வாழ்விலோ ஏகாதிபத்தியம் தலையிடுவதென்பது மிகவும் கஷ்டமாகிவிட்டது.

இதன் தொடர்பாக, சோஷலிஸ கியூபாவின் கம்யூனிஸ்ட் தலைவரும் பிரதமருமான பிடெல் கஸ்ட்ரோ, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸில் குறிப்பிட்டது சோவியத் கம்யூனிஸ்டுகளாலும் அங்கிருந்த ஏனைய வெளிநாட்டுப் பிரமுகர்களாலும் வீறுடன் வரவேற்கப்பட்டது:—

> ''லெனினிய கொள்கையைப் பற்றுறுதியோடு பின்பற்றிவரும் சோவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யத் யூனியன் உலகில் சமாதானத்தின் நம்பிக்கைமிகு கொத்தளமாக இருக்கும் அதே வேளையில், ஏகாதிபத்தியத்தின் கபளீகர பேராசைக்கு எதிராக நின்று நலிவுற்ற மக்களைப் பாதுகாக்கும் நம்பிக்கையான கேடயமாகவும் திகழ்கிறது.

"சோவியத் யூனியன் மட்டும் இல்லாதிருந்தால் மூலப் பொருள்களுக்கும், சக்தி நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்த முதலாளித்துவச் சக்திகள் உலகை மீண்டும் கூறு போடுவதற்குச் சிறிதும் தயங்கியிருக்காது. அவ்வாறே சோவியத் யூனியன் மட்டும் இல்லாதிருந்தால், சிறுநாடுகள் இன்று அனுபவிக்கும் சுதந்திரத்தையும், தமது இயற்கைச் செல்வத்தின் மீது அதிகாரம் பெறுவதற்கான வெற்றிகரமான போராட்டத்தையும்; அல்லது அந் நாடுகளின் குரல் உலக நாடுகளின் அரங்கில் ஒலிப்பதற்கான சாத்தியத்தையும் கூட நினைத்தும் பார்த்திருக்க முடியாது.

"சமாதானத்திற்கான நம்பிக்கைமிகு உத்தரவாதம், கொடியதோர் உலக தகனத்திற்குள் விழுங்துவிடாமல் இளைய சந்ததி பெற்ற பெரும் பேறு என்பன உட்பட சோவியத் யூனியனில் லெனினிய கொள்கைகள் ஈட்டிய பெருவெற்றிக்கும் அவற்றை சோவியத் வெளிநாட்டுக் கொள்கையில் திடமாகக் கைக்கொள்வதில் பெற்ற ஜெயத்திற்கும் உலக மக்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ள தோடு, எல்லாத் தேசங்களின் கூட்டுறவுணர்வு பெரு வெற்றியீட்டும் ஒரு எதிர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தின் மீதும் நம்பிக்கை கொண்டுள்ளது.

''வேறெவரின் சார்பாகவும் நான் பேசவில்லை. ஆனால் சோவியத் யூனியன் உருவான நாள் தொட்டு தீமையையும் அடக்குமுறையையும் எதிர்த்துப் போராடும் ஒவ்வொரு புத்திரனும் அவன் ஐரோப்பாவில், ஆசியாவில், ஆபிரிக்காவில், லத்தீனமெரிக்காவில், அல்லது எங்கிருப்பினும் எமது மக்களைப்போலவே சோவியத் கம்யூனிஸ்டுகளின் உதவிகளையும் ஒருமைப்பாட்டையும் என்றென்றும் மனங்கொள்வான். உன்னத உள்ளங்கள் எங்கெல்லாம் உள்ளனவோ, நீதி மிக்க உணர்வு எங்கெங்கெல்லாம் நிலவுகிறதோ அங்கங்கெல்லாம் இந்த உண்மை அழியாதிருக்கும்.

''ஒற்றைக் கரத்தால் ஒளிமிக்க சூரியனை மறைத்தலும் கூடுமோ? மெய்யான வரலாறு என்பது பாஸிஸ்டுகள், பூர்ஷ்வாக்கள் அல்லது மாவோவாதிகளைப் போன்ற பிற்போக்குவாதிகளாலோ, பழிக்கஞ்சாதோராலோ, சமாதான விரோதிகளாலோ அல்லது துரோகிகளாலோ என்றும் எழுதப்படுவதில்லை. ஏனெனில் அந்த வஞ்சகரை வரலாறே ஒதுக்கி வீசிவிடுகிறது.''

## மேலும் போராட்டத்திற்கான திட்டம்

வெளிநாட்டுக் கொள்கைப் போக்கில் சோவியத் யூனியனின் உடனடிக் கடமைகள்பற்றி சோவியத்கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் மிகத் தெளிவாக வரையறுத்துள்ளது. சமாதானம், சர்வதேச ஒத்துழைப்புக்கான போராட்டம், மக்களின் விடுதலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம் என்பவற்றிற்கான நேரார் திட்டத்தை காங்கிரஸ் நிர்ணயப்படுத்தியுள்ளது. அதைப் பற்றிக் குறிப்பிடும்போது லியோனிட் பிரெஷ்னேவ் ''யுத்த மற்றும் ஆக்கிரமிப்புச் சக்திகளுக்குக் கடிவாளமிடும் விதத்திலும், உலக சமாதானத்தை உறுதிப்படுத்தும் வண்ணமும், விடுதலை, சுதந்திரம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்கான மக்களின் உரிமையை நிச்சயிக்கும் ரீதியிலும் இக் கொள்கையை நாம் பலமடங்கு இரட்டிப்பு ஆற்றலுடன் முன்னெடுத்துச் செல்வோம்'' என்ருர்.

## சோஷலிஸ நாடுகளுடன் உறவுகள்

சோஷலிஸ நாடுகளுடனுன உறவுகளில் சோவியத் யூனியன் ஒவ்வொருவரின் முன்னேற்றம் கருதிய, உண்மையான சமத்துவ அக்கறை உணர்வுமிக்க பணிகளை மேற்கொள்வதிலும், சர்வதேச, அதே வேளையில் தேசிய அக்கறைகளுக்கிையைந்த முடிவுகளை எய்துவதிலும் அத்தாட்சிமிக்க வழியையே பின்பற்றும். இவ்வாறுதான் பல்கேரியா, கியூபா, செக்கோஸ்லவாக்கியா, ஜெ. ஜ. கு., ஹங்கேரி, மங்கோலியா, போலந்து, ருமேனியா, வியத்நாம், யூகோஸ்லாவியா முதலிய நாடுகளுடனுன எமது உறவுகளைத் தொடர்ந்து பேணி வருகிறேம்.

சோஷலிஸ சமுதாய நாடுகளுடன் சோவியத் யூனியன் எந்த அடிப்படையில் தனது உறவைக் கட்டியெழுப்பி வருகிறது என்பது காங்கிரஸில் பேசிய பிடல் கஸ்ரோவின் பின்வரும் உரையால் துலாம்பரமாக விளங்குகிறது.

> ''சோவியத் யூனியன் எமது மக்களுக்கு உறுதிமிக்க உதவிகளை வழங்கினுலும், அதற்காக எந்த நிபந்தனைகளையும் அது விதிக்கவில்லை, எத்த கட்டளைகளையும் பிறப்பிக்கவுமில்லை. ஆயிரமாயிரம் ஆண்டுக்கால அதிகார மமதையும், இராணுவ சக்தியும் மிக்க வரலாற்றுப் போக்கின் சர்வதேச

உறவுகளிலேயே இவ்வாறாக ஒரு மாபெரும் நாட்டிற்கும் இன்னொரு சின்னஞ்சிறு நாட்டிற்குமிடையே இத்தனை சகோதரத்துவ உறவு நிலவியதே இல்லை. மக்களுக்கு இடையேயான இவ்வாறான உறவுகளைச் சாத்தியமாக்கியது எது? சர்வநிச்சயமாக அது சோஷலிஸம் என்ற சக்திதான்!''

கடந்த ஆண்டுகளெல்லாம், சோஷலிஸ நாடுகள் நிலையான முன்னேற்றத்தைக் கண்ட ஒரு முன்னேறிய சோஷலிஸ சமுதாயத்தை கட்டியெழுப்ப, கம்யூனிஸத்தை நிர்மாணிக்க மிகுந்த திடசித்தத்துடன் முன்னேறி வந்த ஆண்டுகளே. கடந்த ஐந்தாண்டுகளில் எண்ணற்ற வெற்றிகள் ஈட்டப்பட்டுள்ளன: கடந்த மூன்று தசாப்தங்களாக ஒரு சோஷலிஸ நாட்டை நிர்மூலமாக்கிவிடவும், தேசிய விடுதலைப் புரட்சியை நசுக்கிவிடவுமான ஏகாதிபத்தியத்தின் மாபெரும் முனைப்புகளுக்கெதிரான போரில் வியத்னாமிய மக்கள் பெரு வெற்றி ஈட்டினார்கள்; எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட சுயாதிபத்தியமிக்க, சமத்துவமிக்க நாடாக ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு உலக அரங்கில் தலைநிமிர்ந்தது; கியூபா மண்ணில் சோஷலிஸம் அசைக்க முடியாத அடி பதித்ததுடன் கியூபாவின் சர்வதேச அந்தஸ்தும் வலிமையாக்கப்பட்டது.

சமூக உற்பத்தி வளர்ச்சியுடனும், வாழ்க்கைத்தர, கலாசார முன்னேற்றத்தின் நிலைத்த உயர்ச்சியுடனும் சோஷலிச நாடுகளின் மேலும் அதிக அரசியல் அந்தஸ்து கெட்டிப்படுத்தப்பட்டது.

இன்று ஐரோப்பாவிலும், ஆசியாவிலும், சுயாதிபத்தியமிக்க, சுதந்திர நாடுகளின் தன்னிச்சையான ஒன்றியமாக சோஷலிஸ சமுதாயம் நிலைத்துவிட்டது. தமது செல்வத்தையோ, ஏனைய நாடுகளினதும் மக்களினதும் உழைப்பையோ சுரண்டாத சோஷலிச தேசங்களான அவை தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையையும் வள வாழ்வையும் முற்றுமுழுதாகத் தமது மக்களின் சுதந்திர உழைப்பிலிருந்தே பெற்றன,

பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சிலைச் சேர்ந்த (சி எம் ஈ ஏ) நாடுகளான இவை தமது முன்னேற்ற விகிதத்தில் ஏனைய எந்தக் குழுவைச் சேர்ந்த நாடுகளையும் விட அதிக தூரம் சென்று விட்டன. இன்றைய உலகின் பெருவலிமைமிக்க பொருளாதார சக்தியாகத் திகழ்வது சோஷலிஸ சமுதாயமே. கடந்த ஐந்தாண்டுகளில் இந் நாடுகளின் தொழில் வளம் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் விகிதத்தைவிட நான்கு மடங்கால் அதிகரித்துள்ளது. 1975ல் சோஷலிஸ சமுதாய நாடுகளின் தொழிற்பத்தி பொதுச்சந்தை நாடுகளைவிட (சி எம் சி) இரு பங்கிற்கும் அதிகமாகும். இன்று சி எம் ஈ ஏ நாடுகளின் தொழிலுற்பத்தி ஐக்கிய அமெரிக்காவினதும், ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகளினதும் மொத்த உற்பத்தியை விட 10 சதவீதமே குறைவானதாயிருக்கிறது. தமது பாரிய பொருளாதார வளர்ச்சியுடன் கூட சி எம் ஈ ஏ நாடுகள் தமது பொருளதார அபிவிருத்தியை படிப்படியாகச் சீராக்கி வருகின்றன

இந்நாடுகளின் வாழ்வில் சோஷலிஸப் பொருளாதார ஒருமைப்பாடு என்பது மிகப் பிரதான, மிகப் பெரிய இடத்தை வகிக்கிறது கூட்டுறவை மேலும் விரிவாக்கவும், வளர்க்கவுமானதோர் விசேட விரிவான திட்டத்தை ப. பொ. உ. க, நாடுகள் 1971 ஜூலை மாதத்தில் ஏற்படுத்தின. அந்தத் திட்டத்திற்கமைய அவை தமது பொருளாதார முன்னேற்றத் திட்டங்களைச் சமானமாக்குவதுடன் பாரிய பொருளாதார சிக்கல்களை—குறிப்பாக எரிபொருள் சக்தி விநியோகத்துக்கான மாற்று, மூலப்பொருள் மிச்சம் செய்தல் என்பனவற்றை—கூட்டாகவே தீர்த்து வருகின்றன. இந்தக் கொள்கைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேற்ப ஐரோப்பாவுக்கும் ஆசியாவுக்கும் இடைப் பட்ட எல்லைப்புற ரஷ்யாவிலுள்ள ஒரன்பர்க் வாயு வயல்களை ப. பொ. உ. க. நாடுகள் அபிவிருத்தி செய்வதுடன், ஒரன்பர்க்கிலிருந்து தேசத்தின் மேற்கு எல்லைவரையிலான 2750 கிலோ மீட்டர் நீள பிரதான வாயுக்குழாய்த் தொடரையும் நிர் மாணித்து வருகின்றன. இந்தப் பணிகளுக்கான பணத்தை சோஷலிஸ பொருளாதார ஒருமைப் பாட்டு வளர்ச்சி நோக்கத்துக்காக சோஷலிஸ நாடு களால் ஏற்படுத்தப்பட்ட சர்வதேச முதலீட்டு வங்கி (ஐ. ஐ. பி) வழங்குகிறது. ஐந்தாண்டுகளுக்கு முன் இவ் வங்கி ஸ்தாபிக்கப்பட்டது முதல் 42 அபிவிருத்தித் திட்டங்களுக்கான மொத்தம் 60000 லட்சம் மாற்றத்தக்க ரூபிள்கள் வரவாகச் சேர்ந் தது. (மாற்றத்தக்க ரூபிள் என்பது உள்நாட்டு கணக்கியலுக்காக சோஷலிஸ நாடுகளால் ஏற்படுத் தப்பட்ட பணம் ஆகும். முதலாளித்துவ நாடுகளின் பணமுறையின் நிலைமையினை அல்லது ஏற்றத்தாழ் வால் பாதிக்கப்படாத உலகின் ஸ்திரமான பணம் இதுவாகும்).

உலகெங்குமான சுதந்திரத்தின், முற்போக் கின் நம்பகமான கொத்தளமே சோஷலிஸ சமு தாயமாம். தாக்குவோரை எதிர்ப்பதிலும், யுத்த அபாயத்தைத் தடுத்து சமாதானத்தைப் பலப் படுத்துவதிலும், நாடுகளுக்கிடையேயான சமா தான ஒத்துழைப்பு அதிகரிப்பதிலும், சமத்துவம் மற்றும் சுதந்திரம், சமூக முன்னேற்றத்துக்குப் போராடுவது என்ற கொள்கைகளைக் கொண்டுள்ள சோஷலிஸ நாடுகளின் உதவி எப்போதும் கணிப் பிற்குரியதே என்பதை அனைத்துக் கண்டங்களிலு முள்ள சுதந்திரம் விழையும் மக்கள் தமது சொந்த அனுபவத்தின் மூலம் அறிந்துள்ளனர்.

ஏனைய சோஷலிஸ நாடுகளுடனான சோவியத் யூனியனின் உறவுகள் பற்றி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் பின்வருமாறு நிர்ணயப் படுத்திற்று;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"புதியதோர் சமுதாயத்தை நிர்மாணிப்பதற்காக அவர்களின் ஐக்கியத்தை உறுதியாகப் பலப்படுத்துகின்ற அதே வேளையில், சகோதர சோஷலிஸ நாடுகளில் சமாதானத்தை நிலையானதாக்குவதற்காகத் தமது சுறுசுறுப்பான கூட்டுப் பங்களிப்பையும் அதிகரித்தல் வேண்டும் என்பதும், தமது சுதந்திரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காகப் பிரயாசைப்படுகின்றன என்பதும், தமது மக்களின் சமூக, பொருளாதார, கலாசார மட்டத்தை உயர்த்த முனைகின்றன என்பதும் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியதே.

## விடுதலைபெற்ற நாடுகளுடனான உறவுகள்

தமது சுதந்திரத்திற்காகப் போராடும் மக்களுக்காகத் தனது ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் முன்னரைப்போலவே சோவியத் யூனியன் வழங்கும் என்பதை 25வது கட்சிக் காங்கிரஸ் உறுதிசெய்தது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி காங்கிரசிற்குச் சமர்ப்பித்த அறிக்கையின் ஒருபகுதி இது.

"இன்றைய நவீன உலகை நோக்கும் ஒருவர், சமீபகாலம் வரை காலனிகளாகவோ அரைக் காலனிகளாகவோ இருந்த நாடுகளின் செல்வாக்கு பெருமளவு அதிகரித்துள்ளது என்ற முக்கிய யதார்த்தத்தைக் காண்பதைத் தவிர்க்க முடியாது

"அவற்றுள் பெரும்பாலான நாடுகள் மலையென சக்தி குவியும் ஏகாதிபத்தியத்திற்கெதிரான போராட்டத்தில் தமது அரசியல், பொருளாதார உரிமைகளைக் காப்பாற்றி வருகின்றன என்பதும், தமது சுதந்திரத்தை நிலைநிறுத்திக்கொள்வதற்காகப் பிரயாசைப்படுகின்றன என்பதும், தமது மக்களின் சமூக, பொருளாதார, கலாசார மட்டத்தை உயர்த்த முயன்றன என்பதும் கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வளர்முக நாடுகளின் வெளிநாட்டுக் கொள்கை கவனிப்பிற்குரிய விதத்தில் அதிகம் சுறு சுறுப்படைந்துள்ளது. இதைக் கூட்டுச்சேரா இயக்கத்தின் அரசியல் நோக்கு, ஆபிரிக்க ஒற்றுமைச் சங்கத்தின் நடவடிக்கைகள், வளர்முக நாடுகளால் உருவாக்கப்பட்ட பலவித பொருளாதார சங்கங்கள் முதலிய பலவித நெறிகளாலும் காணக் கூடியதாயுள்ளது. எனவே, உலக வர்க்க சக்திகளின் இன்றைய பரஸ்பர உறவுகளால் ஏகாதிபத்திய கெடுபிடிகளைத் தாங்கிநிற்க விடுதலை பெற்ற நாடுகளால் முடிந்துள்ளது என்பதுடன், சரியான—அதாவது சமமான—பொருளாதார உறவுகளை நிர்மாணிக்கவும் முடிந்துள்ளது என்பதும் மிகத் தெளிவாகியுள்ளது. மக்கள்தம் சமாதானத்துக்கும் பாதுகாப்பிற்குமான பொதுப் போராட்டத்துக்கு அவற்றின் நியாயமான பங்களிப்பும் மேலும் விரும்பத்தக்க விதத்தில் உறுதிகொண்டு வருகிறதென்பதும் கூட தெளிவாகியுள்ளது.

''இளம் நாடுகளின் நியாயமான உணர்வுகளுக்கும், அனைத்து ஏகாதிபத்திய சுரண்டல்களுக்கும் ஒரு முடிவைக் காண்பதற்கான அவற்றின் உறுதிக்கும், தமது தேசிய செல்வத்திற்கான முழுப் பொறுப்பையும் தாமே பெறுவதற்கும் சோவியத் யூனியன் தனது முற்றுமுழுதான ஆதரவை என்றென்றும் வழங்கும் என்பதை இம் மேடையிலிருந்து மேலும் திடமாக வலியுறுத்த விரும்புகிறோம்.''

வேற்று நாடுகளினதும், மக்களினதும் உள் விவகாரங்களிற் தலையிடுவதையோ, மற்றவர் செலவில்தான் ஆதாயங்களைத் தேடுவதையோ, சலுகைகளுக்காக ஒடித்திரிவதையோ. அரசியல் அதிகாரத்துக்காக ஆவலுறுவதையோ, இராணுவத் தளங்களைத் தேடுவதையோ சோவியத் யூனியன் ஒருபோதும் விரும்பவில்லை. ஆனால் காங்கிரஸில் லியோனிட் பிரெஷ்னேவ் குறிப்பிட்டதைப்போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாம் நமது கருத்துகளை மூடி மறைக்கவில்லை. வளர்முக நாடுகளிலும், வேறு எங்கெங்காயினும் நாம் முற்போக்கின், ஜனநாயகத்தின், தேசிய சுதந்திரத்தின் சக்திகள் பக்கமே துணையாக நிற்பதோடு, போராட்டத்தில் அவர்களை எமது நண்பர்களாயும் தோழர்களாயுமே கௌரவிக்கிறோம்.''

ஆசிய நாடுகளுடனான சோவியத் யூனியனின் உறவுகளைப் பகுத்தாய்ந்த சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் எல்லாவற்றிற்கும் மேலாக இந்தியாவுடன் தனது பன்முக கூட்டுறவைக் குறிப்பிட்டது. கடந்த ஐந்தாண்டுகளில் சோவியத்—இந்திய ஒத்துழைப்பு ஒரு புதிய கட்டத்தை எய்தியுள்ளதை சோவியத் கம்யூனிஸ்ட்டுகள் அவதானிக்கின்றனர். இவ்விரு நாடுகளும் ஒரு சமாதான, நட்புறவு, ஒத்துழைப்பு ஒப்பந்தத்தில் ஒன்றிணைந்துள்ளன. இது தென் ஆசியாவிலும் அக்கண்டத்தின் முழுமையிலும் ஒரு நிலைத்த உண்மையாகவுள்ளது.

மத்திய கமிட்டியின் அறிக்கை இவ்வாறு பிரஸ்தாபிக்கிறது:—

''இந்தியக் குடியரசுடன் நெருக்கமான அரசியல், பொருளாதார ஒத்துழைப்பு என்பதே எமது உறுதிமிகு கொள்கையாகும். இந்தியாவின் சமாதானம் விழையும் வெளிநாட்டுக் கொள்கையையும் தம் நாட்டு கஷ்டமான சமூக—பொருளாதார பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான முற்போக்குச் சக்திகளின் முயற்சிகளையும் சோவியத் மக்கள் பாராட்டுவதுடன், அவர்களுடன் அதிக ஒருமைப்பாட்டையும் தெரிவிக்கின்றனர். இந்தப் பிரயத்தனங்களில் இந்திய மக்களும், அரசும் பரிபூரண வெற்றியீட்ட விரும்புகிறோம்.''

தென் ஆசிய பிரச்னைகளுக்கான சோவியத் யூனியனின் அணுகுமுறையின் சரியான தன்மையை நிகழ்ச்சிப் போக்குகள் காட்டுகின்றன. 1971ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திய—பாகிஸ்தான் இராணுவ மோதலின் முடிவையும், அப்போது நிகழ்ந்த முக்கிய மாற்றங்களையும் உலகின் அந்தப் பாகத்து நாடுகளிடையேயான உறவுகளை பொதுமையாக்குவதற்கான ஏதுக்களையும் சோவியத் யூனியன் வரவேற்றது என சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி 25வது காங்கிரஸில் பேசும்போது லியோனிட் பிரெஷ்னேவ் குறுப்பிட்டார். ''இந்தச் சார்பான போக்குகளுக்கு குறிப்பிட்டளவுக்கு எம்மாலும் பங்களிக்க முடிந்ததற்காகவும் மகிழ்வெய்துகிறோம்'' எனவும் எல், ஐ. பிரெஷ்னே குறிப்பிட்டார். ஆசியாக் கண்டத்தில் சமாதானம், பந்தோபஸ்து என்பவற்றின் உறுதிக்கான மார்க்கங்களுக்கும், அங்கு சமதையான ஒத்துழைப்பு வளர்ச்சிக்கும் தனது முனைப்பான ஒத்துழைப்பைத் தொடர சோவியத் யூனியன் சித்தம் கொண்டுள்ளது. இதற்காக இருபக்க தொடர்புகள் மூலமும் பன்முக அடிப்படையிலும் கூட அது பணியாற்றும். ஆசியாவில் நிரந்தர சமாதானத்திற்கும், அதைக் கூட்டு முயற்சி மூலம் அடைவதற்குமான எவரின் கோரிக்கையையும் சோவியத் யூனியன் முழுமையான அவதானத்துடன் கையாளும் எனக் காங்கிரஸ் குறிப்பிட்டது.

சோவியத் யூனியன் 'அரபு நாடுகளுடனான உறவுகள்' என்பதற்கேற்ப சிரியா, ஈராக், அல்ஜீரியா, தென் யேமேன், லிபியா, முதலிய நாடுகளுடனான கூட்டுறவிலேற்பட்ட முன்னேற்றத்தையும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடனான நட்புறவைப் பலப்படுத்துவதையும் சோவியத் கம்யூனிஸ்டுகள் மிகுந்த திருப்தியுடன் ஏற்கின்றனர்.

எகிப்திய அரபுக் குடியரசை எடுத்துக்கொண்டால், சோவியத்—எகிப்திய உறவுகளுக்குக் குழிபறிக்க சில சக்திகள் நிரந்தரமாக முனைந்து வருகின்றன என சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டி காங்கிரசுக்குச் சமர்ப்பித்த அறிக்கை கூறுகிறது. அதன்பாற்பட்டதோர் பிரகடனம்தான் சோவியத் யூனியனுடனான நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ள எகிப்திய தலைவர்கள் எடுத்த முடிவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது மத்திய கிழக்கில் போரற்ற வேளையில் சமாதானமும் இல்லை. ஒருவித சாந்தமே இருக்கிறது. ஆனாலும் வன்செயல்கள் அங்கு புதிதாய் வெடிக்காது என எவர்தான் தைரியமாக உத்தரவாதம் செய்ய முடியும்?

இதுபற்றி லியோனிட் பிரெஷ்னேவ் குறிப்பிட்டதாவது:

''தன்னகங்கார உணர்வுக்கு ஆட்பட்டவர்கள் அரசியல் நடப்புக்கெதிரான ஒரு மத்திய-கிழக்கு தீர்வை ஏற்படுத்துவதும், நன்மைமிகு தீர்வுகளைத் தடுப்பதற்கு பிரத்தியேக, பாதக உடன்படிக்கைகளை பாவிப்பதும் எவ்வளவு பயங்கரமானது என்பது தெளிவாகவில்லையா?''

ஜெனிவா மாநாட்டின் கூட்டுத் தலைவன் என்ற விதத்திலும் இம்மோதுதலுக்குப்பயன் மிக்க தீர்வு காண்பதற்கான எல்லா முயற்சிகளுக்கும் ஒத்துழைப்புத்தர சோவியத் யூனியன் தயாராயுள்ளது. ஐ. நா. அமைப்புக்குளோ அல்லது வேறெந்த நிலையிலோ மத்திய கிழக்கு நாடுகளின் பாதுகாப்பிற்கும் எல்லைகளை மீறுமைக்குமான சர்வதேச உத்தரவாதத்தில் பங்குகொள்ளவும் அது தயாராயிருக்கிறது. சோவியத் யூனியனுடனும் ஐக்கிய அமெரிக்காவுடனும் பிரிட்டனுடனும், பிரான்சும்கூட இவ்வாறானதோர் உத்தரவாதத்தில் பங்குபற்றலாம் என்பதே எமது கருத்தாகும்.

எதிர்காலத்திற்கான சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் கடமையை நிர்ணயிப்பதில், 25வது கட்சிக் காங்கிரஸ், மத்திய கிழக்கில் உண்மையான நிலையான தீர்வை நடைமுறைப்படுத்துவதற்காக நடவடிக்கைகளெடுக்கப்படுவதன் தேவையையும் சுட்டிக்காட்டுகிறது.

ஆபிரிக்க நாடுகளுடனான சோவியத் யூனியனின் உறவுகள் பற்றி சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் 25வது காங்கிரஸ் குறிப்பிடும்போது, சுதந்திரத்திற்காகப் போர் புரிந்துவரும் இக் கண்டத்தின் மக்களுடன் சோவியத் கம்யூனிஸ்டுகள் எப்போதும் ஒருமைப்பாட்டையே பேணுகிறார்கள்; கினி குடியரசு, கொங்கோ மக்கள் குடியரசு, சோமாலி ஜனநாயகக் குடியரசு, கினி—பிசாவ் இளம் நாடுகள், கேப்வேர்தி தீவுகள், மொஸாம்பிக் அங்கோலா ஆகிய நாடுகளுடனான உள்நாட்டு உறவுகள் உருவாவதையும், அதன் உண்மையான நட்புறவும் கூட்டுறவும் வளர்வதையும், ஆபிரிக்காவின் மிகப் பெரிய நாடான நைஜீரியாவுடன் சோவியத் யூனியன் உறவுகளைப் பரந்த விதத்தில் அடிகோலியதையும் காணும்போது சோவியத் மக்கள் இன்று மனம் பூரிக்கின்றார்கள் என அறிவித்தது.

காங்கிரசிற் பங்குபற்றிய ஆபிரிக்க மக்கள் பிரதிநிதிகள் சோவியத் யூனியனின் வெளிநாட்டுக் கொள்கையைப் பற்றி உயர் மதிப்பு கொண்டனர். குறிப்பிட்டுச் சொல்வதானால் சோமாலி உயர் புரட்சிகர சபையின் தலைவரான முஹம்மது செய்த் பார்ரி பின்வருமாறு கூறினார்:—

> "சோவியத் யூனியன் உருவான நாள் முதல் சோஷலிஸ சர்வதேசியத்தின் லெனினிய கொள்கையைக் கடைப்பிடித்துவரும் அது, இக் காங்கிரசுக்குப் பிரதிநிதிகளாக வந்திருக்கும் உலகின் அனைத்து சோஷலிஸ இயக்கங்களுக்கும் தன்னலமற்ற உதவிகளை வழங்கியுள்ளது. அது ஆபிரிக்கா, ஆசியா, லத்தீனமெரிக்காவின் விடுதலை இயக்கங்களுக்குப் பொருளாயத மற்றும் நேர்மையான ஒத்துழைப்பையெல்லாம் நல்கி வருகிறது. இவ்வாறான திடமான உதவி இல்லாதிருந்தால் ஏகாதிபத்தியத்தை முறியடித்த பல வெற்றிகள் கிட்டாமலே போயிருக்கும். எனவே சமாதானம், சோஷலிஸம், சுதந்திரம், நட்புறவு என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் திடவுறுதியுடன் முன்னேறி வரும் சோவியத் மக்களுக்கும், அவர் தம் கட்சிக்கும், அதன் தலைவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.''

இதையிட்டு காங்கிரஸில் உரையாற்றிய லியோனிட் பிரெஷ்னேவ் இப்படிக் குறிப்பிட்டார்: ''மெய்யாகவே நட்புறவை விரும்புபவருடன் இணைந்து அதை வளர்க்கவும், வலிமையாக்கவும் நாம் எல்லாவற்றையும் செய்கிறோம். தொடர்ந்தும் செய்வோம். காலனித்துவத்தின் சமாதியிலிருந்து உருப்பெற்றெழுந்த நாமும், எண்ணிறந்த பல நாடுகளும் சமாதானத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும், எல்லா வடிவ ஆக்கிரமிப்பையும் அதிகாரத்தையும் பெறுவதிலும்; ஒரு நாட்டை இன்னொரு நாடு சுரண்டுவதற்கெதிராகவும் ஒரு ஆழ்ந்த பொதுவான கடமையின் பாற்பட்டு ஐக்கியப்பட்டிருக்கிறோம். இந்த அடிப்படை உணர்வுகளே எமது நட்புறவு வேரூன்றி வளர்ந்து பூத்துக் குலுங்குவதற்கான உரமாகவும் விளங்குகிறது.''

சோவியத் வெளிநாட்டுக் கொள்கையின் பொதுப்பணிகளை முன்வைத்த காங்கிரஸ் காலனியாதிக்க அடக்குமுறை அமைப்பின் சகல எச்ச சொச்சங்களையும், மக்களது சமத்துவம், சுதந்திரத்தின் மீதான அத்துமீறல்களையும் காலனியாதிக்கத்தினதும் இனவாதத்தினதும் சகல நிலைபாடுகளையும் அழித்தொழிப்பதற்கான உறுதியும் நோக்கபூர்வமுமிக்க உழைப்புக்கு அழைப்பு விடுத்தது.

25வது கட்சிக் காங்கிரஸ், வளர்முக நாடுகளுடனான உறவுகள் உட்பட சோவியத் யூனியனின் வெளிநாட்டுப் பொருளாதார உறவுகளை மேம்படுத்துவதில் விசேஷ கவனம் செலுத்தியது. நமது பொருளாதாரத்தின் சீரான வளர்ச்சி, உலகில் ஏற்பட்டுவரும் பரந்த செயல் விளைவுமிக்க மாற்றங்கள், சமாதானம் முடிவமைதிக் கொள்கையின் வெற்றி ஆகியவற்றின் காரணமாக இப் பொருளாதார உறவுகளின் முக்கியத்துவம் அதிகரித்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிய ஆபிரிக்க வளர்முக நாடுகளுடன் சோவியத் யூனியன் கொண்டுள்ள பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான பரஸ்பர முன்னேற்றம்; பெரிய சிறிய நாடுகளிடையே சமத்துவம்' உள்நாட்டு விஷயங்களில் தலையிடாமை, மக்களுடைய சுயாதீனத்துக்கும் தேசிய தலைவிதிக்கும் வரம்பு கட்டும் சகல நிலைபாடுகளையும் மதியாதிருத்தல் ஆகிய கோட்பாடுகளை அடிப்படையாக கொண்டுள்ளன.

மூன்றும் உலக நாடுகளுடனுன சோவியத் யூனியனின் பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்புகளின் வடிவங்கள் பல்வகைப்பட்டவை. குறிப்பாக, இந்நாடுகளுக்கு அத்தியாவசியமாயுள்ள யந்திரங்கள் இதர உபகரணங்களுக்கான சோவியத் விநியோகங்களையும் இவை உள்ளடக்கியுள்ளன. இந்நாடுகளுக்கான சோவியத் தயாரிப்பு யந்திரக்கள், தொழிற்சாலை உபகரணங்களின் முழுமையான தொகுதிகளின் ஏற்றுமதி கடந்த பதினைந்து ஆண்டுகளில் ஆறுமடங்கிற்கும் மேலாக அதிகரித்துள்ளது·

ஆலைகள், தொழிற்சாலைகள், மின்சக்தி நிலையங்கள், போக்குவரத்து வசதிகள், செய்தித் தொடர்பு வசதிகள், விவசாயத் திட்டங்கள், நகரங்கள், குடியிருப்புகள் என்பனவற்றின் நிர்மாணத்துக்கான தொழில்நுட்பத் திட்டத்தின் சோவியத் வடிவமைப்பு ஸ்தாபனங்களது வளர்ச்சி ஒத்துழைப்பின் இன்னுமோர் வடிவமாகும். இன்று இத்தகைய, 870க்குமதிகமான திட்டங்கள் சோவியத் உதவியுடன் வளர்முக நாடுகளில் கட்டப்பட்டு வருகின்றன.

சோவியத் யூனியன் நீண்டகால குறைந்த வட்டியுடைய கடன்களை வளர்முக நாடுகளுக்கு அளித்துள்ளது. இக் கடன்கள் பாரம்பர்ய ஏற்றுமதிப் பொருட்கள், சோவியத் உதவியுடன் கட்டப்பட்ட ஆலைகள், தொழிலகங்களது உற்பத்திகளை விநியாகிப்பதன் மூலமாகத் திருப்பிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செலுத்தப்படும். இத்தகைய நிலைமைகளில் ஒத்துழைப்பானது பயன் அளிக்கும் வாணிப நடவடிக்கைகளின் வடிவத்தை எடுக்கிறது. சோவியத் யூனியன் வழங்கும் கடன்கள் எந்தவித அரசியல், பொருளாதார சூத்திரக் கயிற்றையும் கொண்டிருக்கவில்லை.

தேர்ச்சித் திறன்மிக்க உழைப்பாளிகளின் பற்றுக்குறையை நிவர்த்தி செய்யும் பொருட்டு நிர்மாணிகள் உட்பட தேர்ச்சித்திறன்மிக்க ஆணிகளைப் பயிற்றுவிப்பதில் சோவியத் யூனியன்மூன்றும் உலகுக்குப் பெரும் உதவியளித்துள்ளன.நூற்றுக்கணக்கான நிர்மாணத் தலங்கள் செயல்முறைப் பள்ளிகளாக மாறியுள்ளன. இங்கு சோவியத் நிபுணர்கள், தேர்ச்சித் திறன்மிக்க உழைப்பாளிகளுக்கும் ஃபோர்மன்களுக்கும் பரந்தளவில் பயிற்சியளித்து வருகிறார்கள். உதாரணத்துக்கு அவர்கள் எகிப்தில் 50,000 நிர்மாணிகளுக்கும் பராமரிப்பு ஆளணிகளுக்கும் பயிற்சி அளித்துள்ளனர். வளர்முக நாடுகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான தேர்ச்சியாளர்கள் சோவியத் தொழிலகங்களிலும் நிர்மாணத் தலங்களிலும் பயிற்சி பெற்று வருகிறார்கள்; அநேகர் உயர் கல்விக்கான சோவியத் தொழில் நுட்ப நிலையங்களில் கல்வி பயில்கிறார்கள்.

வளர்முக நாடுகள் தமது சொந்தப் பயிற்சி அமைப்புக்களை ஸ்தாபித்துக் கொள்ளவும் தேசிய கல்வி நிலையங்களை அமைத்துக் கொள்ளவும் சோவியத் யூனியன் உதவி வருகிறது. ஏறத்தாழ நூறு நிலையங்கள் தொழில்நுட்பப் பள்ளிகள், பொதுக் கல்விக்கான நடுநிலைப் பள்ளிகள் சோவியத் உதவியுடன் வளர்முக நாடுகளில் திறக்கப்பட்டுள்ளன, ஐம்பதுக்குமதிகமான கல்வி நிலையங்கள் நிர்மாணம் பெற்றுவரும் கட்டத்திலிருக்கின்றன.

சோவியத் யூனியனுடன் பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தங்களை செய்து வரும் வளர்முக நாடுகளின் தொகை இடையரு து அதிகரித்து வருகிறது. 1955ல் இது 49 ஆக அதிகரித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸ் முன்வைத்த சமாதான வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் விளைவாக சர்வ தேச நிலைபாடுகளில் ஏற்பட்ட நன்மாற்றங்கள், வளர்முக நாடுகளுடனான நமது இணைப்புகளின் இயக்க ஆற்றல் மிக்க வளர்ச்சிக்கு வழிவகுத்தன.

ஒரு குறிப்பிட்ட வளர்முக நாட்டுடனான ஒத்துழைப்பை மேம்படுத்தும்போது சோவியத் யூனியன், அந்நாட்டின் அத்தியாவசிய தேவைகளைக் கருத்தில் கொள்கிறது. சோவியத் யூனியனுடனான ஒத்துழைப்பானது தமது பொருளாதாரத்தையும் சமூக வாழ்வையும் முற்போக்கான மார்க்கத்தில் புனரமைப்பதை அனுகூலமாக்குகிறது என்று வளர்முக நாடுகளின் பல அரசியல், பொதுஜனத் தலைவர்கள் வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

சோவியத் யூனியனுக்கும் இலங்கைக்குமிடையில் ஸ்தாபிக்கப்பட்ட உறவுகள் மேலே கூறப்பட்டவற்றுக்கு முழுமையாகப் பொருந்துகின்றன. சோவியத்-இலங்கை தொழில்நுட்ப, பொருளாதார ஒத்துழைப்புக்கான அடித்தளம் சொலமன் பண்டாரநாயக்கா அரசாங்கத்தின் ஆட்சியின் போது இடப்பட்டது.

சோவியத் உதவியுடன் இலங்கை ஆண்டுக்கு 60,000 உருட்டு உருக்குக் கொள்திறன் கொண்ட இரும்பு-உருக்காலை ஒன்றையும் ஆண்டுக்கு 350,000 டயர்களையும் 206,000 டியூப்களையும் உற்பத்தி செய்யும் டயர் தொழிற்சாலை ஒன்றையும், ஒரு மாவாலை மற்றும் இதர திட்டங்களையும் நிர்மாணித்தது. இத் தொழிலகங்கள், இலங்கையின் தொழில் துறையின் பிரிவுகளுக்கு முன்னோடியாயமைந்தன.

இன்று சோவியத் நிறுவனங்கள் இரும்பு உருக்காலையின் இரண்டாவது கட்டத்தை கட்டுவதற்கு இந்நாட்டுக்கு உதவுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள பொருளாதார, தொழில்நுட்ப ஒத்துழைப்பின் பகுதிகள், மேற் குறிப்பிடப்பட்ட திட்டங்களையும் மேவி வியாபிதமடைந்துள்ளன. சோவியத் பூகர்ப்பவியலாளர்கள் எண்ணெய், வாயுவள ஆய்வில் இலங்கைக்கு உதவுகிருர்கள்.

1975 ஜனவரி 28ம் திகதி பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான புதிய ஒப்பந்தம் ஒன்றில் இரு நாடுகளும் கைச்சாத்திட்டுள்ளன; இதன் கீழ் இலங்கையில் மிகப் பாரியதாக அமையப் போகும் சமனலவாவி நீரியல் மின்சக்தி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கு சோவியத் நிறுவனங்கள் உதவியளிக்கும். இத் தொழிலகம், இலங்கை தனது தொழில்துறை, விவசாய அபிவிருத்தி சம்பந்தமாக முகம்கொடுக்கும் பல பிரச்சினைகளைக் கையாள வகைசெய்யும்

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டகாலத்தில் வளர்முக நாடுகளுடனுன சோவியத் யூனியனின் பொருளாதார, விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்பானது நீண்டகால உறுதிமிக்க பரஸ்பரம் அனுகூல மிக்க அடித்தளத்தில் மேலும் விஸ்தரிக்கப்படவும் ஏற்றம் காணவுமுள்ளது என்று 25வது காங்கிரஸ் அறிவித்தது, இந்த ஒத்துழைப்புக்கு சோவியத் யூனியன் பொருளாதார வல்லமையின் வளர்ச்சி, சோஷலிஸ பொருளாதார ஒருங்கிணைப்பின் விரிவான வேலைத் திட்டத்தின் வெற்றிகரமான நடைமுறையாக்கம், சமாதான வேலைத் திட்டத்தின் இடையருத செயலாக்கம் போன்ற காரணிகள் உறுதியான அடித்தளங்களை அமைக்கின்றன.

இது குறித்து பேசுகையில் அலெக்ஸி என். கொஸிஜின் வருமாறு கூறினுர்: ''நாம் ஜனநாயக பூர்வமிக்க, நியாயமான கோட்பாடுகளின் அடிப்படையில் வளர்முக நாடுகளுடனுன ஒத்துழைப்பை விஸ்தரிப்போம்; அவை தமது பொருளாதார சுதந்திரத்தை வலுப்படுத்திக்கொள்ள உதவுவோம்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காங்கிரஸ் தீர்மானங்களின் திசைவழியில் சோவியத் யூனியன், சர்வதேச வர்த்தகத்தில் நிலவும் வேறுபாடுகளையும் செயற்கைத் தடைகள் அனைத்தையும், சர்வதேச பொருளாதார உறவுகளில் உள்ள ஏற்றத்தாழ்வு, அதிகார ஆணை, சுரண்டல் ஆகியவற்றின் வெளிப்பாடுகள் அனைத்தையும் அகற்ற விரும்புகிறது. இந்த மார்க்கத்திலான முன்னேற்றமானது புதிய சுதந்திர நாடுகள் உள்ளிட்ட சகல நாடுகளதும் பொருளாதார அபிவிருத்தியில் சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

## முதலாளித்துவ நாடுகளுடனான உறவுகள்

சமாதான சகஜீவனக் கோட்பாடுகளை வலுப்படுத்துவது, நிலையான சமாதானத்தை உத்தரவாதப்படுத்துவது, இன்னொரு உலகயுத்த ஆபத்தைக் குறைப்பதும் பின்னர் முற்றாக ஒழிப்பதும் ஆகியனவே முதலாளித்துவ நாடுகளுடனான சோவியத் யூனியனின் கொள்கையில் பிரதான அம்சங்களாக இருந்துள்ளன, தொடர்ந்தும் இருக்கின்றன. ஏற்கனவே கூறப்பட்டது போன்று கடந்த ஐந்தாண்டுகளில் இத்துறையில் கணிசமான முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. கெடுபிடி யுத்தத்திலிருந்து. இரு உலகங்களின் வெடிக்கும் மோதலிலிருந்து முடிவமைதிக்கான பாதை உலக சக்திகளின் உறவு நிலையில் ஏற்பட்ட மாற்றங்களுடன் பெருமளவுக்கு இணைந்துள்ளது.

இன்றுகூட முதலாளித்துவ நாடுகளில் செல்வாக்குள்ள வாட்டாரங்கள் கெடுபிடி யுத்த மனப்பாங்கை கைவிடவும், பரஸ்பரம் பயனுள்ள ஒத்துழைப்பைக் வளர்ப்பது, பிறநாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடாதிருப்பது எனும் கொள்கையைப் பற்றுறுதியுடன் பின்பற்றவும் தயங்குகின்றன என்பது உண்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை ஒரு சிறு வட்டத்துக்குள் அடக்க, முடி வமைதியை மேலும் அபிவிருத்தி செய்யவும் அதை மாற்றவொண்ணுததாக்கவும், பரஸ்பரம் அனுகூல மிக்க ஒத்துழைப்பு வடிவங்களில் அதை உறுதிப் படுத்தவும் பெரும் பிரயத்தனங்கள் தேவை. இப் பிரயத்தனங்களை சோவியத் யூனியன் சகோதர சோஷலிஸ நாடுகளுடனும் சகல சமாதான சக்தி கள், எதார்த்த பூர்வமான சக்திகளுடனும் நெருக்க மாக ஒருங்கிணைந்து எடுக்கும் என்பதை 25வது கட்சிக் காங்கிரஸ் காட்டியுள்ளது.

சோவியத்—அமெரிக்க உறவுகள் குறித்து 25வது காங்கிரஸில் தமது அறிக்கையில் குறிப் பிட்ட லியோனிட் பிரெஷ்னேவ் இந்த உறவுகள் நல்ல வாய்ப்புகளைக் கொண்டுள்ளன என்று தெரி வித்தார். ஆனல், இரு நாடுகளினதும் வர்க்க இயல்பிலும் இவற்றின் சித்தாந்தங்களிலும் அப் பட்டமான வேறுபாடுகள் இருந்தபோதிலும் அவ் வேறுபாடுகளையும் தகராறுகளையும் வன்முறைகள் மூலமோ அச்சுறுத்தல்களின் மூலமோ ஆர்ப்பரிப் புக்களின் மூலமோ அன்றி அறிவு பூர்வமான அரசி யல் வழிகளின் மூலமாகவே தீர்ப்பதற்குள்ள ஆர் வத்தைக் கொண்டுள்ள எதார்த்த பூர்வமான அடித்தளங்களில் அவை இந்த உறவுகளை வளர்க் கும்.

அவர் தொடர்ந்து கூறினர், "பல பாரதூர மான காரணிகளால் சோவியத்—அமெரிக்க உறவு கள் சிக்கல்படுத்தப்பட்டபோதிலும் சமீப ஆண்டு களில் இந்த உறவுகளின் அடிப்படையில் சாதக மான அபிவிருத்தி ஏற்பட்டு வருகிறது. சோவியத் யூனியனுடனுன உறவுகளை விருத்திசெய்வதையோ சர்வதேச முடிவமைதியையோ விரும்பாத ஐக்கிய அமெரிக்காவிலுள்ள செல்வாக்குள்ள சக்திகள் சில இதைச் சீர்குலைக்க முயல்கின்றன. இவை சோவியத் யூனியனின் கொள்கையைத் திரித்துக் கூறுகின் றன. "சோவியத் அச்சுறுத்தல்" பற்றிய கற் பனைப் பூச்சாண்டிகளைக் காட்டுகின்றன; ஐக்கிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவிலும் நேட்டோவிலும் ஆயுதப் போட்டியைத் தீவிரப்படுத்துமாறு இவை தூண்டுகின்றன; வர்த்தகத்துறையில் ஐக்கிய அமெரிக்கா ஒதுக்கல் நடவடிக்கைகளை மேற்கொண்டதன் மூலம் எமது உள்நாட்டு விவகாரங்களில் தலையிடவும் எத்தனித்தது என்பது இங்கு நினைவுபடுத்தத்தக்கது. இத்தகைய நிலைமையை நாம் பொறுக்கமுடியாது, பொறுக்கவும்மாட்டோம். சோவியத் யூனியனிடம் ஒருவர் இத்தகைய பாஷையை பாவிக்க முடியாது. இது எல்லோருக்கும் தெளிவானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.''

அதே வேளையில் லியோனிட் பிரெஷ்னேவ் வாஷிங்டனின் கொள்கையினால் எழும் சில கஷ்டங்களையும் சுட்டிக் காட்டினார். மக்களின் சுதந்திரத்தையும் சுயாதீனத்தையும் ஆபத்துக்குள்ளாக்குவதும், ஒடுக்குமுறைக்கும் பிற்போக்கிற்கும் ஆதரவாக நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடுவதுமான இக் கொள்கையின் இந்த அம்சங்களே கஷ்டங்களை ஏற்படுத்துகின்றன.

அவர் தொடர்ந்து கூறினார்: ''இத்தகைய நடவடிக்கைகளை நாம் எதிர்த்துள்ளோம். தொடர்ந்தும் எதிர்ப்போம்.''

லத்தீனமெரிக்காவுடனான சோவியத் யூனியனின் உறவுகள் கணிசமான அளவு விரிவடைந்து வருகிறது என்று 25வது காங்கிரஸ் குறிப்பிட்டது. சோவியத் யூனியன், தமது அரசியல் சுயாதீனத்தையும் பொருளாதார சுதந்திரத்தையும் வலுப்படுத்த அந்நாடுகள் எடுத்துள்ள பிரயத்தனங்களுக்கு ஆதரவு வழங்கியுள்ளது, தொடர்ந்து ஆதரவு வழங்கும்; சர்வதேச விவகாரங்களில் இந் நாடுகள் வகிக்கும் பெரும் பாத்திரத்தையும் அது வரவேற்கிறது என்பதும் குறிப்பிடப்பட்டது.

ஆயுதப் பரிகரணத்தை மேம்படுத்தவும் ஆயுதப் போட்டியை நிறுத்தவுமான முயற்சிகள் இது எதிர்காலத்திலும் கூட சோவியத் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக் கொள்கையின் பிரதான திசை மார்க்கங்களில் ஒன்றாகத் தொடர்ந்திருக்கும். இன்று இந்த நோக்கம் முன்னெப்போதையும்விடப் பெரிதும ஜீவாதாரமிக்கதாகவுள்ளது. ஆயுதக் குவியலின் மீது குந்தியிருந்து மனித குலத்துக்குச் சலித்துவிட்ட போதிலும், ஆக்கிரமிப்பு எண்ணம்கொண்ட ஏகாதிபத்திய வட்டாரங்களால் தூண்டிவிடப்பட்டுள்ள ஆயுதப் போட்டி மேலும் தீவிரமடைந்து வருகிறது.

இதற்கு, ஆயுதப்போட்டியின் விற்பன்னர்கள் காட்டும் பிரதான காரணம் சோவியத் அச்சுறுத்தல் என்பதே. உண்மையில் மேற்கிலோ கிழக்கிலோ சோவியத் அச்சுறுத்தல் எதுவுமே கிடையாது. இது ஆரம்பம் முதல் இறுதிவரை மூர்க்கத்தனமான பொய்யே. எவரையும் தாக்கும் எண்ணம் எள்ளத்தனையும் சோவியத் யூனியனுக்கு இல்லை, சோவியத் யூனியனுக்கு யுத்தம் தேவையில்லை. அது இடையருது, உறுதியுடன் சமாதானத்திற்காகப் போராடி வருகிறது. ஆயுதக் குறைப்புக்காகவும் ஆயுதப் பரிகரணத்துக்காகவும் அது ஒன்றின்பின் ஒன்ருகப் பல ஆலோசனைகளை முன்வைக்கிறது.

தொடர்ந்து நீடிக்கும் ஆயுதப் போட்டியின் ஆபத்திலிருந்து மக்களை விடுவிக்கும் கடினமான ஆனல் புனிதமான பணியில் ஈடுபட்டுள்ள போராளிகளின் முன்வரிசையில் தாம் இருப்பது குறித்து சோவியத் கம்யூனிஸ்ட்டுகள் பெருமிதமடைகிருர்கள். இந்த அபாயகரமான போக்குக்கு முடிவுகட்டுவதற்கு தமது முயற்சிகளை ஒன்றுபடுத்துமாறு எமது கட்சி அனைத்து நாடுகளையும் சேர்ந்த எல்லா மக்களையும் அறைகூவி அழைக்கிறது. பொதுவானதும் முடிவானதுமான ஆயுதப் பரிகரணமே இத்துறையில் சோவியத் யூனியனின் இறுதி இலக்காகும். அதே நேரத்தில் இந்த இலக்கை அடைவதற்கான பாதையின் பல்வேறு பகுதிகளில் முன்னேற்றத்தை ஈட்ட சோவியத் யூனியன் தன்னாலானதனைத்தையும் செய்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத்தை ஆபத்துக்குள்ளாக்கும் விரிவுற்றுவரும் ஆயுதப் போட்டியை நிறுத்தவும், ஏற்கனவே குவித்து வைக்கப்பட்டுள்ள ஆயுதங்களைக் குறைக்கவும் ஆயுதப் பரிகரணத்தைக் காணவும் பணியாற்றுவதற்கான, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆலோசனைகளை கட்சியின் 25வது காங்கிரஸ் அங்கீகரித்துள்ளது.

அ போர்க்கேந்திர முக்கியத்துவமுள்ள ஆயுதங்களைக் கட்டுப்படுத்தவும் குறைக்கவுமான புதிய சோவியத்—அமெரிக்க உடன்படிக்கை கைச்சாத்தாவதற்குச் சகலதையும் செய்தல், அணு ஆயுதப் பரீட்சைகளை உலக வியாபிதமாகவும் பூரணமாகவும் தடைசெய்வது, ரசாயன ஆயுதங்களைத் தடைசெய்வதும் அழிப்பதும், மக்களைப் பெருந்தொகையாகக் கொன்று குவிக்கக் கூடிய புதிய ரக அழிவு ஆயுதங்களை உருவாக்குவதையும் உற்பத்தி செய்வதையும் தடைசெய்வது, இயற்கைச் சூழலை ராணுவ அல்லது மற்றும் குரோத நோக்கங்களுக்காக நச்சுப்படுத்துவதைத் தடை செய்வது ஆகியன குறித்து சர்வதேச உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளவும் சகலதனைத்தையும் செய்தல்.

(ஆ) மத்திய ஐரோப்பாவில் ஆயுதப்படைகளையும் படைக்கலங்களையும் குறைக்க முனைப்பான பேச்சுவார்த்தைகளை நடந்த புதிய முயற்சிகளை மேற்கொள்ளல். இத் திசைவழியில் எடுக்கப்பட்ட முதலாவது ஸ்தூலமான நடடிக்கைகளின் ஒப்பந்தத்தைப் பின்பற்றி பின் வரும் ஆண்டுகளில் ராணுவ முடிவமைதியை இப் பிரதேசத்தில் தொடர்ந்து மேம்படுத்தல்;

(இ) பல நாடுகளில் ராணுவச் செலவினங்களைத் தொடர்ந்து அதிகரிப்பிலிருந்து அவற்றைத் திட்டமிட்டுக் குறைப்பதற்கான மாற்றத்தை ஏற்படுத்தல்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஈ) உலக ஆயுதப்பரிகரண மகாநாட்டை விரைவில் கூட்டுவதற்கான சகல முயற்சிகளையும் மேற் கொள்ளல்,

மத்திய கிழக்கில் நியாயமான ஸ்திரமான தீர்வு ஒன்றை ஈட்டி பின்னர் அது இப் பிராந்தியத்தில் ஆயுதப் போட்டியை நிறுத்தும் பிரச்சினை குறித்து ஆலோசனை செய்யப் பொருத்தமாக அமையும் என்பதையும் காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது.

ஆசியா சம்பந்தமாக, சோவியத் கம்யூனிஸ்டுகளின் மகாநாடு ஆசிய நாடுகளின் கூட்டு முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டு அக் கண்டத்தின் பந்தோபஸ்தை உத்தரவாதப்படுத்துவதற்காக உழைப்பது என்று உறுதி தெரிவித்தது.

இந்து சமுத்திரம் தொடர்பாக லியோனிட் பிரெஷ்னேவ் பின்வருமாறு தெரிவித்தார்:

''இந்து சமுத்திரப் பிரதேசத்தில் எந்தவொரு வல்லரசும் ராணுவத் தளங்களை அமைப்பதை எதிர்த்த கூற்றுக்கள் அண்மைக்காலத்தில் பரவுகின்றன. இந்தக் கூற்றுக்கள் குறித்து நாம் அனுதாபம் கொள்கிறோம். இந்து சமுத்திரப் பிரதேசத்தில் ராணுவத் தளங்கள் அமைக்கும் எந்த நோக்கமும் சோவியத் யூனியனுக்கு இருந்ததில்லை, இப்போதும் கிடையாது. இதே நிலையை எடுக்குமாறு நாம் ஐக்கிய அமெரிக்காவைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.''

காங்கிரஸ் இன்னொரு பிரதான ஆலோசனையையும் முன்வைத்தது.

''பிரச்சினைக்குரிய விவகாரங்களை தீர்ப்பதற்கு வன்முறையைப் பயன்படுத்துவதற்கான அச்சுறுத்தலையோ அல்லது பயன்படுத்துவதையோ கைதுறப்பதை சர்வதேச உறவுகளில் ஒரு நியதியாக்கவேண்டும்'' என்று 24வது காங்கிரஸ் அறைகூவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோட்பாடு, பின்னல் சோவியத் யூனியன் பல நாடுகளுடன் செய்துகொண்ட பல உடன் படிக்கைகளில் இடம் பெற்றது. ஐரோப்பிய பந்தோபஸ்து, ஒத்துழைப்புக்கான மகாநாட்டின் இறுதித் தஸ்தாவேஜுவிலும் இடம் பெற்றது.

யுத்த அச்சுறுத்தலை மேலும் குறைக்கவும் ஆயுதப் பரிகரணத்துக்கான வழிசமைக்கவும் சர்வ தேச உறவுகளில் வன்முறையைப் பயன்படுத்தா திருப்பதற்கான உலக ஒப்பந்தம் ஒன்றைச் செய்ய வேண்டும் என்று சோவியத் யூனியன் இன்று கோருகிறது. அணு வல்லரசுகளையும் உள்ளடக்கிய இதன் பங்காளிகள் தமக்கிடையில் தோன்றக் கூடிய தகராறுகளைத் தீர்ப்பதில் அணுவாயுதங்கள் உட்பட எந்தவிதமான ஆயுதங்களையும் பயன் படுத்துவதில்லை என்ற பொறுப்பை ஏற்கவேண் டும். இந்த ஆலோசனையைச் செயல்படுத்துவதற்கு இட்டுச் செல்லும் செயல்முறை நடவடிக்கைகளைப் பற்றி ஏனைய நாடுகளுடன் சேர்ந்து கூட்டாக ஆராய சோவியத் யூனியன் தயாராகவுள்ளது.

புரட்சிகர கடமையின்பால் விஸ்வாசம் சோவியத் கம்யூனிஸ்டுகள் தமது 25வது காங்கிர ஸில் புரட்சிகர லட்சியத்தின் பாலான தமது விஸ் வாசத்தையும் மெய்ப்பற்றையும் மீண்டும் உறுதிப் படுத்தினர்கள். வர்க்கப் போராட்டத்தின் நியதி களை முடிவமைதி இம்மியளவேனும் அழிக்காது அதனல் அழிக்கவும் முடியாது, மாற்றவும் முடி யாது என்பதை அவர்கள் வலியுறுத்தினர். முடி வமைதிப் போக்குக்கு நாடுகளுக்கிடையிலான பிணக்குகள், மோதல்களுக்கு யுத்தம், வன்முறை பயன்படுத்தல் அல்லது பயமுறுத்தல் என்பவற்றி னல் தீர்வுகாண முடியாது என்பதையே அர்த்தப் படுத்துகிறது. முடிவமைதி காரணமாக கம்யூனிஸ்டு கள் முதலாளித்துவ சுரண்டலுடன் ஒத்துப் போவார்கள் என்றே அல்லது புரட்சியைத் தொடர்ந்து வரும் ஏகபோகங்களாக இருப்பர் என்றே யாரும் எதிர்பார்க்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த ஐந்தாண்டுகளில் சர்வதேச பிற்போக்கின் சில கொத்தளங்களுக்குப் படு வீழ்ச்சிகள் ஏற்பட்டுள்ளன என்பதையும் காங்கிரஸ் குறிப்பிட்டது. இக் காலகட்டத்தில் சிலியிலும் போர்த்துக்கலிலும் புரட்சிகள் நடைபெற்றுள்ளன. பெருவில் புரட்சிகர விமோசன சக்திகள் பிரதான வெற்றிகளை ஈட்டியுள்ளன. கிரீஸில் பாஸிஸ ராணுவ அரசாங்கம் வீழ்ச்சியடைந்துள்ளது. ஸ்பெயினில் பிராங்கோவின் ஆட்சி ஆட்டம் காண ஆரம்பித்துள்ளது.

சோவியத் கம்யூனிஸ்டுகள், அனைத்துக் கண்டங்களிலும் உள்ள சகல நாடுகளின் புரட்சியாளர்களுடன் அனைத்துக்கும் மேலாக சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்துடனான ஒருமைப்பாட்டுக்கு முழுமனதாகக் குரல் கொடுத்தார்கள்.

கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிகளின் புதிய உலக மகாநாடு ஒன்றை கூட்டுவதற்காகப் பல கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளதையும் காங்கிரஸ் சுட்டிக் காட்டியது. இந்தக் கருத்தை கோட்பாட்டளவில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது. ஆனால் இது எப்போது நடைபெறும் என்பது பொது இணக்கத்தினால் தீர்மானிக்கப்படும்.

கம்யூனிஸ்ட் அல்லாத முற்போக்குக் கட்சிகளுடன்—புரட்சிகர ஜனநாயக, வலது-சோஷலிஸ்ட் கட்சிகளுடன் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி தனது பிணைப்புகளின் விஸ்தரிப்பை காங்கிரஸ் உறுதிப்படுத்தியது. இந்த மார்க்கத்தின் வழியில் ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்துவது, பாஸிஸம், இனவாதம் காலனியாதிக்கம் ஆகியவற்றுக்குப் பதிலடி கொடுப்பது ஆகிய பணிகளை சோவியத் கம்யூனிஸ்டுகள் தொடர்ந்து மேற்கொள்வர். ஆனால் விஞ்ஞான கம்யூனிஸத்திற்கும் சமூக—ஜனநாயகவாதிகளின் சீர்திருத்தவாதத்துக்கும் இடையில் சித்தாந்த நெருக்கம் என்ற பேச்சுக்கு இடமேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகப் புரட்சிகரப் போக்குகள் பெருவளர்ச்சி அடைந்துள்ளன; அதே வேளையில் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடிகள் மேலும் உக்கிரமடைந்துள்ளன; இன்றைய பொருளாதார நெருக்கடிகள் இதற்குச் சான்றாகும். இவற்றைக் கருத்தில் கொண்டு, முதலாளித்துவத்தின் ''தன்நிகழ்வான வீழ்ச்சி''யைப் பற்றி முன்கூட்டியே சொல்வதற்கு எதுவுமில்லை என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி குறிப்பிட்டது. ஆயினும் முதலாளித்துவம் கணிசமான வளங்களை இன்னமும் கொண்டுள்ள போதிலும், அது எதிர்காலமற்ற ஒரு சமுதாயம் என்பதில் சந்தேகமேயில்லை. ஏகபோக முதலாளித்துவத்தினதும் அதன் அரசியல் ஏஜண்டுகளினதும் மேலாதிக்கத்துக்கு ஒரு கடுமையான அச்சுறுத்தல் ஏற்படும்போது ஜனநாயகத்தின் எந்த வடிவம் பற்றிய பாசாங்குத்தனத்தையும் கைதுறக்கவும் எதையும் செய்யவும் ஏகாதிபத்தியம் தயங்காது என்பதை புரட்சிகர இயக்கத்தின் அண்மைக்கால அனுபவங்கள் காட்டியுள்ளன. இந்த ஏகபோக முதலாளித்துவம் மானிதத்தை மட்டுமல்ல நாடுகளின் சுயாதீனத்தையும் சகல சட்டதிட்டங்களையும் காலடியில் போட்டு மிதிக்கத் தயாராகவுள்ளது. அவதூறு, பொருளாதாரத் தடை, நாசவேலை, பயங்கரவாதம், அரசியல் தலைவர்களைப் படுகொலை செய்தல், பாஸிஸ முறையிலான செயல்கள் இவைதான் இன்றைய புரட்சி—விரோதப் படைக்களங்களாம். இவை சர்வதேச ஏகாதிபத்திய பிற்போக்குடன் இணைந்து எப்போதும் செயல்படுகின்றன.

சிலி இதற்கு உதாரணமாகவுள்ளது. பாஸிஸ்ட் இராணுவ சர்வாதிகாரம் நாட்டை ரத்தச் சாக்காட்டிற்குள்ளாக்கியுள்ளது. பல பத்தாயிரக்கணக்கான உழைக்கும் மக்களது அற்புதமான, மிக விஸ்வாசமிக்க புதல்வர்களும் புதல்வியரும் படுகொலை செய்யப்பட்டனர். சாகும்வரை சித்திரவதை செய்யப்பட்டனர் அல்லது சிறையிலடைக்கப்பட்டனர்.

இது தொடர்பாக, காங்கிரஸில் லியோனிட் பிரெஷ்நேவ் கூறியதுபோல் நாம் எப்பொழுதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றை ஞாபகத்தில் வைத்துக்கொள்வது அவசியம். அவர் கூறினார்; ஒரு புரட்சியானது எவ்வாறு தன்னைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதை அது உணர்ந்திருக்க வேண்டும். அது இன்றைய பாஸிஸத்துக்கும் வெளிநாட்டுப் பிற்போக்கின் சூழ்ச்சிகளுக்கும் எதிரான விழிப்புணர்ச்சிக்கு ஒரு பாடமாக அமைவதுடன் விடுதலை முன்னேற்றப் பாதையை மேற்கொண்டுள்ள சகலரினதும் மாபெரும் சர்வதேச ஒருமைப்பாட்டுக்கு அறைகூவுகிறது.

தமது புரட்சிகரக் கடமையின்பால் விஸ்வாசமாக விருக்கும் சோவியத் கம்யூனிஸ்டுகள் முன்னரைப் போலவே, உன்னதமான கருத்துக்களின் வெற்றிக்காகப் போராடுகிறார்கள். இது தொடர்பாக, வர்க்க எதிரியின் கைகளில் மரணமடைந்த உலக கம்யூனிஸ்ட், உழைக்கும் வர்க்க இயக்கத்தின் வீரர்களுக்கும் மக்களது ஆனந்தத்திற்கான தன்னலமற்ற போராளிகளுக்கும் மாஸ்கோவில் ஒரு நினைவு மண்டபம் கட்டவேண்டும் என்ற தீர்மானத்தை காங்கிரஸ் நிறைவேற்றியது.

ஏகாதிபத்தியத்தினதும் பிற்போக்கினதும் சிறையிலுள்ளவர்களை விடுதலை செய்யக்கோரும் விசேஷ தீர்மானம் ஒன்றையும் காங்கிரஸ் நிறைவேற்றியது.

சிலி கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் லூயி கார்வலனையும் பாஸிஸ்ட் ஜூண்டாவின் சிறையில் வாடும் இதர கைதிகளையும்; உருகுவே, பராகுவே, இந்தோனேஷியா, பிரேசில், கௌதமாலா, ஹாய்தி, தென்னாபிரிக்கா, நாமிபியா, ஸிம்பாப்வே ஆகிய நாடுகளின் சிறையிலுள்ள போராளிகளையும் விடுதலை செய்யுமாறு சோவியத் கம்யூனிஸ்டுகளும் சகல சோவியத் மக்களும் மிகக் கடுமையாக வலியுறுத்துகிறார்கள்.

இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ள அரபுப் பிரதேசங்களில் அரபு மக்கள் படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்படல் வேண்டும் என்று சோவியத் கம்யூனிஸ்டுகளும் சகல சோவியத் மக்களும் கோருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் கம்யூனிஸ்ட்டுகளது மகாநாட்டின் அறிக்கையின் ஒரு பகுதி வருமாறு;

''முற்போக்கு, ஜனநாயகம், சோஷலிஸம் என்பவற்றின் முன்னணிச் சக்திகளுக்கு எதிராக நடைபெறும் பயங்கர அட்டூழியங்களையும் பழி வாங்கும் நடவடிக்கைகளையும் நிறுத்துவதற்கும், பிற்போக்குச் சக்திகளின் சிறைக்கூடங்களில்வாடும் சகல கைதிகளையும் விடுதலை செய்வதற்குமான போராட்டத்தில் மேலும் தீவிரமாக ஒன்றிணையு மாறு உலகின் சகல கம்யூனிஸ்டுகளுக்கும் சகல நாடுகளின் உழைக்கும் மக்களுக்கும் பொதுஜன, அரசியல் ஸ்தாபனங்களுக்கும் சோவியத் கம்யூ னிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் அறைகூவல் விடுக்கிறது.

''சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் சோஷலிஸ்ட் குடியரசுகளது ஒன்றியத்தின் மக்க ளும், மகத்தானதும் உன்னதமானதுமான லட்சி யங்களுக்காகப் போராடும் தமது தோழர்களுட னுன செயலுறுதி மிக்க ஒருமைப்பாட்டின் லெனி னிய பாரம்பர்யங்களை முன்னரைப்போன்று இழை யும் வழுவாது பின்பற்றுகிறார்கள்; அவர்கள் தொழிலாள வர்க்க சர்வதேசியத்தின் லட்சியத் துக்கு என்றும் விஸ்வாசமாக இருப்பார்கள்.''

கம்யூனிஸ்ட், தொழிலாளர், தேசிய—ஜன நாயக, சோஷலிஸ்ட் கட்சிகளின் பிரதிநிதிகள் இந்த அறிக்கையை மகிழ்ச்சியுடன் வரவேற்றுள் ளனர்.

குறிப்பாக, சிலி சோஷலிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் கார்மஸ் அல்தாமிராநோ காங்கிரஸில் வருமாறு கூறினார்:

''புதிய வாழ்க்கையை மேம்படுத்துவதற்கும் இதர மக்களின் போராட்டங்களுடனான ஒருமைப் பாட்டு உணர்வுடன் அளப்பரிய உதவிகளை வழங்கு வதற்கும் நீங்கள் செய்த எண்ணற்ற தியாகங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமறிவோம். வீரமிகு வியட்நாமும் புகழ் பூத்த சோஷலிஸ்ட் கியூபாவும் அங்கோலா மக்கள் குடியரசும், விடுதலைக்கும் சோஷலிஸத்துக்குமாகப் போராடும் சகல நாடுகளும் சகல சக்திகளும் இதை நன்கறியும்.''

சிலி தேசபக்தர்களுக்கு சோவியத் யூனியன் வழங்கும் ஆதரவைக் குறிப்பிடும்போது கார்லஸ் அல்லாமிரானோ வருமாறு கூறினர்:

''தொழிலாள வர்க்க சர்வதேசியத்தின் முரண்பாடற்ற கொள்கையைப் பின்பற்றும் சோவியத் கம்யூனிஸ்டுகள், நமது மக்களுடைய போராட்டத்துடன் உறுதிமிக்க ஒருமைப்பாடு கொண்டுள்ள முன்னணிச் சக்திகளுடன் எப்போதும் நிற்கிறார்கள். சிலியின் முற்போக்காளர்கள் சோவியத் மக்களதும் அவர்களது அரசாங்கத்தினதும் நிலைபாடு என்ன என்பதை அறிவார்கள், அவர்கள் தமது நன்றியையும் சோவியத் யூனியன் மீதான நம்பிக்கையையும் வெளிப்படுத்துகிறார்கள்.

''ஆயினும் சில குறுப்பிட்ட அரசாங்கங்கள் தமது சர்வதேசியக் கடமைக்கு மாருக பாஸிஸ்ட் கொடுங்கோலருக்கு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் உதவியளிக்கின்றது குறித்து நாம் வருந்துகிறோம். பினோசெட் ஆட்சிக்குச் சீன பத்து கோடி டாலர் உதவியை வழங்கியுள்ளது. சிறிது காலத்துக்கு முன்னர், ஜுண்டாவுக்கு ஆயுதங்களை விநியோகிக்க சீன முடிவு செய்துள்ளது. இந்த ஆயுதங்கள் நமது தேசபக்தர்களுக் கெதிராகப் பாவிக்கப்படவுள்ளன.''

சீனவுடனை உறவுகள். இந்த விவகாரம் குறித்தும் கட்சியின் 25வது காங்கிரஸ் ஆராய்ந்தது. சோவியத் சீன உறவுகள் குறித்து 24வது காங்கிரஸ் வர்ணித்ததை இச்சந்தர்ப்பத்தில் ஞாபகப்படுத்துவது பொருத்தமே:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இரு நாடுகளினதும் நீண்டகால நலன்களினதும், சோஷலிஸம், மக்களது விடுதலை, வலுவான சமாதானம் ஆகியவற்றின் நலன்களினதும் அடிப்படையில் சோவியத் யூனியனுக்கும் சீன மக்கள் குடியரசுக்குகிடையிலான உறவுகளை அபிவிருத்தி செய்வதில் நமது கட்சியும் சோவியத் அரசாங்கமும் உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளன. அதனால்தான் நாம் ஒவ்வொரு வழியிலும், சோவியத் யூனியனுக்கும் சீன மக்கள் குடியரசுக்குமிடையிலான உறவுகளை சகஜப்படுத்த மட்டுமல்ல, அவற்றிற்கிடையிலான அண்டை அயல் உறவுகளையும் நட்புறவுகளையும் புதுப்பிக்கவும் நாம் தயாராகவுள்ளோம். இறுதியில் இது அடையப்பெறும் என்ற நம்பிக்கையையும் தெரிவிக்கின்றோம்.''

எனினும் இந்த இலக்குகளை அடைவது அசாத்தியமாகவுள்ளது என்பதைக் கவலையுடன் கூற வேண்டியிருக்கிறது. விஸ்தரிப்பு, பேரரசுவாத அபிலாஷைகளை அடிப்படையாகக் கொண்ட தமது கொள்கையைப் பீகிங் தலைவர்கள் தொடர்ந்து பின்பற்றுகிறார்கள். முடிவமைதியை நிராகரிப்பதுடன் மனநிறைவு காணாத மாவோயிஸ்டுகள் அதற்கு எதிராகவும் மூர்க்கமாகப் போராடுகிறார்கள். வளர்முகநாடுகளுக்குக் கட்டளையிடும் நிலையை எடுக்க அவர்கள் கொண்டிருந்த திட்டங்கள் படுதோல்வியடைந்துவிட்டன. சோஷலிஸ முகாமைப் பிளவு படுத்தவும் இளம் ஆசிய—ஆபிரிக்க நாடுகளை சோஷலிஸ நாடுகளுக்கெதிராகத் திருப்பிவிட எடுத்த அவர்களது முயற்சிகளும் தோற்கடிக்கப்பட்டு விட்டன. பிற்போக்குச் சூழ்ச்சிமிக்க கொடிய சக்திகளுடன் மாவோயிஸ்டுகள் வெளிப்படையாகவே சார்ந்து நிற்கிறார்கள்.

ஆசியாவில் அமெரிக்க ராணுவம் நிலை கொண்டிருப்பதற்கு மாவோயிஸ்டுகள் ஊக்கமளிக்கிறார்கள். ஆபிரிக்காவில் அவர்கள் அங்கோலாவின் எதிர்புரட்சியாளர்களுக்கு ஆதரவு தருகிறார்கள். தென்னுபிரிக்கக் குடியரசின் இன வெறியர்களுடன் ஒத்துழைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'1976 - 1980 க்கான சோ. சோ. கு. ஒ. தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கான வழிகாட்டிகள்' எனும் அறிக்கையை சோ. சோ. கு. ஒ. அமைச்சரவைத் தலைவர் அலக்ஸி கொஸிஜின் சமர்ப்பிக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோவியத் யூனியனின் பிரதான விஞ்ஞான கேந்திரங்களுள் ஒன்ருன நொவிஸிபீர்ஸ்க்கிற்கு அருகிலுள்ள விஞ்ஞானப் பேரவை நகர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோவியத் யூனியனிலுள்ள பல அணுமின் நிலையங்களுள் ஒன்றான லெனின்கிராட் அணுமின் நிலைய எந்திர மண்டபம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




உலகின் மிகப் பெரிய நீர்மின் நிலையமான சைபீரிய நதியான ஸெனிஸியிலுள்ள கிரஸ்னயர்ஸ்கயா நிலையம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வொல்கா நதி தீரத்திலுள்ள தொக்ளியாட்டி நகரனில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் ஸிகுலி கார் தொழிலகத்தின் கோர்த்திணைப்புப் பிரிவு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மத்திய ஆசிய குடியரசான உஸ்பெகிஸ்தானில் ஸெரவ்ஷான் நதியின் நீர்ப்பாசனத் திட்டம்.

உயர் உழைப்புக்காக அறுவடை எந்திர சாரதி ஒருவர் கௌரவிக்கப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேற்கு சைபீரியாவிலுள்ள ஸமொட்லர் எண்ணெய் வயல்களிலிருந்து எண்ணெயை எடுத்துச் செல்லும் எண்ணெய்க் குழாய்த் தொடர்களுள் ஒன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோவியத் யூனியனிலேயே மிகப் பெரிய நிர்மாணத் தலமான 3200 கி. மீ. நீள பைகால் - அமுர் றெயில் பாதையில் ரின்டாவில் றெயில் பாதை இணைக்கப் படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாஸ்கோவிலுள்ள உயர் கல்வி நிலையங்களுள் ஒன்றில் விரிவுரை நிகழ்த்தப்படுகிறது. சோவியத் ஒன்றியத்தின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் வந்துள்ள இளைஞர்களும் யுவதிகளும் இங்கு கற்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோவியத் யூனியனில் ஆண்டுதோறும் சராசரி 2,200,000 குடும்பங்கள் புதிய குடியிருப்புகளுக்கு குடியேறுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தூரகிழக்கு கிராமமான யெலியோவோவில் (கம்சட்கா பிராந்தியம்) கின்டர்கார்ட்ன் நீச்சல் தடாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். லத்தினமெரிக்காவில் அவர்கள் பாஸிஸ்ட் பிறேசெட்டுக்கு அதரவு தருகிறார்கள். ஐரோப்பாவில் மேற்கு ஜெர்மனியின் பழிவாங்கும் வேட்கையுடைய ஃப்ரான்ஸ் ஜோஷெஃப் ஸ்ட்ருஷனதும் பிரிட்டனின் வெறிபிடித்த சோவியத் விரோத போக்காளரினதும் கைகளில் புகுந்து விளையாடுகிறார்கள். ஐக்கிய அமெரிக்காவில் ஸியோனிஸ செனெட்டரான எச். ஜக்ஸன் மற்றும் இவரை ஒத்த மனப்பான்மையுடைய காங்கிரஸ் பிரதிநிதிகளை அவர்கள் பாராட்டுகிறார்கள்.

இதன் விளைவாக, சமாதான, முற்போக்குச் சக்திகளுக்கு எதிரான ஏகாதிபத்தியத்தின் போராட்டத்தில் அதன் படைக்கலங்களில் ஒன்றாக மாவோயிஸ்ட் கொள்கை மாறியுள்ளதுடன் சமாதானத்தை நேசிக்கும் மக்கள் அனைவருக்கும் பேரபாயத்தை ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியுடன் சேர்ந்து பல வெளிநாட்டுத் தூது கோஷ்டிகளின் பிரதிநிதிகளும் பேசியது தற்செயல் நிகழ்வல்ல. மாவோயிஸத்தின் ஆபத்தை உணர ஆரம்பித்துள்ள மக்களது தொகை மூன்றும் உலகநாடுகளில் மென்மேலும் அதிகரித்து வருகிறது என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். இது தொடர்பாக இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பீட்டர் கெனமனின் அறிக்கை எடுத்துக் காட்டாயமைந்தது. அவர் கூறினார்:

''மூன்றும் உலகில் மாவோயிஸ்டுகள் வகிக்கும் பாத்திரம் மேலும் அபாயகரமிக்கது என்பதே நமது கட்சியின் கருத்து. 'தலைமை வாதத்தை' எதிர்த்துப் போராடுவதாகக் கோஷிக்கும் அதே வேளையில் மாவோயிஸ்டுகள், தமது தலைமைவாத நோக்கங்களை அந்நாடுகள் மீது திணிக்கவும், தமது பேரரசு குறுகிய இனவாத இலக்குகளை அடையவும் இடையறாது முயற்சி செய்துவருகிறார்கள். இன்று, மாவோயிஸ்டுகள் தமது முகமூடியைக் களைந்துவிட்டுத் தமது உண்மையான முகத்தைகாட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுள்ளார்கள்; மாவோயிஸ்டுகளின் ஆர்ப்பரிப்புகளி ஞல் ஆட்கொள்ளப்பட்ட மூன்றும் உலகின் சில குறிப்பிட்ட வட்டாரங்கள் மயக்கந் தெளிந்து வரு கின்றன. இதற்கு உதாரணமாக மாவோயிஸத்தின் தாக்கத்தினுல் 1960ல் நமது கட்சியிலிருந்து பிரிந்து சென்ற ஒரு சிறு கோஷ்டியைக் குறிப்பிடலாம். இன்று இக்கோஷ்டி மாவோயிஸத்தைப் பகிரங்க மாக கண்டித்துள்ளது; அது தனது ஸ்தாபனங் களைக் கலைத்துவிட்டு நமது கட்சிக்கே திரும்பிவிட் டது.

சீனு சம்பந்தமாக சோவியத் யூனியனின் நிலை தான் என்ன? இதற்கு கட்சியின் 25வது காங்கிரஸ் பதிலளிக்கிறது: மாவோயிஸ சித்தாந்தத்துடன் எவ்வித சமரசத்துக்கும் இடமேயில்லை. இச்சித்தாந் தத்துக்கு எதிரான போராட்டத்தைத் தொடர்ந்து நடத்துவோம். இது கோட்பாடு பூர்வமான சமர சம் செய்ய முடியாத போராட்டமாகும். அதே வேளையில் சீனுவுடனுன உறவுகளில் நாம் சமத்து வம், சுயாதிபத்தியத்தையும் பிரதேச முழுமையை யும் கௌரவிப்பது, ஒருவரின் உள்நாட்டுவிவகாரங் களில் மற்றவர் தலையிடாதிருப்பது ஆகிய கோட் பாடுகளைப் பின்பற்றுவோம். சுருக்கமாகக் கூறுவதா யின் சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டுக்கமைய சீனுவுடனுன உறவுகளை சகஜ நிலைக்குக் கொண்டு வரச் சோவியத் யூனியன் தயாராகவுள்ளது.

அதுமட்டுமல்ல, பீகிங் மார்க்ஸிய—லெனி னியத்தை உண்மையிலேயே அடிப்படையாக் கொண்ட கொள்கைக்குத் திரும்புமாயின், சோஷ லிஸ நாடுகள் சம்பந்தமான தனது குரோதக் கொள்கையை கைதுறக்குமாயின், சோஷலிஸ உல குடன் ஒத்துழைப்பை வலுப்படுத்தும் பாதையை மேற்கொள்ளுமாயின் சோவியத் தரப் பில் உகந்த எதிரொலியைப் பெறும், சோஷலிஸ சர்வதேசியக் கோட்பாடுகளுக்கேற்ப சோவியத் யூனியனுக்கும் சீன மக்கள் குடியரசுக்குமிடையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லுறவுகள் வளர்வதற்கான வாய்ப்புகள் தோன்றும். இது சீனத் தரப்பையே முற்றிலும் பொறுத்துள்ளது.

சோவியத் வெளிவிவகாரக் கொள்கையின் விளைவுகளை ஒட்டுமொத்தமாகப் பார்த்து உலக வளர்ச்சியை ஆராய்ந்த கட்சியின் 25வது காங்கிரஸ், சோவியத் யூனியன் சர்வதேச நிலவரம் முன்னர் எப்போதையும்விட உறுதி பெற்றுள்ளது என்ற முடிவுக்கு வந்தது. சோஷலிஸத்தின் நிலைபாடுகள் இன்று உலகில் வலுவடைந்துள்ளன. தேசிய விமோசனத்தின் வெற்றிகள், சுதந்திரத்தை வென்றெடுத்த நாடுகளுக்குப் புதிய தொடுவானங்களைத் திறந்துவிட்டுள்ளன. ஏகபோக அடக்குமுறைக்கு எதிரான, சுரண்டல் அமைப்பிற்கு எதிரான உழைக்கும் மக்களுடைய வர்க்கப் போராட்டம் பேரெழுச்சி பெற்றுள்ளது. புரட்சிகர-ஜனநாயக, ஏகாதிபத்திய விரோத இயக்கம் உறுதியான வளர்ச்சியைப் பெற்றுவருகிறது. முடிவமைதியானது இரு வேறுபட்ட சமூக அமைப்புகளைக் கொண்ட நாடுகளுக்கிடையில் நிலவும் உறவுகளில் தலையாய போக்காக மாறியுள்ளது.

சோவியத் கம்யூனிஸ்டுகளும் சோவியத் மக்களும் இந்த அபிவிருத்திகளையிட்டு திருப்தி தெரிவிக்கிறார்கள். சமாதானத்துக்கும் முன்னேற்றத்திற்குமான பாதையில் அவர்கள் புதிய வெற்றிகளை எதிர்நோக்குகிறார்கள். வெளிநாட்டுக் கொள்கைத் துறை சம்பந்தமான, 25வது காங்கிரஸ் முடிவுகளையும் தீர்மானங்களையும் கட்சியின் 24வது காங்கிரஸ் முன்வைத்த சமாதான வேலைத் திட்டத்தின் உள்ளார்ந்த வீச்சாகவும் அவர்கள் கருதுகிறார்கள். அவர்கள் சமாதானம், சர்வதேச ஒத்துழைப்புக்கான போராட்டத்தை; மக்களது விடுதலைக்கும் சுதந்திரத்துக்குமான போராட்டத்தை மேலும் முனைப்படுத்துவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் சமுதாய வாழ்வில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி

கம்யூனிஸ்ட் கட்சியை ஏன் மக்கள் உயர்வாகக் கருதுகிறார்கள், நேசிக்கிறார்கள் என்று இதர நாடுகளுக்கு விஜயம் செய்யும் சோவியத் மக்களிடம் அடிக்கடி கேட்கப்படுகிறது.

இதற்கான பதில் மிக எளிதானது; மக்களுக்குச் சேவை செய்வதைக் கட்சி தனது தலையாய பணியாகக் கொண்டிருக்கிறது என்பதே.

கஸாக்ஸ்தானைச் சேர்ந்த உழவுயந்திர ஓட்டியான பெண்மணி கே. பி. தொனெபாயேவா காங்கிரஸில் வருமாறு கூறினார்:

''எனது கதை இதர பல சோவியத் பெண்களுடையதை ஒத்ததே. விதிவிலக்கானதல்ல. ஆனால் சோவியத் ஆட்சி சாதாரண கஸாக் பெண்ணான எனக்கு அளித்தவை குறித்து நான் அளவிட முடியாத மகிழ்ச்சி கொண்டுள்ளேன் என்பதை நான் வெளிப்படையாகவே கூறமுடியும். எனது பாட்டனாரும் முப்பாட்டனாரும் பிறரின் மந்தைகளை மற்றையோரின் நிலங்களில் மேய்த்தனர். அந்த நிலங்களில் அவர்கள் தமது வாழ்நாள் பூராவும் உழைத்தார்கள். ஆனால் அவர்கள் மகிச்சியையோ சுதந்திர பூர்வமான உழைப்பையோ என்றென்றைக்குமே அறிந்தவர்களல்லர். பெண்களுடைய நிலை இன்னும் மோசமாகவிருந்தது. அவர்கள் அடுப்பங்கரையும் வீடுமாக அடைக்கப்பட்டிருந்தனர்.

''அடக்கி வைக்கப்பட்ட மந்தை மேய்ப்பாளனின் பேத்தியாகிய நான் புனருத்தாரணம் செய்யப்பட்ட ஸ்தெப்பி வெளியில் சக்திமிக்க உழவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யந்திரத்தை இயக்குகிறேன் என்ருல், நாட்டின் உயர் அமைப்பான சோ. சோ. கு. ஓ. சுப்ரீம் சோவியத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளேன் என்ருல், எனது மெய்யான உழைப்பு அங்கீகரிக்கப் பட்டு எனக்கு சோஷலிஸ உழைப்பு வீராங்கனைப் பட்டம் அளிக்கப்படமுடியும் என்ருல் இதை யாரால் நம்பமுடியும்? இது ஒவ்வொரு மனிதன் மீதும் அவனது தேசிய இனத்தையோ, அவன் எங்கு வாழ்கிருன் என்பதையோ கருத்தில் கொள் ளாது நமது கட்சி எடுத்த இடையருத கவனிப்பி ைலேயே சாத்தியமானது. சோவியத் பூமியில் வாழும் எம் அனைவருக்கும் ஒரே ஒரு வானமும் ஒரே ஒரு கதிரவனும் தான் உள்ளன.''

உண்மைதான். சோவியத் மக்கள் அனைவருக் கும் ஒரு வானமும் ஒரு கதிரவனுமே உள்ளன. சோவியத் மக்கள் இதற்காக லெனினியக் கட்சிக் கும் அதன் அறிவார்ந்த கொள்கைக்கும், அயராத அக்கறைக்கும் கடமைப்பட்டுள்ளார்கள்.

உழைக்கும் வர்க்கத்தினதும் சோவியத் யூனி யனின் உழைக்கும் மக்கள் சகலரினதும் அரசியல் தலைமைக்கான தனது பாத்திரத்தை மதிப்புடன் பூரணப்படுத்தும் தனது மாற்றவொண்ணுப் பாதை யில் கட்சி தொடர்ந்து செல்லும் என்பதை சோவி யத் கம்யூனிட் கட்சியின் 25வது காங்கிரஸ் மீண் டும் உறுதிப்படுத்தியது.

சோவியத் சமூகத்தினது அரசியல் அமைப் பின் சர்வாம்ச வளர்ச்சியானது, கட்சியினது பணி யில் பிரதான இடத்தை வகிக்கிறது.

சோவியத் யூனியனில் வளர்ச்சி பெற்ற சமு தாயமொன்று நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அது கம்யூனிச சமுதாயமாக படிப்படியாக வளர்ந்து வரு கிறது என்ற நிலையிலிருந்தும் சோவியத் அரசாங் கம் அனைத்து மக்களின் நலன்களையும் சித்தத்தை யும் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசாங்கம் என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலையிலிருந்தும் கட்சி தனது பணிகளைத் தொடங்கியுள்ளது. புதியதொரு வரலாற்று ரீதியான சமூகமாக சோவியத் மக்கள் சோவியத் யூனியனில் தோற்றமெடுத்துள்ளார்கள். இந்த சமூகம் தொழிலாள வர்க்கம் பிரதான பாத்திரத்தைக் கொண்டுள்ள தொழிலாள வர்க்கத்தினதும் விவசாயிகளினதும் அறிவு ஜீவிகளினதும் தகர்க்கவொண்ணு கூட்டணி மீதும், நாட்டின் சகல தேசங்களினதும் தேசிய இனங்களினதும் நட்புறவின் மீதும் நிறுவப்பட்டுள்ளது, அரசாங்க, சமூக ஸ்தாபனங்களது நடவடிக்கைகளை எல்லா வழிகளிலும் உயர்த்த, அவற்றின் முனைப்புகளுக்கு ஊக்கமளிக்கக் கட்சி முனைந்துள்ளது.

ராஜ்ய வளர்ச்சித்துறையில் உழைக்கும் மக்கள் பிரதிநிதிகளது சோவியத்துக்களின் பணிக்கு கட்சி விசேஷ கவனம் செலுத்துகிறது. சிலகாலத்துக்கு முன்னர் கிராம, மாவட்ட, நகர சோவியத்துக்களின் உரிமைகள் விஸ்தரிக்கப்பட்டன; அவற்றின் பொருளாயத ஆற்றல்கள் அதிகரிக்கப்பட்டன.

தொழிற்சங்கங்களது பணியை விருத்தி செய்வதில் கட்சி அதிக அக்கறை செலுத்துகிறது. 10.7 கோடிக்கும் அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட சோவியத் தொழிற்சங்கங்களின் பணி உழைப்பாளி மக்களின் உரிமைகளையும் நலன்களையும் பாதுகாப்பதும் உற்பத்தியைப் பெருக்குவதில் கரிசனை காட்டுவதுமேயாகும்.

கொம்சமோல்—இளம் கம்யூனிஸ்ட் லீக்கில் 350 லட்சம் உறுப்பினர்கள் உள்ளனர். கட்சி எந்தக் கடமைகளை முன்வைத்தாலும் அவர்கள் அவற்றை நிறைவேற்றுகிறார்கள்.

இவ்வாறுதான் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மக்களை உண்மையாகவே பிரதிநிதித்துவப்படுத்துகிறது என்பது, அதன் கூட்டமைப்புக்களால் மெய்ப்பிக்கப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல் கட்சியின் அங்கத்தவர் தொகை 15,694,000 ஆகும். கடந்த ஐந்தாண்டு காலத்தில் இது 26 லட்சத்தால் உயர்ந்துள்ளது. அங்கத்தவர்களில் 41.6 சதவீதமானோர் கூட்டுப்பண்ணை விவசாயிகள். ஏறத்தாழ 20 சதவீதமானோர் தொழில்நுட்பத் துறை ஊழியர்களாகவும் 24 சதவீதத்துக்கு மேற்பட்டோர் விஞ்ஞான இலக்கிய, கலை, பொது சுகாதார, இராணுவத் துறைகளைச் சார்ந்த ஊழியர்களாகவுமுள்ளனர்.

வளர்ச்சியடைந்த சோஷலிஸத்தின் கீழ் கம்யூனிஸ்ட் கட்சியானது அனைத்து மக்களின் கட்சியாக மாறிவரும் அதே வேளையில் அது தனது வர்க்க இயல்பினை இழந்துவிடவில்லை. கட்சியில் சேருபவர்களில் 60சதவீதமானோர் தொழிலாளர்களாக உள்ளனர். இது சோவியத் சமூக வாழ்வில் உழைக்கும் வர்க்கத்தின் தலையாய பாத்திரத்தைப் பிரதிபலிக்கிறது. கட்சியில் சேரும் கூட்டுப்பண்ணை விவசாயிகளின் தொகையும் அதிகரித்துள்ளது. இது சோவியத் யூனியனில் தொழிலாளர்-விவசாய கூட்டணியை மேலும் பலப்படுத்த உதவுகிறது. இன்று அறிவுஜீவிகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு மூன்று பொறியியலாளர்களில் ஒருவரும், ஒவ்வொரு நாலு ஆசிரியர்களில் ஒருவரும், ஒவ்வொரு ஐந்து மருத்துவர்களில் ஒருவரும் கம்யூனிஸ்டாக இருக்கின்றனர்.

புதிய கட்சி உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் அல்லது இரண்டில் மூன்று பங்கிற்குமதிகமானோர் இளம் கம்யூனிஸ்ட் லீக்கிலிருந்து வருகின்றனர். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியில் மென்மேலும் இளைஞர்கள் சேருவதானது கட்சியின் ஜீவாதார சக்திகள் வற்றுதலை என்பதையும் எமது இளம் தலைமுறை கம்யூனிஸ இலட்சியங்கள் பால் பெரும் கடமைப்பாட்டினைக் கொண்டுள்ளனர் என்பதையும் காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி அங்கத்தவர்களது தொகை நிச்சயம் தொடர்ந்து அதிகரிக்கும். ஆயினும் தனது அங்கத்தவர்களை விஸ்தரிக்கக் கட்சி ஒருபோதும் நிர்ப்பந்திப்பதில்லை. லெனின் கூறியதுபோன்று தாம் கட்சியில் சேருவது சில ஆதாயங்களைப் பெறுவதற்கல்ல, கம்யூனிஸத்துக்காகத் தன்னலமின்றிப் பாடுபடுவதற்கே என்பதை நடைமுறையில் நிரூபிப்பவர்களே கட்சியில் சேர அனுமதிக்கப்படுகிறார்கள். கம்யூனிஸ்ட் என்ற உன்னத நாமத்தைக் கொண்டிருப்பதற்குத் தகுதியில்லாதவர் எவரும் தனது அங்கத்தவர்களாக இருக்கக் கூடாது என்பதில் கட்சி கண்டிப்பாகவுள்ளது.

கட்சி வாழ்க்கையின் அடிப்படைக் கோட்பாடு ஜனநாயக மத்தியத்துவமாகும், இது பெரும்பான்மைக்குச் சிறுபான்மையினர் கீழ்ப்படிவதையும் உயர் கட்சி அமைப்புக்குக் கீழ் கட்சி அமைப்புக்கள் கீழ்ப்படிவதையும் அவசியமாக்குகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட கம்யூனிஸ்டுகளிடம் கட்சி மிக உயர்ந்த பணிகளைச் சுமத்துகிறது. அது லெனினிய பாணி சகல சமூக நிகழ்வுப் போக்குகளையும் சிருஷ்டி ரீதியாகவும் விஞ்ஞான ரீதியாகவும் அணுகுகிறது; தன்வயமான போக்குகளைத் தவிர்த்துக் கொள்கிறது. தன்னையும் மற்றவர்களையும் பொறுத்தமட்டில் உயர்ந்த அளவான கடும் உழைப்பென்று அர்த்தப்படுத்துகிறது; சுய—திருப்தியை நிராகரிக்கிறது. சிவப்பு நாடா, சம்பிரதாய சடங்குகளின் சகல வெளிப்பாடுகளையும் எதிர்க்கிறது.

"ஒரு நவீன தலைவன் தனக்குள்ளே கட்சி அணுகுதலையும் நன்கு நிலைபெற்ற தகைமையையும் உயர்ந்த கட்டுப்பாட்டுணர்வையும் முன் முயற்சியையும் இணைத்து தனது உழைப்பில் ஓர் ஆக்கபூர்வமான அணுகுதலைக் கொண்டிருப்பான். அதே நேரத்தில் தலைவன், ஒவ்வொரு பிரிவிலும் சமூக—அரசியல், கல்வி அம்சங்களைக் கணக்கிலெடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும்; மக்களது தேவைகளையும் கோரிக்கைகளையும் கூர்மையாக உணர்ந்திருக்க வேண்டும். கட்சிக்கு முன்னால் சகல கம்யூனிஸ்டுகளும் சமமானவர்களே. அவர்கள் தோழமை மிக்க கருத்துப் பரிவர்த்தனைக்கான சுதந்திரமான நிலைபாடுகளில் கட்சிக் கொள்கையின் அடிப்படைப் பிரச்சினைகளை விவாதித்து முடிவெடுக்கிறார்கள். இது கருத்து ஒருமைப்பாட்டை உருவாக்குகிறது. நடைமுறை ஐக்கியத்திற்கு உத்தரவாதமுமாக அமைகிறது.

சக கம்யூனிஸ்டுகளது அபிப்பிராயத்தையும் முனைப்புக்களையும் அலட்சியம் செய்யும் தலைவர்களைக் கட்சி கடுமையாக விமர்சனம் செய்தும் தண்டித்தும் விடுகிறது.

கட்சியின் வாழ்வில் கூட்டுத்தலைமை என்பது ஒரு பிரதானமான கோட்பாடாகும். தமக்கு மத்தியிலுள்ளவர்களுள் மிகவும் தகுதிவாய்ந்தவர்கள் ஊக்கமுள்ளவர்கள், அனுபவமிக்கவர்கள் ஆகியோரையே கம்யூனிஸ்டுகள் கட்சியின் தலைமை அமைப்புகளுக்கு அனுப்புகிறார்கள், தேர்தல்கள் ரகசிய வாக்கெடுப்பின் மூலம் நடைபெறுவதில்லை. கட்சியின் தலையாய பதவிகள் எவருக்குமே நிரந்தர அடிப்படைகளில் ஒதுக்கப்படுவதில்லை. "வேண்டும்; உழைப்பிலும் அன்றாட வாழ்விலும் முன்னுதாரமாகத் திகழ வேண்டும்" என்று சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸில் வெளியிட்ட தமதறிக்கையில் லியோனிட் பிரெஷ்னேவ் தெரிவித்தார்.

கட்சி அங்கத்துவத்தைப் பேணுவதும், கட்சி என்ன செய்கிறது என்பது அனைத்து மக்களுக்கும் அறிவிக்கப்படுவதும் கட்சி வாழ்வில் ஒரு விதியாகும். "மக்களிடமிருந்து மறைக்கப்பட வேண்டிய ரகசியங்கள் எதுவும் கட்சியிடமில்லை" என்று கூறினார் லியோனிட் பிரெஷ்னேவ்." தனது திட்டங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள், இதர நடவடிக்கைகள் ஆகியன குறித்து அனைத்து சோவியத் மக்களுக்குத் தகவல் செய்வதிலும் அவை குறித்துத் தெரிவிப்பதிலும் கட்சி பிரதான ஆர்வம் கொண்டுள்ளது.

கட்சிக் காங்கிரஸின் தஸ்தாவேஜுகளும் முடிவுகளும் பத்திரிகைகளில் பரவலாகப் பிரசுரிக்கப்பட்டன. காங்கிரஸ்களுக்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெறும் மத்திய கமிட்டியின் முழுநிறைவான கூட்டங்களின் (ஆண்டுக்கு இருதடவை) முடிவுகளும் கூட மக்களுக்கு அறிவிக்கப்படுகின்றன. ஸ்தல தொடக்க நிலை ஸ்தாபனங்களைப் பொறுத்தவரை, அவற்றின் ஒவ்வொரு கூட்டத்திலும் அவற்றின் கட்சிக் கமிட்டியோ அல்லது குழுவோ முன்னைய கூட்டத்தின் முடிவுகளில் ஏற்படுத்தப்பட்டுவரும் முன்னேற்றம் பற்றி அறிக்கை வெளியிடும்.

ஜனநாயகத்தைக் கடைப்பிடிப்பதிலும் அதை மேம்படுத்துவதிலும் கட்சியானது தன்னை உதாரணமாகக் கொண்டு சோவியத் ஜனநாயகம் முழுமையையும் ஜனநாயகப் படுத்துகிறது.

சோவியத் கம்யூனிஸ்டுகளது கட்சியானது ஒரு சுய—ஆட்சி ஸ்தாபனமாகும். ஏறத்தாழ 40 லட்சம் பேர் அல்லது ஒவ்வொரு நாலு கம்யூனிஸ்டுகளில் ஒருவர் கட்சியின் தலையாய அமைப்புகளின் எல்லா மட்டங்களிலும்—கட்சி குழுத் தலைவர்களிலிருந்து சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிவரை—பணியாற்றுகிறார்கள்.

கட்சியின் நிதி, காங்கிரஸில் மத்திய கணக்காய்வுக் கமிஷன் அறிவித்ததுபோல் அங்கத்தவர் சந்தா மூலம் (இது மூன்றில் இரண்டு பங்கு) கட்சியின் பிரசுர நிலையங்களின் லாபங்களின் கழிவுகளிலிருந்தும் பெறப்படுகிறது.

25வது காங்கிரசானது 428 உறுப்பினர்களையும் மாற்றுறுப்பினர்களையும் கொண்ட மத்திய




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாஸ்கோ கிரெம்ளின் காங்கிரஸ்கள் மாளிகை. சோ. க. க. வின் 25 வது காங்கிரஸ் 1976 பெப்ரவரி 24 ஆம் திகதி இதில்தான் ஆரம்பமாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சோ. க. க. வின் 25 வது காங்கிரஸ் இந்த மண்டபத்திலேயே நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மேடையில் சோ. க. க. மத்தியக் கமிட்டியின்
பொதுச் செயலாளர் லியோனிட் பிரெஷ்னேவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோ. க. க. மத்தியக் கமிட்டியின் அறிக்கையை காங்கிரஸ் பிரதிநிதிகள் ஏகமனதான ஆதரவைத் தெரிவிக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காங்கிரஸ் தலைமைக்குழு உறுப்பினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காங்கிரஸ் பிரதிநிதிகளுடன் போலிஷ் ஐக்கிய தொழிலாளர் கட்சி மத்தியக் கமிட்டியின் முதலாவது செயலாளர் எட்வர்ட் கியரெக்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காங்கிரஸ் பிரதிநிதிகள், அதிதிகளுடன் பல்கேரிய கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் முதலாவது செயலாளர் ரொடோர் ஷிவ்கோவ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காங்கிரஸ் பிரதிநிதிகள், அதிதிகளுடன் அங்கோலா மக்கள் விடுதலை இயக்க (எம்பிஎல்ஏ) அரசியல் குழு உறுப்பினரும் அங்கோலா மக்கள் குடியரசு பொது நிர்வாக அமைச்சருமான அல்விஸ் பெர்ணர் டோ பப்டிஸ்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரு தடவைகள் சோஷலிஸ உழைப்பு வீரர் விருது பெற்ற காங்கிரஸ் பிரதிநிதி ரெறன்டி மல்ட்ஸேவ் ஸகாலின் பிராந்திய தொழிலாளர்களின் உழைப்பு அறிக்கையை பார்வையிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சோ. க. க. வின் 25 வது காங்கிரஸில் சோவியத் யூனியனின் வீரரும், சோவியத் மாதர் கமிட்டித் தலைவியும், விண் கலச் சாரதியுமான வலன்டீனா நிக்கலயேவா - தெரஷ்கோவா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காங்கிரஸ் இடைவேளையின்போது தாஷ்கந்த் பிராந்திய பிரதிநிதிகளுடன் இரு தடவைகள் சோவியத் யூனியன் வீரர் பட்டம் பெற்றவரும், விண் கலச் சாரதியுமான பியோட்ர் கிளிமுக் சம்பாஷிக்கிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இடைவேளையின் போது காங்கிரஸ் பிரதிநிதிகளும் அதிதிகளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காங்கிரசில் இளம் பிரதிநிதிகளுடன் பழம்பெரும் கட்சி உறுப்பினரான (1915 லிருந்து) வஸிலி வி[illegible] கரடோவ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமிட்டியையும் 84 உறுப்பினர்களைக் கொண்ட கணக்காய்வுக் கமிஷனையும் தெரிவு செய்தது. காங்கிரஸின் கடைசி நாளன்று மத்திய கமிட்டி ஒரு முழுநிறைவான கூட்டத்தைக் கூட்டியது. இது 16 உறுப்பினர்களையும் 6 மாற்றுறுப்பினர்களையும் கொண்ட மத்திய கமிட்டி அரசியல் குழுவையும் 112 உறுப்பினர்களைக் கொண்ட மத்திய கமிட்டிச் செயலவையையும் தெரிவு செய்தது.

லியோனிட் இலியச் பிரெஷ்னேவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டார்.

லியோனிட் பிரெஷ்னேவ் கடந்த பன்னிரண்டு வடருங்களாக சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டிக்குத் தலைமைதாங்கி வருகிறார். அவர் கட்சியிலும் மக்கள் மத்தியிலும் பெரும் மதிப்பையும் அபிமானத்தையும் பெற்றுள்ளார். அவர் வெளிநாடுகளிலும்கூட சமாதானம், நாடுகளிடையே சமாதானபூர்வமிக்க ஒத்துழைப்புகளின் தலைசிறந்த போராளியாகவும் பிரபல்யம் பெற்றுள்ளார்.

நடைமுறை விவகாரங்களில் தமக்குள்ள பெரும் தகுதி, தமது பரந்த ஆற்றல், தெளிவான சிந்தனை, மனிதநேயம், வர்க்க அணுகுமுறை, கோட்பாட்டின்பால் விஸ்வாசம், அதை பின்பற்றுதல் என்பவற்றினல் லியோனிட் பிரெஷ்னேவ் ஒரு தலைவராகச் சிறப்படைந்துள்ளார். ஜோர்ஜிய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் முதலாவது செயலாளர் எட்வார்ட் ஷிவார்த்நாட்ஸி 25வது காங்கிரஸில் குறிப்பிட்டது போன்று'' லியோனிட் இல்லியச்சின் அற்புதமான குணவியல்புகளில் ஒன்று அவர் தம்மை ஒரு மகா மனிதனுக்குரிய போர்வையால் மூடிக் கொள்ளாதிருப்பதும், மற்றைய அனைவருக்காகவும் தாமே சிந்திப்பவராகவும் உழைப்பவராகவும் இல்லாதிருப்பதுமே. ஆனல் அதேவேளையில் பொது லட்சியத்தின்பால் மிகப் பெரிய தனிப்பட்ட பங்களிப்பைச் செய்வதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் அனைவரும் ஆக்கபூர்வமாகச் சிந்திக்கக்கூடிய நிலைபாடுகளை உருவாக்குகிறார்; கட்சியின் உயிர்மையான உயர்கல்வியறிவுடைய மக்களையும் வாழ்க்கை அனுபவத்தால் விவேகம் பெற்றவர்களையும் உண்மையான லெனினிஸ்டுகளையும் ஐக்கியப்படுத்தவும் வழிநடத்தவும் கூடிய ஆற்றலைக் கைவரப் பெற்றவர்; அரசியல் ஆய்வறிவுப் பெறுமதிகளை உருவாக்குவதில் மக்களின் கருத்துக்களை ஒருமைப் படுத்துவதில் பாண்டித்தியம் பெற்றவர்: விஞ்ஞானத்தினதும் நடைமுறையினதும் மிக உயர்ந்த அளவு கோல்களைக் கொண்டு அவற்றை மதிப்பீடு செய்யும் தன்மையுடையவர். இந்தப் பெறுமதிகளைக் கொண்டு கட்சியையும் மக்களையும் செழுமைப்படுத்தும் திறமையுடையவர்.''

### லெனினிய பாதையைப் பின்பற்றுதல்

மகத்தானதை தூரத்திலிருந்து பார்ப்பது நன்று என்று கூறுவார்கள். அது உண்மைதான். 25வது காங்கிரஸை, அதன் சமகால நிகழ்வுகளுடனான தொடர்களில் மட்டுமல்ல, காலத்தின் திமிர்த்த கட்டுக்கோப்புக்குள் அடங்காத பரந்த தோற்றத்திலும் வரப்போகும் தலைமுறையினர் காண்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அதன் தனிச்சிறப்பை அவர்கள் எம்மைக் காட்டிலும் வரவேற்பார்கள். ஆனால் சமகாலத்தவரான நாம் கூட, 1976 பெப்ரவரி 24 முதல் மார்ச் 5 வரை மாஸ்கோவில் இடம் பெற்ற நிகழ்வின் தனிச் சிறப்பை நன்கறிவோம். நாம் என்பது சோவியத் யூனியனை மட்டுமல்ல, முழு உலகத்தையுமே அர்த்தப்படுத்துகிறது.

சோவியத் யூனியனுக்கு, கட்சியின் 25வது காங்கிரஸானது கம்யூனிஸத்தை நோக்கிய பாதையில் ஒரு பிரதான மைல் கல்லாகும். கடந்த ஐந்தாண்டு காலத்தின் விளைவுகள், சாதிக்கப்பட்டுள்ளவற்றின் மகத்துவம், சோவியத் மக்களுக்கு முன்னால் திறந்துவிடப்பட்டுள்ள பரந்த, ஒளிமயமான வாய்ப்புகள் இவையாவும் சோவியத் கம்யூனிஸ்ட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சி லெனினிய பாதையை நம்பிக்கையுடன் பின்பற்றுகிறது என்பதை மெய்ப்பிக்கின்றன. அது உழைக்கும் வர்க்கத்தினதும் உழைக்கும் மக்கள் சகலரினதும, சோவியத் மக்கள் அனைவரினதும் அரசியல் தலைவன் என்ற பாத்திரத்தை மதிப்புடன் முழுமையாக்கியுள்ளது. கட்சி, விஞ்ஞான வழிப்பட்ட திட்சண்யத்தையும் அதன் அரசியல் எதார்த்தத்தையும் வெகுஜனங்களை ஐக்கியப்படுத்தவும் அகத்தூண்டுதலளிக்கவும் கூடியதான ஆற்றலையும் துலாம்பரப்படுத்தியுள்ளது. அது மார்க்ஸிய—லெனினிய, பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் புரட்சிப் பாதையை உயர்த்திப்பிடிக்கின்றது. தனது வரலாற்றுப் பணியை மதிப்புடன் நிறைவேற்றுகிறது.

சோவியத் யூனியனின் சர்வாம்ச வளர்ச்சி, அதன் நிலைபாடுகளின் உறுதிப்பாடு, சர்வதேச அரங்கில் அது பெற்றுள்ள செல்வாக்கு இவையாவும் லெனினியத்தின் புதிய வெற்றிகளாகும். இவையாவற்றிற்கும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆற்றல்மிக்க தலைமைப்பீடமான மத்திய கமிட்டியினாலும் மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் லியோனிட் பிரெஷ்னேவின் தலைமையிலான அதன் அரசியல் குழுவினாலும், இவற்றின் சக்திமிக்க நோக்கபூர்வமான நடவடிக்கைகளினாலும் கூட்டாக மலர்விக்கப்பட்ட கொள்கையை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வெற்றிகரமாகப் பின்பற்றியமையினாலும் தலைசிறந்த பங்காற்றப்பட்டுள்ளது.

லெனினிய பாணியிலான, சிருஷ்டி ரீதியான உழைப்பு கட்சியில் இன்னமும் மேலோங்கியுள்ளது என்பதை 25வது காங்கிரஸ் மீண்டும் காட்டியுள்ளது. காங்கிரஸில் உரை நிகழ்த்தியவர்களில் சகல சோவியத் குடியரசுகளையும் சேர்ந்த பிரதிநிதிகளும் அடங்குவர். இவர்களில் கட்சித் தலைவர்கள், அரசாங்கப்பணித்துறையைச் சார்ந்தவர்கள்; தொழிலாளர்கள், கூட்டுப்பண்ணை விவசாயிகள், விஞ்ஞானிகள், எழுத்தாளர்கள், கலைஞர்கள் ஆகியோர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தனர். விவாதங்கள் காரியார்த்தபூர்வமிக்கவையாக கோட்பாடு ரீதியானவையாக அமைந்தன. ஒரு மனப்பட்ட தன்மை, இனிய நம்பிக்கை, தோழமை ஆகிய உணர்வுகளின் சூழலானது கட்சியினுலும் மக்களினுலும் மேற்கொள்ளப்படும் மகத்தான பணியின் வெற்றியில் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை, புதிய திட்டங்கள் எதார்த்தபூர்வமானவை என்ற தீர்க்கமான முடிவு கட்சியினதும் முழு நாட்டினதும் லட்சியங்களையும் கடமைகளையும் கூட்டான விவேகத்துடன் வகுக்கிறது. இந்த லட்சியங்கள் அடையப்பெறும் இந்தக் கடமைகள் நிறைவேற்றப்படும் என்ற தெளிவான சித்தம் ஆகியவற்றைச் சுட்டிக் காட்டியது.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸானது கம்யூனிஸத்தின் வரலாற்றில் புதியதொரு குறிப்பிடத்தக்க அத்தியாயத்தைத் திறந்துள்ளது. இது திட்டவட்டமாக உயிர்ப்பூட்டும் செயல்முறை வேலைத்திட்டமொன்றைக் கட்சிக்கும் மக்களனைவருக்கும் அளித்துள்ளது. அவர்கள் இதை முழுமையாக அங்கீகரித்துள்ளார்கள்.

மக்களது வாழ்க்கைத் தரத்தையும் கலாசார மட்டத்தையும் சீராக உயர்த்துவதென்பது கட்சியின் பொருளாதார உபாயத்தில் பிரதான நோக்கமாக என்றும் இருந்து வருகிறது என்பதை காங்கிரஸ் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. இது சமூக உற்பத்தியின் ஆற்றலும் சமநிலையுமிக்க வளர்ச்சி, அதன் ஆற்றலை மேம்படுத்தல். விஞ்ஞான தொழில் நுட்ப முன்னேற்றத்தை விரைவுபடுத்தல், உழைப்பு உற்பத்தியின் உயர்வு, சகல மட்டங்களிலும் உழைப்பின் தரத்தை மிகவும் உகந்த வகையில் அபிவிருத்தி செய்தல் ஆகிய அடிப்படையில் சாதிக்கப்படும்.

கட்சி திட்டமிடும் சகல பணிகளும், உழைக்கும் மனிதனின் நல்வாழ்வின் மீது அது கொண்டுள்ள அக்கறையினுல் நிர்ணயிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10வது ஐந்தாண்டுத் திட்டத்தின் சமூக வேலைத் திட்டத்தினுல் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. முன்னர் குறிப்பிடப்பட்டதுபோல் புதிய திட்டத்தில் தொழிற்சாலை, காரியாலய ஊழியர்களது சம்பளங்கள், கூட்டுப்பண்ணை விவசாயிகளது ஊதியம், சமூகப் பயனீட்டு நிதியின் சேவைகளும் ஆதாயங்களும் அதிகரிக்கும் பரந்த அளவிலான விடமைப்பு நிர்மாணம் தொடர்ந்து நடைபெறும். உழைக்கும் நிலையில், சுகாதாரப் பாதுகாப்பில் குறிப்பிடத்தக்க விருத்தி காணப்படும். சோவியத் மக்களது கல்வி பொது கலாசார மட்டம் உயரும். மனிதன் மீதான இடையருத அக்கறை சோவியத் அமைப்பின் மனித நேயத்துக்குச் சான்று கூறுகிறது.

ஒப்பிட்டுப் பார்க்குங்கால் இந்த அமைப்பு இளமையானதே. அடுத்த ஆண்டு இந்த அமைப்பின் அறுபதாவது ஆண்டாகும். இது சோவியத் யூனியனின் சராசரி மனித ஜீவிய காலத்திலும் குறைவானது. ஆனுல் அக்காலகட்டத்தில் பல நூற்ருண்டுகளுக்குச் சமமான பாதையில் நாம் பயணம் செய்துள்ளோம்.

சோவியத் யூனியனில் ஒரு புதிய சமூகம்— நெருக்கடியற்ற படிப்படியாக வளரும் பொருளாதாரத்தைக் கொண்ட பரஸ்பர சமூக உறவுகளையும் மெய்யான சுதந்திரத்தையும் கொண்ட ஒரு சமூகம்— நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

சோவியத் யூனியனில் ஒரு புதிய, சோவியத் முறையிலான வாழ்க்கை தோற்றம் பெற்றுள்ளது. அது கூட்டமைப்புச் சூழல், தோழமை, சகல தேசங்களினதும் தேசிய இனங்களினதும் ஒருமைப்பாடும் நட்புறவும், தார்மீக ஆரோக்கியம் என்பவற்றினுல் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸில் லியோனிட் பிரெஷ்னேவ் கூறியது போன்று ''கடந்த 60 ஆண்டுகளின் மிக முக்கியமான பயனுக சோவியத் மனிதன் இருக்கிறுன். அவன் தனது சுதந்திரத்தை வென்றெடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதைப் பெரும் கஷ்டமான போர்களில் தற்காத்துக் கொண்ட மனிதனுனவன், அவன் தன்னுடைய சக்தியைத் தங்குதடையின்றிப் பிரயோகித்து தியாகங்கள் சகலதையும் செய்து எதிர்காலத்தைக் கட்டியெழுப்பிய மனிதனுனவன், எல்லா சோதனைகளுக்குமூடாகச் சென்று சித்தாந்த நம்பிக்கையையும் பிரமாண்டமான ஜீவசக்தியையும், கலாசாரத்தையும் அறிவையும் அவற்றை உபயோகிக்கக் கூடிய ஆற்றலையும் இணைத்த, இனங்கண்டுகொள்ள முடியாத மனிதனிவன். அவன் ஆர்வமிக்க தேசபக்தனுக இருக்கிற அதேபோதில் உறுதியான சர்வதேசவாதியாகவும் எப்போதும் இருந்து வருகிறான்.

பூமியில் சமாதானத்தைப் பாதுகாக்கவும் அதைப் பலப்படுத்தவும் புதிய அழிவு யுத்தங்களிலிருந்து மனித குலத்தை விலக்கவும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25வது காங்கிரஸ் மீண்டும் உறுதிப்படுத்தியது. சர்வதேச ஒத்துழைப்புக்கான மேலும் பணிகள் குறித்த வேலைத்திட்டம் விளப்பத்துடனும் நம்பிக்கையுடனும் உலகின் சமாதான முற்போக்குச் சக்திகளினுல் வரவேற்கப்பட்டுள்ளது.

உலக அரங்கில் சோஷலிஸத்தின் நிலைபாடுகளை வலுப்படுத்துவதற்குத் தன்னுல் முடிந்ததனைத்தையும்சோவியத்யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சி செய்யும் என்பதை நல்லெண்ணம் படைத்த மக்கள் காணத் தவறமாட்டார்கள். அது சகோதர கட்சிகளுடன் தனது தொடர்புகளை விஸ்தரித்துக் கொள்கிறது. சர்வதேச கம்யூனிஸ இயக்கத்துடனுன ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் உறுதியுடன் உயர்த்திப் பிடிக்கிறது. சோவியத் கம்யூனிஸ்டுகளும் சகல சோவியத் மக்களும் தமது வர்க்க சகோதரர்களுடன், மக்களது விடுதலைக்கும், ஜனநாயகம், சமூக முன்னேற்றத்திற்குமான போராட்டத்துடனும் உறுதியான நடவடிக்கைகளைக் கொண்ட தமது ஒருமைப்பாட்டுடன் பின்பலமாக நிற்கிறுர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இதுதான் நமது கொள்கை, இதிலிருந்து நாம் விலகமாட்டோம்'' என்று லியோனிட் பிரெஷ்னேவ் காங்கிரஸில் பிரகடனப்படுத்தினார்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் லெனினிய சர்வதேசக் கொள்கையானது சகல மக்களின் நலன்களுக்கும் சேவை புரிகிறது. இக் கொள்கை மகத்தான எதிர்காலத்தைக் கொண்டுள்ளது.

கட்சியின் 95வது காங்கிரஸின் பணியும் அதன் சகல தீர்மானங்களும் கட்சியினதும் மக்களினதும் வைரம்பாய்ந்த ஐக்கியத்தை வெளிப்படுத்தின. கட்சி வகுத்தளித்த வரலாற்றுத் திட்டங்களை முழுமைப்படுத்த சோவியத் மக்கள் உயிர்ப்பாற்றலுடன் உழைக்கிறார்கள். இத் திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்படும் என்பதில் சந்தேகமில்லை. இது உலகின் முதலாவது கம்யூனிஸ சமுதாயத்தின் நிர்மாண வரலாற்றில் ஒரு புதிய குறிப்பிடத்தக்க பக்கத்தை இணைக்கும் என்பதை அர்த்தப் படுத்துகிறது. இது சோஷலிஸத்தின் எல்லையற்ற வாய்ப்புகளின், முதலாளித்துவத்தின் மீதான வரலாற்று வெற்றியின் புதிய நிருபணம் ஒன்று உலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை அர்த்தப்படுத்துகிறது.

சோவியத் யூனியனின் கம்யூனிஸ்ட் கட்சியினது ஒவ்வொரு காங்கிரஸும் கட்சியினதும் முழு நாட்டினதும் வரலாற்றில் ஒரு மைல்கல்லாக அமைகிறது. இதற்கு 25வது காங்கிரஸ் ஒன்றும் விதிவிலக்கல்ல. குறிப்பிடத்தக்க சாதனைகளைப் பதித்துக் கொண்டுள்ள அது, எதார்த்த ரீதியும் காரியார்த்த பூர்வ ஆற்றலும், கம்யூனிஸ நிர்மாணத்தின் மகத்தான பாதையினதும் பூமியில் நிரந்தர சமாதானத்தை ஸ்தாபிப்பதற்கான போராட்டத்தினதும் புதிய வெற்றிகள் மீதான உறுதியான நம்பிக்கையும் கொண்ட சூழலில் நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org